விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 11 சனிக்கிழமை (27.09.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 282



1987-ம் ஆண்டு ஈழத்தமிழர் விடுதலைக்காக 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 12 நாட்கள் உண்ணாவிரதமிருந்து வீரச்சாவடைந்த தியாக தீபம் திலீபனின் நினைவுநாளான நேற்று யாழ்.பல்கலைக்கழக புதிய கட்டிடத் தொகுதியில் மாணவர்களினால் ஒழுங்குபடுத்தப்பட்டு நினைவு கூரப்பட்டுள்ளது. அத்தோடு பல்கலைக்கழகக் கட்டடத் தொகுதிகளில் திலீபனின் நினைவுப் படங்கள் ஒட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாதுகாப்புக்காக அதிக நிதி ஒதுக்கீடு

## கல்விக்கு 4 ஆயிரத்து 760 கோடி

(கொழும்பு)

இலங்கையின் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்புக்காக அதிக தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்ட முன்கூட்டிய ஒதுக்கீட்டு சட்ட மூல உரையின் போது இந்த விடயம் வெளியிடப்பட்டது.

19 ஆம் பக்கம் பார்க்க....

## வாய்மொழி மூல அறிக்கையை நிராகரித்தது இலங்கை அரசு

(ஜெனிவா)

இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளரால் அளிக்கப்பட்ட வாய்மொழி அறிக்கையை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

அத்துடன், இலங்கை தொடர்பாக ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழு காட்டும் விசேட கவனம் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதாக இலங்கை அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் இளவரசர் சயிட் அல்ஹுசைன இலங்கையின் மனிதவுரிமை நிலைமை தொடர்பில் சமர்ப்பித்த வாய்மொழி அறிக்கை குறித்த விவாதம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஜெனிவாவில் இடம்பெற்றது.

இலங்கையில் சிவில் அமைப்புகள் மற்றும் மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் மீது அரசாங்க சார்பு அமைப்புகளால் விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் குறித்து தான் அதிர்ச்சியடைந்துள்ளதாக ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் ஏற்கெனவே தெரிவித்திருந்தார்.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழு கோரியது போல ஒரு சர்வதேச விசாரணை இடம்பெறுவதை சிக்கலாக்கும் நோக்குடனான அச்ச

19 ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்த-மோடி சந்திப்பது இந்தியாவுக்கு அவமானம்!

### ராமதாஸ் காட்டம்

(சென்னை)

ஐக்கிய நாடுகள் பொது அவையின் 69-வது கூட்டத்தில் பங்கேற்பதற்காக அமெரிக்கா செல்லும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை சந்திப்பதை தவிர்க்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் ராமதாஸ் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவில் 100 மணி நேரம் மட்டுமே தங்கியிருக்கும் பிரதமர் 50 நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் வகையில் அவரது பயணத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளன.

அவரை சந்திக்க பல நாடுகளின தலைவர்களும் விருப்பம் தெரிவித்திருப்பதாகவும் இந்திய மத்திய

20 ஆம் பக்கம் பார்க்க....

## தேசியத் தலைவர் கோத்தபாய பொது பல சேனா பிரகடனம்?

சிங்கள பௌத்த மக்களின்தேசியத் தலைவராக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை முன்மொழிய பொது பல சேனா திட்டமிட்டுள்ளது.

நாளை 28-ம் திகதி கொழும்பில் நடைபெறும் பொது பல சேனாவின் தேசிய மாநாட்டில் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொது பல சேனாவின் ஆரம்பம் தொடக்கம் பாதுகாப்புச் செயலாளர் அதன் பின்னணியில் இருப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. ஜனாதிபதிக்கு அடுத்த அதிகாரத்தைப் பெறுவதற்காகவே அவர் பொது பல சேனாவை உருவாக்கியிருப்பதாகவும் பேசப்பட்டது.

எனினும் பொது பல சேனாவும், கோத்தபாய ராஜபக்ஷவும் இந்த செய்திகளை மறுத்திருந்தனர்.

இந்நிலையில் பொது பல சேனாவின தேசிய மாநாட்டில் சிங்கள பௌத்தர்களின் தேசியத் தலைவராக கோத்தபாயவை பிரகடனப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

மேலும் பிரதமர் பதவியும் கோததபாய ராஜபக்ஷவுக்கே வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்த பொது பல சேனா தீர்மானித்துள்ளது. இதனை முன்னிட்டு ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதப் போராட்டங்களில் ஈடுபடவும் பௌத்த பிக்குகள் தயார்படுத்தப்படவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

## எதிர்க்கட்சிக் கூட்டணி

(கொழும்பு)


ஜனாதிபதி தேர்தலில் எதிர்கட்சிகளின் கூட்டணியொன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை ஆரம்பித்துள்ள ஐக்கிய தேசிய கட்சி யானை சின்னத்திற்கு பதிலாக வேறு சின்னத்தில் போட்டியிடுவது குறித்த யோசனையையும் முன்வைத்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

ஐக்கிய தேசிய கட்சிக்கான முக்கிய நியமனங்களை மேற்கொண்ட பின்னர் எதிர்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க உடனடியாக எதிர்

19 ஆம் பக்கம் பார்க்க....

## வலுக்கும் சீனாவின் ஆதிக்கம்



(கொழும்பு)

சீனாவின் நீர்மூழ்கி கப்பல்கள் சில இலங்கைக்கு வரவுள்ளதாக சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சீன ஜனாதிபதி ஷீ ஜிங்பிங் கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்த போது சீனாவின் டீசல் மற்றும் இலத்திரனியல் நீர்மூழ்கி கப்பல் கொழும்புக்கு வந்தது.

இது இந்து சமுத்திர பகுதிக்கு வந்த முதல் சீன நீர் மூழ்கி கப்பல் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஜிங்பிங்கின் வருகையின் போது பணிக்குழுவுக்கு உதவும் நோக்கில் சோங்ஷிங் என்ற பாரிய நீர்மூழ்கி கப்பல், சீனாவின் உதவியுடன

20 ஆம் பக்கம் பார்க்க....

## கிளியில் இன்று விசாரணை

(கொழும்பு)

காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு இன்று கிளிநொச்சியில் தனது விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளது.

விடுதலைப் புலிகளுடனான இறுதி யுத்தத்தின்போது காணாமல் போனோரைக் கண்டறியும் பொருட்டு ஜனாதிபதி விசேட ஆணைக்குழுவொன்றை நியமித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு, தென்னிலங்கை என்று நாட்டின் பல பகுதிகளில் இந்த ஆணைக்குழு தனது விசாரணைகளை மேற்கொண்டிருந்தது.

20 ஆம் பக்கம் பார்க்க....

# பர்மாவின் பௌத்த தீவிரவாதி இலங்கைக்கு திடீர் விஜயம்!

### அச்சத்தில் முஸ்லிம் சமூகம்

(கொழும்பு)

பொது பல சேனாவின் உயர் சங்க மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வருகை தரவிருக்கும் மியன்மார், 969 அமைப்பின் சர்சைக்குரிய தலைவர் அசின் விராது தேரரின் வருகை பயத்தினை உண்டு பண்ணுவதாக முஸ்லிம் கவுன்சில் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு முஸ்லிம் கவுன்சில் எழுதியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அக் கடிதத்தில குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பர்மா முஸ்லிம்களின் கசாப்பு கடைகாரன் என்று வர்ணிக்கப்படும், மியன்மாரின் முஸ்லிம்களுக்கு எதிரான அமைப்பின் தலைவரான விராது தேரர் தலைமையில் நூற்றுக் கணக்கான பர்மா முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.,

பொது பல சேனாவின் உயர் சங்க சம்மேளன கூட்டத்துக்கே இவருக்கு விஷேட அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ரைம் சஞ்சிகை இவர பற்றி அட்டைப் படக் கட்டுரை எழுதியபோது இவர் ஒரு பர்மாவின் பௌத்த தீவிரவாதி என விமர்சனம் செய்திருக்கும் நிலையில், அப்படியான விராது தேரர் இலங்கை வரும் பட்சத்தில் முஸ்லிழ்களுக்கு எதிராக வன்முறைகள் வெடிக்கும் அபாயம் உள்ளதாகவும், இலங்கையின் சமாதானம் மற்றும் அமைதிக்கு அது அச்சுறுத்தலாக அமையும் என்றும் முஸ்லிம் கவுன்சில் தெரிவித்துள்ளது.

மியன்மார் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் உலக நாடுகள் இவரை குற்றவாளி

20 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துஷ்பிரயோகத்துக்குள்ளாகும் இலங்கைப் பணிப் பெண்கள்

## ஐ.தே.க எம்.பி கவலை

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு செல்லும் இலங்கை பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்படுவது தொடர்பான சம்பவங்கள் வெளிவராமல் மறைக்கப்படுவதாக ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சு மற்றும் அதன் அதிகாரிகளும் பொறுப்புக் கூறவேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

வெளிநாடுகளில் தொழில் வாய்ப்பு பெற்று செல்லும் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாகும் சம்பவங்கள் தொடர்பில் ஊடகங்களில் செய்திகள் வெளியாவதில்லை.

ஓரிரு சம்பவங்கள் பற்றிய செய்திகளே வெளியாகின்றன. எவ்வாறாயினும் இப்படியான பல சம்பவங்கள் நடக்கின்றன.

வீட்டுப் பணிப்பெண்ணாக வெளிநாடு செல்லும் பெண்கள் பலர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுவது முடிவோ ஆரம்பமோ இல்லை.

சவூதி மற்றும் டுபாய் போன்ற நாடுகளில் இப்படியான பல சம்பவங்கள் நடக்கின்றன.

பாலியல் பலாத்காரங்களுக்கு உள்ளான மற்றும் பலவந்தமாக பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படும் பெண்களில் 40 முதல் 50 வரையான பெண்கள் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளனர்.

இதனால், இலங்கை பெண்களை வீட்டுப பணிப்பெண் வேலைகளுக்கு அனுப்பாது, பயிற்சிகளை வழங்கி ஆடை தைக்கும் தொழிலுக்கு மாத்திரம் அனுப்பி வைக்க வேண்டும்.

அப்படி செய்தால், தொழிலாளர் சட்டங்கள இல்லாத மத்திய கிழக்கு நாடுகளின் செல்வந்தர்கள் பாலியல் வேட்கைகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் வெளிநாட்டில் இருந்து செல்லும் பெண்கள் உள்ளாக்கப்பட மாட்டார்கள்.

இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், நேபாளம், சூடான், இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பெண்களை வீட்டுப் பணிப்பெண்களாக அனுப்புவதை நிறுத்தியுள்ளன.

எனினும், வெளிநாட்டு அந்நிய செலாவணிக்காக இலங்கையில் உள்ள அப்பாவி தாய்மார், அக்கா, தங்கைகளை மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்புவது மிகப் பெரிய பிரச்சினை எனவும் ரஞ்சன் ராமநாயக்க மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர்களுக்கான அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட முதலாம், 4 ஆம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் அனைத்தும் நாளை மறுதினம் திங்கட்கிழமை வழமைபோல் நடைபெறும் என பதிவாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விடுதியில் தங்கும் மாணவர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை விடுதிகளுக்கு திரும்புமாறும் நாளை மறுதினம் திங்கட்கிழமை விரிவுரைகளுக்கு சமுகமளிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

## மீண்டும் நியமனம்

(யாழ்ப்பாணம்)

அரச மொழிகள் ஆணைக்குழுவின் உறுப்பினராக பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு இணைக்கப்பட்ட இவரது பதவிக்காலம் நிறைவடைந்துள்ள நிலையில் மீண்டும் அவர் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். (எ)

# புலிகளின் போராட்டத்திற்கு அமெரிக்க பொலிஸார் அனுமதி!

தமிழீழ விடுதலைப் புலிகளினால் நடத்தப்பட்ட போராட்டத்திற்கு அமெரிக்க பொலிஸார் அனுமதி வழங்கியிருந்தனர் என சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றிய போது ஐக்கிய நாடுகள் தலைமை அலுவலகத்திற்கு வெளியே புலம்பெயர் தமிழர்கள் போராட்டமொன்றை நடத்தியிருந்தனர்.

இந்தப் போராட்டம் தோல்வியடைந்துள்ளதாக தெற்கின் திவயின பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் தலைமை அலுவலகத்திற்கு அருகாமையில் ஜனாதிபதி மகிந்தவிற்கு எதிராக போராட்டங்களை நடத்துவதற்கு அமெரிக்க பொலிஸார், புலி ஆதரவு புலம்பெயர் தமிழர்களுக்கு ஆதரவளித்திருந்தனர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மூன்று பஸ்களில் வந்த 300 பேர் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

புலி ஆதரவு புலம்பெயர் தமிழர்களினால் நடத்தப்பட்ட போராட்டத்தின் போது நிதி திரட்டப்பட்டதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலி ஆதரவு புலம்பெயர் அமைப்புக்களினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்த போராட்டம் முற்று முழுதாக தோல்வியைத் தழுவியுள்ளதாக சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (எ-11)

# உடையும் ஜனநாயக முன்னணி தனிமைப்படும் பொன்சேகா

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொனசேகாவின் ஜனநாயக தேசிய முன்னணி பல கூறுகளாக உடைந்து சிதறும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளது.

தற்போதுள்ள நிலையில் கட்சியின் பிரபல்ய மிக்க தலைவர்களான டிரான் அலஸ், சுசில் கிந்தெல்பிட்டிய போன்றோர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்வதற்கான பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளனர்.

மேல்மாகாண சபை உள்ளிட்ட மாகாண சபைகளில் உறுப்பினர்களாகவுள்ள இன்னும சில முக்கியஸ்தர்கள் ஜே.வி.பி.யுடன் இணைந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையே சரத் பொன்சேகாவை பலவீனப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ள அரசாங்கம், அக்கட்சியிலிருந்து சிலரை விலைக்கு வாங்க முயற்சிக்கின்றது.

மேலும் ஊவா மாகாண சபைத் தேர்தலின் போது மிகவும் குறைவான வாக்குகளைப் பெற்றதன் காரணமாக கட்சிக்கு பொதுமக்கள் மத்தியில் இருந்த செல்வாக்கும் பாரியளவில் சரிந்துள்ளது.

இதன் காரணமாக சரத் பொன்சேகாவின கட்சி மிக விரைவில் பல கூறுகளாக உடைந்து சிதறும அபாயம் காரணமாக அரசியலில் பொன்சேகா தனிமைப படுத்தப்படும் நிலையை எதிர்கொண்டுள்ளார்.

இதற்கிடையே ஊவா தேர்தலில் பின்னடைவு, சரத் பொன்சேகாவின் இரண்டாம் மகள் ஆபிரிக்கர ஒருவரை திருமணம் செய்துள்ள சம்பவங்கள போன்றவற்றின் காரணமாக அவரும் மனதளவில் கடுமையான பாதிப்புக்குள்ளாகியிருப்பதாக தெரியவந்துள்ளது. (எ-11)

## முன்னாள் நீதியரசரின்

# வங்கிக் கணக்கு விபரம் அறிய 4 இலட்சம் அமெரிக்க டொலர்

முன்னாள் நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் வங்கி கணக்கை வழங்க வேண்டுமாயின் வங்கிக்கு 4 இலட்சத்து 72 ஆயிரத்து 200 அமெரிக்க டொலர் தேவையென குறித்த வங்கி சார்பில் ஆஜரான சட்டத்தரணி கொழும்பு நீதிவான் நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

இது குறித்து விசாரணை நேற்று எடுத்துக கொள்ளப்பட்ட போது வங்கியின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கருத்து முன்வைத்தார்.

நீதிமன்றம் கேட்கும் தரவுகளை வழங்க கணனி செயற்பாடு ஒன்றை முன்னெடுக்க வேண்டும்.

எனவே முன்னாள் பிரதம நீதியரசர் 4 இலட்சத்து 72 ஆயிரத்து 200 அமெரிக்க டொலரை செலுத்த இயலுமாயின் தரவுகளை வழங்க முடியுமென வங்கியின் சட்டத்தரணி நீதிமன்றத்திற்கு கூறியுள்ளார்.

இந்நிலையில் இந்த விடயம் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதவான மத்திய வங்கி தனியார் வங்கி பணிப்பாளருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

முன்னாள் நீதியரசர் வங்கியில் வைத்திருந்த விசேட நடமாடும் கணக்குகள் இரண்டு தொடர்பான தகவல்களை மூன்று வருடங்கள் மறைத்ததாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் லஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவு தாக்கல் செய்த வழக்கு மீது விசாரணை இடம்பெறுகின்றது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## அனுமதி அட்டைகள் கன்னியர் மடத்தில்

(யாழ்ப்பாணம்)

2014 ஆம் ஆண்டுக்கான மாகாணமட்ட ஆங்கில நாடகப் போட்டிகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம், சென் ஜேம்ஸ் கல்லூரியில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

மேற்படி நாடகங்களுக்கு பொறுப்பான ஆசிரியர்கள் தங்களது வருகையையும் அனுமதி அட்டையையும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு முன் யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலையில் பெற்றுக் கொள்ளுமாறு மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் கு.வர்ணகுலராஜா கேட்டுக்கொண்டுள்ளார். (எ-11)


### கடை வாடகைக்கு

பருத்தித்துறை பஸ் நிலையத்திற்கு அருகில் கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு:-0774366704

(சி-8596)

### SMART SAMSUNG LED HD TV 40 அங்குலம்

புத்தம் புதிய LED TV 3D வசதி கொண்டதும், ஹங்கேரி உற்பத்தியுமான TV உடன் விற்பனைக்கு.

விலை : 1,40,000/=

(7685)

தொடர்பு : 0788726237

வலம்புரி
விளம்பரத்தொடர்புகளுக்கு
021 321 0815 / 021 567 1532


# தாலிக் கொடி அறுப்பு அறுத்தவர் கைது

(யாழ்ப்பாணம்)

தாவடி பத்திரகாளியம்மன் கோவில் வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த கர்ப்பிணிப் பெண்ணின் தாலிக்கொடியை அறுத்தவர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டதாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

கர்ப்பிணி பெண்ணுடைய 12 பவுண் தாலிக்கொடியை, மோட்டார் சைக்கிளில் சென்ற சந்தேகநபர் அறுத்துச் சென்றுள்ளார். அறுத்துச் சென்றவரின் மோட்டார் சைக்கிள் இலக்கத்தை குறித்துக்கொண்ட பெண், சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார்.

பெண்ணின் முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை மேற்கொண்டு, இணுவிலைச் சேர்ந்த 32 வயதுடைய சந்தேகநபர் கைது செய்ததாக பொலிஸார் மேலும் கூறினர்.

## விக்னேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா

(தும்பளை)

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் அதிபர் என். கனகலிங்கம் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் ம. சின்னத்தம்பி கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வின் போது ஸ்தாபகர் உரையினை யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை விரிவுரையாளர் ஏ.நித்திரவர்மன் வழங்கவுள்ளார்.

தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற உள்ளன. (இ-19)


### கை கொடுக்கும் நண்பர்களுக்குக் கை கொடுப்பீர்களா?

**தற்கொலைச் செய்திகள் உங்களை வருத்துகின்றனவா? முன்பின் தெரியாதோருக்கும் உதவும் புனிதமான பணிக்கு நீங்கள் தயாரா?**

வட பகுதியில் நிகழும் தற்கொலைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதை ஒரே நோக்காகக் கொண்டு உற்சாகத்தோடும், அர்ப்பணிப்போடும் செயற்படும் அமைப்பே கை கொடுக்கும் நண்பர்கள். வாழ்க்கையில் பல்வேறுபட்ட பிரச்சினைகளால் மனம் பாதிக்கப்படுவோருக்கு, எமது தன்னார்வத் தொண்டர்கள் நேரிலும், தொலைபேசி மூலமும் உணர்வு ரீதியான ஆதரவை வழங்குகின்றனர். தினசரி காலை 9 மணி முதல் 1 மணி வரை 104, 4ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் எமது நிலையம் இயங்குகிறது. எம்முடன் ஒரு தொண்டராக இணைந்து கொள்ள உங்களுக்கு விருப்பமா? வாரத்தில் ஒரு நாள் மட்டும், நான்கு மணித்தியாலங்கள் சம்பளம் எதுவும் இன்றிப் பணியாற்ற வேண்டும். ஏற்ற பயிற்சி வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு உடனே அழையுங்கள்.

(சி 8601)

021 222 8117 / 077 89 69 155

கை கொடுக்கும் நண்பர்கள் (Sri Lanka Sumithrayo, Jaffna)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் தொடர்பில் விசாரிக்க ஆணைக்குழு நியமியுங்கள்

## முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை

(கொழும்பு)

யுத்தம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஆணைக்குழு ஒன்றை நிறுவுமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு மற்றும் காணாமல் போனவர்கள் தொடர்பிலான ஆணைக்குழுக்களுக்கு மேலதிகமாக ஓர் ஆணைக்குழு நிறுவி யுத்தம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் குறித்து உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கையில் கவனம் செலுத்தப்படவில்லை என அவர் தெரிவித்தார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் விசாரணைகள் நடத்தப்பட்ட காலப்பகுதிக்கு முனனதாகவே முஸ்லிம்கள் நெருககடிகளை எதிர்நோக்கினார்கள் என அவர் தெரிவித்தார்.

கடந்த 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி முதல் 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்தே உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு விசாரணை நடத்தி வருகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

1987ஆம் ஆண்டு முதலே முஸலிம் மக்கள் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

பாரிய மனித படுகொலைகள், இடம்பெயர்வுகள் என பல்வேறு வழிகளில் முஸ்லிம் மக்கள் துயரங்களை எதிர்நோக்க நேரிட்டது என அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தம் காரணமாக பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்ட போதிலும் ஒரு சில பிரச்சினைகள் குறித்தே உண்மையைக்கண்டறியும்ஆணைககுழு கவனம் செலுத்தி வருகிறது.

சர்வதேச அழுத்தங்கள் காரணமாகவே உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதாகவும், அரசாங்கம் சுயமாகவே இவ்வாறு விசாரணை நடத்தவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது நிறுவப்பட்டுள்ள காணாமற் போனவர்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவும் இதே விதமாகவே இயங்கி வருகின்றது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எவ்வாறெனினும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு மறறும் காணாமல் போனவர்கள், யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழு ஆகியவற்றின் குறைகளை இனங்கண்டு சரியான ஓர் தீர்வினை வழங்கக் கூடியஅதிகாரம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு உள்ளது என ஹசன அலி சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களுக்கு பொருந்தக்கூடிய ஓர் தீர்வுத் திட்டத்தை ஜனாதிபதியினால் வழங்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## வீட்டின் மீது இடி விழுந்து இருவர் காயம்

தலைமன்னார், பியரில் உள்ள வீடு ஒன்றின் மீது இடி விழுந்ததில், அவ் வீட்டிலிருந்த கணவன், மனைவி ஆகிய இருவ ரும் காயமடைந்த நிலையில் தலைமன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, மன்னார் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை முதல் நிலவிய காலநிலை மாற்றம் காரணமாக இடி, மின்னலுடன் மழை பெய்துள்ளது.

இந்நிலையில், இரவு 7.30 மணியளவில், வீட்டின் மீது இடிவிழுந்துள்ளது. இச் சமயத்தில், அவர்களின் வீட்டுச் சுவரின் மீது இடி விழுந்து வீடு சிறு சேதத்துக்கு உள்ளாகியது. இதன் போது வீட்டினுள் இருந்த கணவன் மனைவி இருவரும் காயமடைந்தனர்.

அத்துடன், அங்கு பொறுத்தப்பட்டிருந்த மின் வயர்கள் முற்றாக எரிந்ததுடன் அங்கு இருந்த மின்சார உபகரணங்கள் யாவும் சேதமடைந்துள்ளன. குறித்த சம்பவம் தொடர்பாக தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், அச் சமயத்தில் வீட்டில் இருந்தகணவனும் மனைவியும் இடி தாக்கத்துக்கு உள்ளாகி காயமடைந்தநிலையில், தலைமன்னார் வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று தற்போது வீடு திரும்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (2)

### நவராத்திரி பாமாலை

நவ தினங்களும் உன்புகழை பாடித்துதிக்க
கல்வி, செல்வம், வீரம் என வரம் தருவாய்
தேவிகளின் நாமங்கள் எங்கும் ஒலிக்கும்
அற்புத நவ தினங்கள்
கலைகளை பெற்றுத்தரும் கலைமகளே
செல்வத்தை வாரி வழங்கும் மலைமகளே
வீரத்தை எம்முள் ஊட்டும் அலைமகளே
உங்களது அருள் வியக்கத்தக்கது.

கி.காவேரி தரம்-10B
யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.




### வேலைவாய்ப்பு

உங்களின் கனவு எங்களின் பொறுப்பு. கல்வி தகைமை சிங்களம் அவசியமில்லை. பிரதான 195 தொழிற்சாலைகளில் 500 இற்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புக்கள். (உற்பத்தி/ லேபல்/ பொதியிடல்/ தரம்பிரித்தல்) வயது 18-50 ஆண்/ பெண் சம்பளம் 24000/= 35000/= வரை. விவாகமானவர், குழுக்கள், நண்பர்கள் ஒரே தொழிற்சாலைகளில் வருகை. அன்றே வேலை மேலதிக தகவல்களுக்கு இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

முல்லைத்தீவு- 077 4430166 யாழ்ப்பாணம்- 077 1116770
கிளிநொச்சி-077 4567082 வவுனியா- 077 8304013
(சி-8563)


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

#### கலைப்பீட மாணவர்களுக்கான அறிவித்தல்

கலைப்பீட 1ஆம், 4ஆம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் அனைத்தும் 29.09.2014ஆம் திகதி திங்கட்கிழமை வழமைபோல நடைபெறும். விடுதியில் தங்கும் மாணவர்கள் ஞாயிற்றுக்கிழமை விடுதிகளுக்கு திரும்புமாறும் திங்கட்கிழமை விரிவுரைகளுக்குச் சமுகமளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பதிவாளர்
25.09.2014 (சி-8600)

## இராசி பலன்

27.09.2014
(புரட்டாதி 11, சனிக்கிழமை
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
திருதியை பிற்பகல் 2.24 மணிவரை
சுவாதி முன்னிரவு 10.24மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
இரண்டாம் புரட்டாதிச்சனி ,அமிர்த சித்தம்

வளவன்

**மேடம்:** விருந்தினர் வருகை யுண்டு, எடுத்த கருமங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டால் அதிஷ்ட வாய்ப்புக்களை வரவழைத்துக்கொள்வீர்கள், கௌரவமான நாள்.

**இடபம்:** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, சுறுசுறுப்பான நாள், வழிபாட்டால் சிறப்பினைக் காணவேண்டிய நாள்.

**மிதுனம்:** பிள்ளைகளின் வருங்கால நலன்கருதி எடுத்தமுயற்சிகள் வெற்றி தரும், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்:** பெற்றோர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, தொலை தூரத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு.

**சிம்மம்:** வாய்த்த நண்பர்களால் நன்மைகள் நடைபெறலாம், பணத் தேவைகள் பூர்த்தியாகும், செய்தொழில் மேன்மையுண்டு, உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும்.

**கன்னி:** உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும், வழிபாட்டால் மகத்துவம் காண்பீர்கள்.

**துலாம்:** கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பயணங்களால் பலனுண்டு, கற்பனை மிகுதியான நாள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**விருச்சிகம்:** விழாககளில கலநது கொள்ளும் வாய்ப்புண்டு, தொலைபேசியால் மகிழ்ச்சி தரும், பொழுது போக்கு விடயங்களில்ஆர்வம் காட்டுவீர்கள், சுப செலவுகள் கூடும் நாள்.

**தனுசு:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து சேரும் நாள், பொதுவாழ்வில்புகழ்கூடும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**மகரம்:** கனவுகள்நனவாக கற்பக மூ த்தியை வழிபட வேண்டி நாள், பெரிய மனிதர்களின் தொட ர்புகள் நன்மைதரும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** புதிய திட்டங்கள் எளிதில் கை கூடும், வழிபாட்டில் ஆர்வ காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, அதிகாரிகளை அனு சரித்துச்செல்வது நல்லது.

**மீனம்:** வரவை விட செலவுகள் அதிக மாகும், குடும்பத்தில் கோபமாக பேசிவிட்டு பின்னர் மன வருந்த நேரிடலாம், பிரயாண பயமுண்டு, உடல் நலனில் கவனம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வடக்கு தாவர விற்பனையாளர்களுடன் விவசாய அமைச்சர் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் பயன்தரு மரங்களையும் அலங்காரத் தாவரங்களையும் உற்பத்தி செய்பவர்களையும் அவற்றை விற்பனை செய்பவர்களையும், வண்ணமீன் மற்றும் செல்லப்பிராணிகள் விற்பனையாளர்களையும் வடக்கு மாகாண விவசாயம், சுற்றுச்சூழல், கால்நடை மற்றும் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இச்சந்திப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை 28 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு 295, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள விவசாய அமைச்சரின் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

உற்பத்தி செய்வதிலும் விற்பனை செய்வதிலும் பண்ணையாளர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள், விற்பனைக் கண்காட்சி, பிற மாகாணங்களில் இருந்து வரும் அலங்காரச் செடி விற்பனையாளர்களால் ஏற்படும் சவால்கள் போன்ற பல விடயங்கள் ஆராயப்படவுள்ளதால் சகல பண்ணையாளர்களையும் இக் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு விவசாய அமைச்சு ஊடகங்களுக்கு அனுப்பி வைத்திருக்கும் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)




## சீரடி சாயிபாபா அவதார தினம்

(யாழ்ப்பாணம்)

சீரடி சாயி பாபா அவதாரதினம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் யாழ்ப்பாணம் சத்தியசாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிறப்புரையினை ஆர்.ஸ்ரீஸ்கந்தராஜா ஆற்றவுள்ளார். (இ




## உறுப்பினர் அங்கஜனின் பிரேரணையானது அமைச்சரவை வரியப்பத்திரமாக சமர்ப்பிப்பு

வடமாகாண பாடசாலைகளில் பல ஆண்டுகளாக ஒப்பந்த அடிப்படையில், அமைய அடிப்படையில் கடமையாற்றுபவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டுமென வடமாகாண சபை உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் கொண்டுவரப்பட்ட பிரேரணை அமைச்சரவைக் கூட்டத்தில் வரியப்பத்திரமாக சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதேவேளை தனது பிரேரணையினை கவனத்திலெடுத்தமைக்கு மாகாண சபைக்கும் கல்வி அமைச்சருக்கும் அவர் தனது நன்றியினையும் தெரிவித்துள்ளார்.

உறுப்பினர் அங்கஜனால் முன்வைக்கப்பட்ட பிரேரணையான வடமாகாணப் பாடசாலைகளில் கடந்த பல ஆண்டுகளாக ஒப்பந்த அடிப்படையில், அமைய அடிப்படையில் அலுவலகப்பணியாளர்களாக, நூலகர்களாக, காவலாளிகளாக, சுகாதாரப்பணிப்பாளர்களாக கடமை புரிபவர்களுக்கு நிரந்தர நியமனம் பெற்றுக் கொடுக்க வேண்டுமென வடக்குமாகாண கல்வி அமைச்சரரை கோரியிருந்தார்.

அதற்கு அமைய வடமாகாண கல்வி அமைச்சர் குறித்த பிரேரணை தொடர்பில் விளக்கம் அளிக்கும் போது தாம் குறித்த பிரேரணை தொடர்பில் விளங்கி கொண்டதாகவும் வடமாகாணத்தில் தற்போது பாடசாலைகளில் நிலவுகின்ற வெற்றிடங்களை ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில்கடமைபுரிந்துவரும் பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக அடுத்த அமைச்சரவை வரியக்கூட்டத்தில் குறித்த பிரேரரணையை வரியப்பத்திரமாக சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளைதம் பிரேரணை தொடர்பில் கவனம் செலுத்தியமைக்கு நன்றிகளை தெரிவித்து கொள்வதாக தெரிவித்துள்ளார். (இ-4)

## அழகுக்கலை கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச்சங்கம் நடத்தும் கைப்பணி மற்றும் அழகுக்கலை தொடர்பான கண்காட்சி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு படிப்பு மண்டபத்தில். சைவவித்தியா விருத்திச் சங்க தலைவர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் வலயக் கல்வி முறைசாரா கல்விப்பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் மு.இராசநாயகம் கலந்து கொள்ளவுள்ளார்.(இ


## பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

கல்விப்பண்பாட்டலுவல்கள்விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் நிதியுதவியுடன் பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார பேரவை இரு நாள் பயிற்சிப்பட்டறை ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

கவிதை, சிறுகதை, விசேட கூத்து என்பன பயிற்சிப்பட்டறையில் உள்ளடக்கப்படவுள்ளன.

எனவே ஆர்வமுள்ளவர்கள் பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார பேரவையுடன் தொடர்புகொள்ளுமாறு பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் அறிவித்துள்ளார். (இ-19)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் வட்டு மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் மூன்று மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் அண்மையில் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இதன்போது சங்கத்தின் தலைவர்எஸ்.நிரோசன், கல்லூரி அதி பரும் வட்டு இந்து வாலிபர் சங்க முன்னாள் தலைவருமாகிய என்.சபாரத்ன சிங்கம் முன்னிலையில் மாணவர்களுக்கு துவிச் சக்கரவண்டிகள் வழங்கப்படுவதனை படத்தில் காணலாம். இம்மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகளை வட்டு இந்து வாலிபர் சங்க கனடா கிளை அன்பளிப்பாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நூற்றாண்டு மலருக்கு தகவல்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ். தேவரையாளி இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழா இவ்வாண்டுகொண்டாடப்படவுள்ளது. நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நூற்றாண்டுமலர் தயாரிப்பதற்கு பாடசாலை நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

இந்நூற்றாண்டு மலருக்காக தேவையான பாடசாலை தொடர்பான வரலாற்றுத் தகவல்கள், தரவுகள், நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள், புகைப்படங்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்க விரும்புவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அதிபர் யாழ். தேவரையாளி இந்துக் கல்லூரி, கரவெட்டி எனும் முகவரிக்கு மேற்குறிப்பிட்டவற்றை அனுப்ப முடியும் என கல்லூரியின் அதிபர் எம். நவநீதமணி அறிவித்துள்ளார்.

அத்துடன் இது தொடர்பாக பாடசாலை நாட்களில் நேரில் தொடர்பு கொள்ள முடியும் எனவும் அல்லது 021 226 3879 எனும் தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்பு கொள்ள முடியும் எனவும் மேலும் Principal Thevaraiyali @ gmail.com எனும் மின்னஞ்சல் மூலம் அனுப்ப முடியும் எனவும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ

## நவராத்திரி விழா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் நவராத்திரி விழா நாளை 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். ஆனைப்பந்தியில் அமைந்துள்ள குருகுலத்தில் இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மா.அனந்தலட்சுமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் திருமதி வே. சிவராசா கலந்து கொள்ளவுள்ளார். (இ)

## செயன்முறை செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான செயன்முறைப்பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம் நடத்தும் நாடகமும் அரங்கியலும் தொடர்பான இலவச செயன்முறைச் செயலமர்வு நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

இச் செயலமர்வு தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

இச் செயன்முறை செயலமர்வானது யாழ்.திருநெல்வேலி முத்துத் தம்பி மகா வித்தியாலயத்தில் பிற்பகல் 4 மணி தொடக்கம் 5.30 மணிவரை நடைபெறவுள்ளது.

எனவே இவ் இலவச செயன்முறைச் செயலமர்விற்கு கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் தவறாது இணைந்து கொள்ளும்படி பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம் அறிவித்துள்ளது. (இ)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

கரவெட்டி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டவர்களிடமிருந்து அலுமினியம், கட்டுமானம், வீட்டு மின்னிணைப்பு, நீர்க்குழாய் பொருத்துதல், குளிர்சாதன உபகரணம் திருத்துதல் ஆகிய பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் பயிற்சி நெறிகளை பூர்த்தி செய்பவர்கள் தேசிய தொழில் தராதரப்பத்திர (NVQ) சான்றிதழினை பெற்றுக் கொள்ள முடியும்.

மேற்படி பயிற்சி நெறிகளில் இணைய விரும்பும் விண்ணப்பதாரிகள் தமது பெயர், முகவரி உள்ளிட்ட சுயவிபரப்படிவத்தினை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கரவெட்டி பிரதேச செயலகத்தின் திறன் அபிவிருத்தி உதவியாளரிடம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (இ

## வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு நல்லூர் கிளை நூலகத்தின் போட்டிகள்

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு மாணவர்களிடையே வாசிப்பு பழக்கத்தை அதிகரிக்கும் நோக்கில் நல்லூர் கிளை நூலகம் பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இதன் ஒரு கட்டமாக பிரதேச மாணவர்கள் மற்றும் நூலக அங்கத்தவர்களிடையே பல்வேறு போட்டிகளை நடத்தவுள்ளது.

போட்டிகளில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் தமது பெயர், விபரங்களை நல்லூர் கிளை நூலகம் மாநகர சபையில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். மாநகராட்சி மன்ற நல்லூர் கிளை நூலகர் கேட்டுள்ளார்.

இதில் போட்டிகளாக முன்பள்ளி மாணவர்களுக்கான வர்ணம் தீட்டுதல் மற்றும் கதை கூறல், 3 தொடக்கம் 5 ஆம் ஆண்டு வரையான மாணவர்களுக்கான சித்திரம் வரைதலும் மற்றும் சிறுவர் செயற்பாடுகளுக்கான பாட்டு, ஆங்கில மற்றும் தமிழ் மொழியில் பேச்சும், 6 தொடக்கம் உயர்தரம் வரை தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் கட்டுரை மற்றும் பேச்சும் வளர்ந்தோருக்கான வினாக்களுக்கு விடை அளித்தல் என்பன போட்டிகளாக அமையவுள்ளன.

எனவே ஆர்வமுள்ள மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளையடிப்பதற்காகவா? சம்பளம் வழங்குகிறது அரசு

## பொலிஸாரிடம் நீதவான் கேள்வி

(கொழும்பு)

பொலிஸாருக்கு அரசாங்கம் சம்பளம் வழங்குவது கொள்ளையடிப்பதற்கு அல்ல என கோட்டே நீதவான் திலின கமகே தெரிவித்துள்ளார்.

சீன பிரஜை ஒருவரிடம் 2000 ரூபா பணம் கொள்ளையிட்டதாக குற்றம் சுமத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் நேற்று முன்தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் திணைக்களத்தின் கௌரவத்தை பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

எதிர்காலத்தில் இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட்டால் பிணையை இரத்து செய்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடுவேன் என நீதவான் தெரிவித்துள்ளார்.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராகவே இவ்வாறு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

வழக்குத் தொடர்பான விசாரணைகளை கொள்ளுப்பிட்டி பொலிஸாரே மேற்கொள்கின்றனர்.

வழக்கு விசாரணைகளில் முன்னிலையான கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய உத்தியோகத்தரையும் நீதவான் எச்சரித்துள்ளார்.

பக்கச்சார்பான முறையில் விசாரணைகளை நடத்தினால் வேறு பொலிஸ் நிலையத்திற்கு இந்த வழக்கை விசாரணை செய்யுமாறு உத்தரவிட நேரிடும்.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு 150 பிடிவிறாந்து உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. எந்தவொரு பிடிவிறாந்து உத்தரவு குறித்தும் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை.

வழக்கு விசாரணைகளின் போது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியோ குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரியோ முன்னிலையாவதில்லை.

ஏதாவது ஓர் பட்டியலை எடுத்துக் கொண்டு வருவார்கள் இவ்வாறு இருந்தால் எப்படி வழக்கு விசாரணைகளை செய்வது என நீதவான் திலின கமகே, பகிரங்கமாக பொலிஸாரின் நடவடிக்கைகளை கடுமையாக விமர்சனம் செய்துள்ளார். (இ)

## ஐக்கிய தேசிய கட்சியில் இணைய ஆளுங்கட்சி உறுப்பினர்கள் தயார்



ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து கொள்வதற்கு ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள்சிலர் தயாராக இருப்பதாக ஐ.தே.க எம்.பி லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலொன்று விரைவில் நடத்தப்பட வேண்டுமென அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்த கிரியல்ல எம்.பி. ஐ.தே.க.வுடன் இணையவுள்ள ஆளுங்கட்சி உறுப்பினர்கள், இது தொடர்பில் தன்னுடன் பேச்சுவார்த்தை நடத்திய தாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## நீரோடையில் வீழ்ந்து மாணவன் உயிரிழப்பு

தெனியாய - கபிலவத்தை பிரதேசத்தில் நேற்றுக்காலை9 மணியளவில் நீரோடையில் விழுந்து மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர.

பாடசாலை முடிந்து தனது வீட்டுக்கு செல்லும் வழியில் உள்ள ஓடையைக் கடக்க முற்பட்ட போதே குறித்த மாணவன் நீரோடையில் விழுந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

சம்பவத்தில் 12 வயதுடைய மாணவனே உயிரிழந்தவராவார். பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# இளைஞர்களை ஊக்குவிக்க விசேட வேலைத்திட்டம் தயார்

## அமைச்சர் விமல் தெரிவிப்பு

(கொழும்பு)

எமது எதிர்கால சந்ததியினர் நிர்மாணத் துறையில் ஆர்வத்துடன் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் கட்டட நிர்மாணத்துறையினருக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படுவதாக நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு பொதுவசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார். இளைஞர், யுவதிகள் நவீன உலகின் சவால்களை வென்றெடுப்பதற்கு இத்துறையில் ஆர்வத்துடன் ஈடுபட வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

மஹாபிமானி 2014 தேசிய நிர்மாண விருது விழா ஏற்பாடு தொடர்பான ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில், பல்வேறு சவால்களுக்கு மத்தியில் தேசிய நிர்மாண விருது விழா கடந்த வருடம் வெற்றிகரமாக நடைபெற்றது. இரண்டாவது தடவையாக நடைபெறும் இவ்விருது விழா டிசம்பர் மாதம் 18ஆம் திகதி கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இவ்விருது விழாவில் நாடளாவிய ரீதியில் இருந்து நிர்மாணத்துறையில் ஈடுபட்டுள்ள சிறந்த நிர்மாண நிறுவனங்கள், நிர்மாண தொழில்சார் துறையினர், நிர்மாண கலைஞர்கள் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்படவுள்ளன.

மஹாபிமானி போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் நாட்டின் சகல பிரதேச செயலகங்களிலும் விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ள முடியும். நிர்மாண கலைஞர்களுக்கான விருது 12 பிரிவுகளின் கீழ் வழங்கப்படவுள்ளது. குறிப்பாக மேசன், தச்சன், வர்ணப்பூச்சு கலைஞர், குழாய் பொருத்துநர் உட்பட பல பிரிவுகளில் விருதுகள் வழங்கப்படவுள்ளன.

இந்தத் துறையை வளர்த்தெடுப்பதற்காக அரசாங்கம் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வரும் இவ்வேளையில் இத்துறையில் ஈடுபடும் இளைஞர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இத்துறையுடன் சம்பந்தப்பட்டவர்கள் எதிர்கால சவால்களை முறியடிக்கும் வகையில் புதிய நுட்பங்களையும், தொழில்நுட்பங்களையும் பயன்படுத்துவதற்கு தங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

கட்டத்துறையில் ஈடுபடுவோர் மாதாந்தம் சிறந்த வருமானத்தை பெற்றுக் கொள்கின்ற போதிலும் இளைஞர்கள் இத்தொழில் துறையை நாடுவதில் அசமந்தப் போக்கில் இருக்கின்றனர். அதற்கு காரணம் இந்தத் துறை சற்று கடினமான தொழிலாக காணப்படுவதாகும். எவ்வாறாயினும் அதிகளவு வருமானத்தை பெறக்கூடிய துறையாக நிர்மாணத்துறை காணப்படுகிறது.

எனவே, இளைஞர்கள் இந்தத்துறையில் ஈடுபட்டு நாட்டுக்கும் பொருளாதாரத்திற்கும் பங்களிப்பு வழங்கும் வகையில் இத்துறையை வளர்ச்சியடையச் செய்ய வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 4ம்<br>கி.பா: 29 1/4<br>உயரம்: 180cm<br>தகைமை/தொழில்:கணக்காளர்<br>தொ.இ: B/3653 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 1ம்<br>கி.பா: 44 செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ திட்ட அலுவலர்<br>தொ.இ: G/3633 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 1ம்<br>கி.பா: 26 3/4 செவ் 8 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L/ வியாபாரம்<br>தொ.இ: B/3655 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 37 1/2<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: HNDA/ பொறியியலாளர்<br>தொ.இ: G/3635 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 53 1/2<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: வியாபாரம்<br>தொ.இ: B/3657 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 46 செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/3638 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 16 3/4 செவ் 2 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவ போசனம்<br>தொ.இ: B/3659 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 4ம்<br>கி.பா: 42 1/2 செவ் 2 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: HNDA/ உதவி கணக்காளர<br>தொ.இ: G/3639 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


# தீவிரவாதிகள் மீது குண்டுவீசிய அரபு நாட்டுப் பெண் விமானி

ஈராக்கை தொடர்ந்து சிரியாவில் இஸ்லாமிய தேசம் பகுதியில் 'ஐ.எஸ்.ஐ.எஸ்' தீவிரவாதிகள் மீது அமெரிக்கா தலைமையில் வான்வெளி தாக்குதல் நடைபெற்று வருகிறது. அதில் ஐக்கிய அரபு நாடுகள், சவுதி அரேபியா, பக்ரைன் மற்றும் ஜோர்தான் நாடுகளும் அமெரிக்காவுடன் இணைந்து குண்டு வீச்சு நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், ஐக்கிய அரபு நாடுகளை சேர்ந்த பெண் விமானியும் இந்த குண்டு வீச்சில் ஈடுபட்டுள்ளார். அவரது பெயர் மேஜர் மரியம் அல்- மன்சூரி.

இவர் கடந்த 2007ஆம் ஆண்டில் அபுதாபியில் உள்ள கலிபாபின் ஷயத் விமான பயிற்சி கல்லூரியில் படித்து விமானி பட்டம் பெற்றவர். அதை தொடர்ந்து ஐக்கிய அரபு நாடுகளின் விமான படையில் முதல் பெண் விமானியாக பணியில் சேர்ந்தார்.

கடந்த 23ஆம் திகதி நடந்த குண்டு வீச்சில் இவர் பங்கேற்றார். இத்தகவலை அவரது ஆதரவாளர்கள் படத்துடன் சமூக வலைத் தளங்களில் வெளியிட்டுள்ளனர். அவரது சேவையை பாராட்டியுள்ளனர். அதே நேரத்தில் பழமைவாதிகள் இவரது செயலை எதிர்த்துள்ளனர். இது கிரிமினல் நடவடிக்கை என அவர்கள் கூறியுள்ளனர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள பௌத்த தாக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியில் சம்பிக்க

தேர்தல்களின் போது சிங்கள பௌத்த தாக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியில் அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஈடுபட்டுள்ளார். எதிர் வரும் தேசிய தேர்தலின் போது பத்து இலட்சம் சிங்கள பௌத்த வாக்குகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற கூட்டத்தொடர்களின் போது அவர் இதனைக் தெரிவித்துள்ளார். வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் தேசப்பற்றுடைய சமூகம், உள்நாட்டில் வாழ்ந்து வரும் குடும்ப உறுப்பினர்களை சரியான வழியில் நடத்தி பத்து இலட்சம் வாக்குகளைப் பெற்றுக் கொள்ள ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் எதேச் சதிகார விடயங்கள் அகற்றப்பட வேண்டும். தேர்தல் முறைமையில் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

நீதிமன்ற, தேர்தல் மற்றும் ஊழல்களை இல்லாமல் செய்ய வலுவான ஓர் சுயாதீனப் பொறி முறைமை அவசியமாகின்றது.

இந்த மாற்றங்களைச் செய்யாது எவராலும் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்ட முடியாது. எதிர்கால முக்கியமான தேர்தல்களின் போது அரசாங்கத்தை அமைக்கும் தீர்மானத்தை எடுக்கக் கூடிய சக்தியாக தேசப்பற்றுடைய சக்திகளை உருவாக்க அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.



ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் லியான் பொக்ஸின் பயங்கரவாதத்திற்கு ஆதரவான உடன்படிக்கையின் முன்னிலையில் மண்டியிட்டிருந்தனர். 1990களின் நடுப்பகுதியில் உருவான தேசப்பற்றுடைய சக்திகளே இந்த சூழ்ச்சித் திட்டங்களை முறியடித்தன. பயங்கரவாதம் இல்லாமல் செய்யப்பட்ட போதிலும் தமிழ், நாசிசவாத பிரிவினைவாதம் இன்னும் தொடர்கின்றது.

எதிர்வரும் தேசிய தேர்தல்களின் போது குறிப்பாக நாடாளுமன்ற தேர்தல்களின் போது தமிழ் நாசிசவாத சக்திகளுக்கு சாவல் விடுக்கக் கூடிய வகையில் சிங்கள தேசியவாத வாக்குப்பலத்தை உறுதி செய்ய வேண்டியது அவசியமாகின்றது என சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். அண்மையில் அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் உள்ளிட்ட நகரங்களில், சிங்கள மக்களை சந்தித்த போது இந்தக் கருத்துக்களை அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 90 | 60 | 100 |
| தக்காளி | 40 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 50 | 50 |
| கோவா | 50 | 80 | 80 |
| கரட் | 80 | 70 | 100 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 40 | 80 | 60 |
| வாழைக்காய் | 70 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 40-90 | 70 | 50-100 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 140 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 120 | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 90 | 120 | 100 |
| லீக்ஸ் | 140 | 90 | 120 |
| பீற்றூட் | 50 | 60 | 60 |
| கறிமிளகாய் | 70 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 40 | 60 | 80 |
| போஞ்சி | 160 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 70 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 140 | 160 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 30 | 30-35 |
| இராசவள்ளி | 120 | 100 | 120 |

# 25 நீர்த்தாங்கிகள் வழங்கப்பட்டன



வடமாகாணத்தில் நிலவும் வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு உதவும் முகமாக நீரைத் தேக்கி வைத்து பாவிப்பதற்கு 25 நீர்த்தாங்கிகளை வடமாகாண ஆளுநர் ஜிஏ.சந்திரசிறி முன்மணி பௌத்த சங்கத்திடம் அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதன் பிரகாரம் 25 நீர்த்தாங்கிகள் வடமாகாண ஆளுநரிடம் அண்மையில் கையளிக்கப்பட்டுள்ளன.

அந்த நீர்த்தாங்கிகளை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர் தலைமையில்நடைபெற்றது.


இதற்கமைய கீரிமலை நகுலேஸ்வரம் கோயிலுக்கு 2, மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கு 2, நயினாதீவு நாகபூசணி அம்மன் கோயிலுக்கு 3, புங்குடுதீவு பெருங்காட்டு கந்தசுவாமி கோயிலுக்கு 2, ஊர்காவற்றுறை சிவன் கோயிலுக்கு 2, ஊர்காவற்றுறை பத்தியடைப்பு முருகன் கோயிலுக்கு 1, எழுவைதீவு சென். தோமஸ் ஆலயத்துக்கு 2, நெடுந்தீவு மத்திபிள்ளையார்கோயிலுக்கு 2, நெடுந்தீவு கிழக்கு பிள்ளையார் கோயிலுக்கு 1, பூநகரி பிரதேசசபைக்கு 3, கரைச்சி பிரதேச சபைக்கு 3 வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ்.மாவட்ட பிராந்திய ஆணையாளர் அண்ணாத்துரை, உதவிச் செயலாளர் செல்வநாயகம் மற்றும் ஆளுநரின் இணைப்புச் செயலாளர் ஆகியோர்கலந்து கொண்டனர்.இ


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 148

Search for people, places and things Nagendram Home


ரத்தினசபாபதி பாலராஜா




ஜெயராசா டிலக்ஷன்




அநோஜன் சிவம்




கோபி பிரஜீவ்




மயூரதன் மயூரன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கிணைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் -19

## கூட்டுப்பசளைத் தேநீர்: பயிர்களுக்கு பானமாகி நோயையும் தவிர்க்கும் சூழலுக்கியைவான தொழில்நுட்பம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

எங்களூரில் உள்ள வளங்களைப் பற்றியும் அது சார்ந்த சூழலைப்பற்றியும் நாம் சிந்திக்கும் காலத்திலிருக்கின்றோம். அசேதன விவசாயமுறைகளில் மட்டும் சார்ந்திருக்காது சேதன விவசாயத்திலீடுபட இருக்கும் விவசாய பெருமக்களுக்கு அதற்கான விவசாய முறைகளை எடுத்தியம்பாது வெறுமனே சேதன விவசாயத்தில் ஈடுபடுவது எந்தவிதத்திற்கும் போதுமானதாக இல்லை. மாறாக சேதன விவசாய செய்கையை மேற்கொள்ள விரும்பும் விவசாயிகளுக்கு நாம் என்றும் பக்கபலமாக இருக்க வேண்டும். அதற்கான தொழில்நுட்பங்களை தேர்ந்தெடுத்து விவசாயிகளுக்கு தொடர்ந்து வழங்கவேண்டும். இத் தொழில்நுட்பங்கள் சூழலுக்கியைவான தாகவும் சமகாலத்திற்கு அவசியமானதாகவும் இருத்தல் நல்லது.

இதுசார்ந்து கூட்டுப்பசளையின் பயன்பாட்டை அதிகரிப்பதற்கான தேடலில் ஈடுபட்ட போது கூட்டுப்பசளைத்தேநீர் பற்றி அறிய முடிந்தது.

இதனை எமது பிரதேசத்தில் எப்படிப் பயன்படுத்துவது மற்றும் அதனது பயன்பாடு பற்றி ஆய்வுக்குட்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விவசாய உயிரியல்துறை இறுதியாண்டு மாணவன் செல்வன் பிரான்சிஸ் இலிகோரி எமேசன் இதுபற்றி ஆய்வினை செய்து வியக்கத்தக்க முடிவுகளை பெற்றிருக்கின்றார். அவரது ஆய்வின் முடிவுகள் இவ்வார அறிமுக தொழில்நுட்பமாக அவற்றை உங்களின் கவனத்திற்கு கொண்டு வருவதற்காகவே இதில் தரப்பட்டுள்ளது.

இது வெளிநாடுகளில் பிரபல்யமானாலும் கூட எமது பிரதேசத்திற்கு புதிதாக அறிமுகமாகின்றது. இந்த கூட்டுப்பசளை தேநீர் எமது பிரதேசத்திற்கு உகந்ததும் சேதன விவசாயத்தை முன்னெடுப்பதற்கும் உதவியாயிருக்கும்.

கூட்டுப்பசளை தேநீர் என்பது கூட்டுப்பசளையை துணியில் கட்டி அதனை நீர் கொண்ட பாத்திரத்தில் உள்ளே வைத்து அந்த நீரினுள் காற்றினை செலுத்துவதன்மூலம் தேநீரை வடிகட்டமுடியும்.

இங்கே தேநீரை வடிகட்டுவதனால் இதனை தேநீர் என குறிப்பிடுகின்றோம். குறிப்பாக கூட்டுப் பசளையை வெறுமனே பயன்படுத்தும் போது இந்த தேநீரின் பயன்பாடு வராது. இங்கே தேநீரைப் பெறுவதென்பதோடு அந்த தேநீர் ஒட்சிசனேற்றப்பட்டதாக இருப்பதனால் பயிருக்கு விசிறும் போது அது தாவரத்தின் இலைப்பகுதியை உயிரோட்டமுள்ளதாக வைத்திருப்பதனால் பயருக்கு கிடைக்க கூடிய சத்துக்களனைத்தையும் தாவரம் இலகுவில் அகத்துறிஞ்சக் கூடியதாக இருக்கும்.

கூட்டுப் பசளை தேநீரை பெறுவதற்கு மண்புழு உரத்தையும் பயனபடுத்தலாம். மண்புழு உரத்தை கூட்டுரத்திற்கு பதிலாக துணியில் கட்டி மண்புழு உர தேநீரை பெற்றுக்கொள்ளலாம். இந்த பயன்பாடு அதிகமானதாகும்.

சேதன விவசாய முறையினை கடைப்பிடிக்க விரும்பும் விவசாயிகளுக்கு மண்புழு உர தேநீர் மிகவும் பயனுடையதாகும். இந்த நீருக்குள் நோய்ப்பூஞ்சணங்களை இயற்கையாகவே கட்டுப்படுத்தும் ரைக்கோடேர்மா பூஞ்சணத்தை நாம் இட்டால் அது பல்கிப்பெருகி ரைக்கோடேர்மா பூஞ்சணத்தின் எண்ணிக்கையை அதிகரித்து விடும. இந்த நிலை வரும்போது பயிர் தனக்கு தேவையான சத்துக்களை விரைந்து பெற்று வளர்ச்சியடையும்.

அசேதன விவசாய உள்ளீடுகளின்றி விளைவித்த பயிர்களில் மண்புழு பசளை தேநீர் விசிறப்பட்டால் பயிர் சிறந்து வளருவதோடு தேநீர் ஊக்கியாக இருப்பதால் பயிர்ச்செய்கை சேதன முறை மூலமாகவே நிகழும்.

மண்புழு உர தேநீர் சேதன விவசாய செய்கைக்கு மிகவும் உகந்த தொழில்நுட்ப முறையாகும். விபரம் அடுத்த வாரம்.

(தொடரும்...)

இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-XII

# பாலஸ்தீனத்துக்கு இலங்கை நிதியுதவி



ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ உள்ளிட்ட குழு வினர், அங்கு வருகை தந்தி ருந்த பாலஸ்தீன நாட்டு ஜனாதிபதிமொஹமட்அப்பாஸை சந்தித்து கலந்துரையாடினர்.

பாலஸ்தீனுக்கு வழ ங்குவதாக ஜனாதிபதியினால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை, இந்த சந்தி ப்பின் போது பாலஸதீன ஜனாதிபதியிடம் இலங்கை ஜனாதிபதி உத்தி யோகபூர்வமாக கையளித்தார். (இ)

# சம்பந்தனும் ஹக்கீமும் கல்முனையில் சந்திப்பு

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமும் கல்முனையில் சந்திப்பு ஒன்றை நடத்தவுள்ளனர்.

இன்று காலை இந்த சந்திப்பு நடத்தப்படவுள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நீண்டகால இடைவெளியின் பின்னர் இரு கட்சிகளினதும் தலைவர்கள் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பொறிமுறை, தற்போதைய அரசியல் சூழ்நிலைகள், எதிர்கால தேர்தல்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் பேசப்படவுள்ளன.

இந்த சந்திப்பில் இரண்டு கட்சிகளினதும் பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர்.

இரு தரப்பினருக்கும் இடையில் சந்திப்பு நடத்தப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்த போதிலும், எங்கு, எப்போது என்பது பற்றிய தகவல்கள் திட்டவட்டமாக அறிவிக்கப்படவில்லை.

இந்நிலையில் இன்று முற்பகல் கல்முனையில் சந்திப்பு நடத்தப்படவுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று தற்போது செய்தி வெளியிட்டுள்ளது. (இ)

# எதிர்பார்த்த சலுகைகளை அரசாங்க தரப்பு வழங்கும்

## ஐ.தே.க.நம்பிக்கை

(கொழும்பு)

தேர்தல்களை இலக்கு வைத்து மக்கள் எதிர்பார்க்காத சலுகைகளை அரசாங்கம் வழங்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஸ டி சில்வா தெரிவித்துள்ளார்.

சிங்கள பத்திரிகையொன்றுக்கு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நடத்த அரசாங்கம் உத்தேசித்துள்ள ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து, 2015 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்காத சலுகைகளை வழங்கும்.

ஊவா மாகாணசபைத் தேர்தல் நடைபெறவிருந்த இறுதி தருணத்தில் எரிபொருளுக்கான விலைகளை அரசாங்கம் குறைத்திருந்தது.

ஹெட்சி நிவாரணம் என்ற பெயரில் மக்களுக்கு நேரடியாக பணம் வழங்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னேற்றப் பயணத்தினால் மக்களுக்கு இந்த சலுகைகள் கிடைக்கப் பெற்றன. அரசாங்கம் தற்போது அச்சமடைந்துள்ளது.

6 ஆண்டுகள் ஆட்சி செய்யும் நோக்கில் ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டிய ஜனாதிபதி நான்கு ஆண்டுகளிலேயே தேர்தலுக்குச் செல்ல ஆயத்தமாகின்றார்.

நாளுக்கு நாள் மணித்தியாலத்திற்கு மணித்தியாலம் நிமிடத்திற்கு நிமிடம் மக்கள் மத்தியில் அரசாங்கத்திற்கான நன்மதிப்பு வீழ்ச்சியடைந்து செல்கின்றது.

பொருட்கள் சேவைகளின் விலை அதிகரிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஜனாதிபதி சில வேளைகளில் நிவாரணங்களை வழங்கக் கூடும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# புலமைப்பரிசில் பரீட்சை முடிபுகள் 29 ஆம் திகதி

ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி நடை பெற்ற ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை முடிபுகளை எதிர் வரும் திங்கட்கிழமை 29ஆம் திகதி வெளியிடுவதற்கு பரீட்சைகள் திணை க்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக திணைக்களத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

கடந்த 2013ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை முடிபுகள் சிறுவர் தினமான ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி வெளியிட்டதனால் மாணவர்கள் எதிர்நோக்கிய சிரமத்தைக் கருத்திற் கொண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் இப்பரீட்சை முடிபுகளை வெளியிட நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவின் ஆலோசனைக்கமைய திங்கட்கிழமை இப் பரீட்சை முடிபுகளை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இப்பரீட்சை முடிபுகளை www.doenets.ls என்ற திணைக்களத்தின் இணையத்தள முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும் என அவ்வதிகாரி மேலும் குறிப்பிட்டார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிறுவர் அரங்கம்

935

## வாங்க வரைந்து பார்க்கலாம்!

சுட்டி






**சிங்காரக்கண்மணிகளே...! உங்கள் கற்பனைக் குதிரையைக் கொஞ்சம் வேகமாக முடுக்கி! இம்மாதிரியான ஓவியங்களை வரைந்து விரைந்து அனுப்புங்கள்.**

**ஓவியங்களால் உலகை வெல்வோம்!**





## 09.2014 27 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்


- 1529-முதலாம் சுலைமான் வியெட்நாம் நகரை முற்றுகையிட்டான்.
- 1540-இயேசு சபைக்கு போப்பாண்டவர் மூன்றாம் பவுல் ஒப்புதல் தந்தார்.
- 1590 - ஏழாம் ஏர்பன் திருத்தந்தை பதவியேற்ற 13 நாள் இறநதார். இவரே மிகக்குறுகிய காலம் திருத் தந்தையாக இருந்தவர்.
- 1777 - பென்சில்வேனியாவின் லான்காஸ்டர் நகரம் இந்த ஒருநாள் மட்டும் ஐக்கிய அமெரிக்காவின் தலைநகராக இருந்தது.
- 1821 - மெக்சிகோ, ஸ்பெயினிடமிருந்து விடுதலை அடைந்தது.
- 18250- உலகின் முதலாவது பயணிகள் தொடருந்து இங்கிலாந்தில் சேவைக்கு விடப்பட்டது.
- 1893 - சிக்காகோவில் இடம்பெற்ற உலகச்சமயங்களின பாராளுமன்ற மாநாடு முடிவடைந்தது.
- 1905 - அல்பேர்ட் ஐன்ஸ்டைன் முதற் தடவையாக $E=mc^2$ என்ற சமன்பாட்டை அறிமுகப்படுததினார்.
- 1916 - எதியோப்பியாவில் இடம்பெற்ற அரண்மனைப் புரட்சியை அடுத்து இயாசு மன்னர் பதவியை இழந்தான.
- 1928 - ஐக்கிய அமெரிக்கா சீனக் குடியரசை அங்கீகரித்தது.
- 1938-ஆர்.எம்.எஸ். குயின் எலிசபெத் பயணிகள் கப்பல் கிளாஸ்கோவில் வெள்ளோட்டம் விடப்பட்டது.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: வார்சா ஜேர்மனியிடம் சரணடைந்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகியன முத்தரப்பு உடன்பாட்டில் பேர்லின் நகரில் கையெழுத்திட்டன.
- 1944- இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் கெசெல் நகர் மீது கூட்டுப்படைகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் அமெரிக்கப் படைகளுக்குப் பெரும் இழப்பை ஏற்படுத்திய தாக்குதல் ஆகும்.
- 1961 -சியேரா லியோன் ஐ.நாவில் இணைந்தது.
- 1964 -ஜான் எஃப். கென்னடியை லீ ஹாவி ஒஸ்வால்ட் என்பவன் வேறு எவரினதும் தூண்டுதலின்றிக் கொலை செய்ததாக வாரன் ஆணையம் அறிக்கை வெளியிட்டது.
- 1983 - ரிச்சார்ட் ஸ்டோல்மன் க்னூ செயற்றிட்டத்தைப் பகிரங்கமாக அறிவித்தார்.
- 1994 - மியான்மாரில் இராணுவ ஆட்சியை எதிர்க்க மக்களாட்சிக்கான தேசிய அமைப்பை ஆங் சான் சூகி உருவாக்கினார்.
- 1997 - செவ்வாய் தளவுளவியுடனான தொடர்புகள் துணடிக்கப்பட்டன.
- 1998 - கிளிநொச்சி நகரம் விடுதலைப் புலிகளினால் ஓயாத அலைகள் இரண்டு நடவடிக்கை மூலம் வெற்றி கொள்ளப்பட்டது.
- 1998 - கூகிள் தேடுபொறி ஆரம்பிக்கப்பட்டது.
- 2002 - கிழக்குத் தீமோர் ஐக்கிய நாடுகள் சபையில் இணைந்தது.


### பிறப்புகள்

- 1907 - பகத் சிங், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (இ. 1931)
- 1933 - நாகேஷ், நகைச்சுவை நடிகர் (இ. 2009)
- 1953 - மாதா அம்ருதானந்தமயி, இந்திய ஆன்மிகவாதி
- 1979 - லில் வெய்ன், அமெரிக்க ராப் இசைக் கலைஞர்


### இறப்புகள்

- 1907 - ஜேம்ஸ் எஸ. மார்ட்டின், யாழ்ப்பாணம் கத்தோலிக்க கார்டியன் பத்திரிகை ஆசிரியர்
- 1972 - எஸ். ஆர். ரங்கநாதன், இந்தியக் கணிதவிலாளர் (பி. 1892)
- 1996 - முகமது நஜிபுல்லா, ஆப்கானிஸ்தான் அதிபர் (பி. 1947)






ப.சதீஸ்குமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்




....இரண்டு டெஸ்ட் போட்டிகள் டிரா ஆன நிலையில் இந்தப் போட்டியில் இந்தியா வென்றால் மேற்கு இந்திய நாட்டில் இந்தியா பெறப்போகும் பிரம்மாண்ட வெற்றியாக அது கருதப்படும். எனவே, இந்திய அணியினர் பெரும் உற்சாகம் மற்றும் நம்பிக்கையுடன் ஆடத் துவங்கினார்கள்

ஆனால், நடந்ததோ வேறு. மேற்கு இந்திய அணியினர்கூட எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். சித்து, சச்சின், அசார் என அனைவரும் அடுத்தடுத்து ஆட்டம் இழக்க இந்தியா 120 ரன்கள் கூட எடுக்க முடியாமல் 81 ரன்களுக்கு ஆட்டம் இழந்தது. ஏன் எல்லோரும் சொல்லி வைத்ததுபோல் அவுட் ஆனார்கள் என்பது விளங்கவில்லை. இந்தியா படுகேவலமாகத் தோல்வியைத் தழுவியது. அடுத்து நடந்த இரு போட்டிகள் மீண்டும் டிராவில் முடிய மேற்கு இந்திய அணி 1-0 என்று தொடரை வென்றது. 120 ரன்கள் எடுத்து அந்தப் போட்டியில் இந்தியா வென்றிருந்தால் 1-0 என்ற கணக்கில் இந்தியா தொடரை வென்றிருக்கலாம். மேற்கு இந்திய மண்ணில் இந்தியா மற்றொரு சாதனை படைத்திருக்கும்.




டெஸ்ட் போட்டிகளைத். தொடர்ந்து நடைபெற்ற 4 ஒருநாள் போட்டிகளிலும் இந்தியா ஒன்றில் ஜெயிக்க மேற்கு இந்திய அணி மூன்றில் வெற்றிபெற்றது. ஆக, ஒருநாள் தொடரையும் மேற்கு இந்திய அணி 3-1 என்ற கணக்கில் வென்றது. ஸ்போர்ட் ஸ்டார் இதழுக்கு அளித்த பேட்டியில் சச்சின் பழைய நினைவுகளில் மூழ்கினார். பெவிலியன் திரும்பிய நான் சின்னக் குழந்தையைப்போலக் கதறி அழுதேன். என்னால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. போராடித் தோல்வி அடைவது வேறு விடயம். ஆனால் அனைத்து வீரர்களும் சேர்ந்து 120 ரன்கள்கூட எடுக்க முடியவில்லை என்றால் உங்களைத் தண்டித்தாலும் தவறில்லை என்று அணியின் பயிற்சியாளர் மதன்லால் கடும் கோபத்துடன் கத்தியது இன்னும் எனக்கு நினைவில் இருக்கிறது. இவ்வளவு மோசமாகவா ஆடினோம் என்பதை என்னால் இன்றைக்கும் நம்ப முடியவில்லை. போதிய

### அதிகாரம் இல்லாத கேப்டன் பதவி!

அவகாசம், விக்கெட்கள் கையிருப்பு இவ்வளவு இருந்தும் வெகு எளிதாக ஜெயிக்க வேண்டிய ஒருசில போட்டிகளின்போது மழை பெய்து எங்கள் வெற்றியைத் தடுத்துவிட்டது. அல்லது இதுபோல் வெற்றிபெறக் குறைந்த ரன்களே இருக்கும் நிலையில் வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டம் இழக்கின்றனர். எங்கள் வீரர்களின் திறமை குறைந்துவிட்டதா அல்லது அதிர்ஷ்டம் இல்லையா என்று தெரியவில்லை. மேலும் கேப்டனாக எனது அணியினர் நான் சொல்வதைக் கேட்பதில்லை. பந்தைத் தூக்கி அடிக்க வேண்டாம். தரையோடு தரையாக அடித்து விளையாடுங்கள் என்றால் யாரும் அதற்கு செவி சாய்ப்பதில்லை. அவுட் ஆன ஒவ்வொருவரும் பந்தைத் தூக்கி அடித்து காட்ச் கொடுத்தே அவுட் ஆனார்கள். இவர்கள் வேண்டும் என்றே தூக்கி அடித்து ஆட்டம் இழந்தார்களா என்றுகூட சந்தேகமாக இருக்கிறது. அணியின் நன்மையை உத்தேசித்து நான் சொல்வதை ஏன் புறக்கணிக்கிறார்கள் என்று தெரியவில்லை என்று எல்லாவற்றையும் கொட்டித் தீர்த்தார். மனதளவில் ரொம்பவே காயம்பட்டிருக்கிறார் என்பது மட்டும் புரிந்து.

தனக்குத் தேவையான வீரர்களை தேர்ந்தெடுத்துக் கொள்ள சச்சின் இதை நல்ல வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள எண்ணினார். கிரிக்கெட் வாரியத்தின் சுயரூபம் என்னவென்று கூட்டத்தின் போதுதான் சச்சின் தெரிந்து கொண்டார். கூட்டம் ஆரம்பித்த அரைமணி நேரத்திலேயே சச்சின் புயலென வெளியே வந்துவிட்டார்!

கே.ரமேஷ்

(தொடரும்)

---

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 28

## கவனத்தேவையை விட்டுவிடுதல்

...நீங்கள் உங்களுக்கு உள்ளேயுள்ள உங்களது சொந்த சக்தியில் மையம் கொள்ளாத பொழுது இவ்வாறு நிகழ்கிறது. வெளியிலிந்து வரும் செல்வாக்கால் நீங்கள் உயரமான நிலையிலிருந்து தாழ்வான நிலைக்கு இறங்கிவந்து விடுகிறீர்கள். நாம் நமக்குள் மையம் கொண்டுவிட்டால் வெளியிலிருந்து வரும் எதுவும் நம்மை அசைக்க முடியாது.

நாம் புகழையும், அங்கீகாரத்தையும் பெறுவதற்காகவே செயல்களைத் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறோம். ஆனால், அன்பு மற்றும் கடமை என்ற பெயரில் செய்கிறோம். மக்கள் என்னிடம் சொல்கிறார்கள் ஸ்வாமிஜி, நாங்கள் புகழுக்காகவோ அல்லது அங்கீகாரத்திற்காகவோ எதையும் செய்வதில்லை; மாறாக அது எங்கள் கடமை என்பதற்காகச் செய்கிறோம்.



தெளிவாக இருங்கள்; கடமைக்காகவே செய்கிறேன் என்று உரிமைகோரும் கணத்தில் நீங்கள் செய்யவிடில், மக்கள் உங்களை அங்கீகரிப்பதை நிறுத்திவிடுவார்கள். உங்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படும் ஒவ்வொரு சின்ன விடயத்தையும் நீங்கள் நிறைவேற்றும் வரைதான் மக்கள் உங்களை அங்கீகரிப்பார்கள். நீங்கள் செய்வதில் ஒரே ஒருமுறை தவறினாலும் உங்களுடனான அவர்களது உறவுமுறையில் ஒரு மாற்றம் ஏற்படுவதைக் காணலாம். உங்களுக்கு இது தெரியுமாதலால் உங்கள் கடமையைச் செய்கிறீர்கள்.

ஸ்வாமிஜி, நான் அவர்களின் தந்தை, அவர்களுக்கு நான் செய்யவில்லையென்றால் வேறு யார் செய்வார்கள்? என்று நீங்கள் சொல்லலாம். புரிந்துகொள்ளுங்கள். அவர்களுக்குச் செய்ய வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. நீங்கள்தான் அவர்களைப் பெற்றீர்கள். அவர்கள் வளர்ந்து சுதந்திரமாகத் தங்களுக்கு தேவையானவற்றை தாங்களாகவே செய்துகொள்ளும் வரை நீங்கள்தான் செய்ய வேண்டும். ஆனால், நீங்கள் என்ன செய்தாலும் எந்த விதமான எதிர்பார்ப்பும் இல்லாமல் செய்யுங்கள். அந்தச்செயல், உங்களுள் இருக்கும் அன்பான சக்தியின் வெளிப்பாடாக இருக்கும்.

இப்பொழுது. நீங்கள் எதையும் எதிர்பார்த்துச் செய்யவில்லை என்று உரிமை கோரலாம். ஆனால், எதிர்த்தரப்பிலிருந்து வரும் பதில் மரியாதை கொஞ்சம் குறைந்தாலும் உங்களுக்குள் ஏற்படும் மன இறுக்கம், போராட்டம், ஏமாற்றம் உங்களுக்குத் தெரியும். இந்த மன இறுக்கம், இந்தப் போராட்டம், இந்த ஏமாற்றம் ஆகியவை. உங்கள் கடமையைச் செய்த போது உங்களுக்குள் இருந்த எதிர்பார்ப்பின் விளைவு. இவற்றின் அளவு மனிதருக்கு மனிதர் வேறுபடலாம். ஆனால், கொஞ்சமாவது இருக்கும்.

அது இருக்கும்பொழுது உங்கள் செயல்கள் உங்களுக்குள் இருக்கும் உயிருள்ள சக்தியின் வெளிப்பாடாக இருக்காது. அளவிலும் தன்மையிலும் குறைந்த கடமை அல்லது பெயரளவிலான அன்பினால் செய்கிறீர்கள்.

பரமஹம்ஸ சுவாமி

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் சட்டத்தரணியை துடிதுடிக்கக் கொன்ற ஐ.எஸ்.ஐ.எஸ்



# அட்டூழியம் தொடர்கிறது

(பக்தாத்)

இஸ்லாமிற்கு எதிரான கருத்தை வெளியிட்டதாக ஈராக்கை சேர்ந்த பெண் சட்டத்தரணி ஒருவருக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் மரண தண்டனையை நிறைவேற்றியுள்ளனர்.

ஈராக்கை சேர்ந்த சமிர் சலி அல்-நுடாமி (Sameera Salih Alial-Nuaimy) என்ற பெண் சட்டத்தரணி, மனித உரிமை ஆர்வலராகவும் செயற்பட்டு வந்துள்ளார்.

இவர் பேஸபுக்கில் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் மொசூல் (Mosul) பகுதியில் உள்ள சமய அடையாளங்களை அழிக்கிறார்கள் என தகவல் ஒன்றை பதிவேற்றம் செய்திருந்தார்.

இதைப் பார்த்து கோப மடைந்த தீவிரவாதிகள், அவரை கடந்த 17 ஆம் திகதி கைது செய்து இஸ்லாமிய நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதுடன், இவர் இஸ்லாமிய மதத்திற்கு எதி ராக கருத்தை வெளியிட்டுள்ளதாக குற்றம் சாட்டியுள்ளனர்.

இதன்பின் குற்றவாளி என அறிவிக்கப்பட்ட நுடாமியை, தொடர்ந்து 5 நாட்களாக சித்திரவதை செய்த தீவிர வாதிகள், நேற்று முன் தினம் மாலை பொதுமக்கள் முன்னிலையில் அவருக்கு மரண தண்டனையை நிறைவேற்றியுள்ளனர்.

இச்சம்பவம் ஐ.எஸ். ஐ.எஸ்ஸின் காட்டுமிராண்டித்தனத்தை காட்டுவதாக ஐ.நா. தூதர் நிக்கோலாய் மிலேடெனொவ் (Nicoloy Mileydenav) தெரிவித்துள்ளார். (இ)

## பாகிஸ்தான் சிறையில் கைதிகள் மீது துப்பாக்கிச்சூடு

### ஒருவர் பலி

பாகிஸ்தானில் கிறிஸ்தவ சிறுபான்மையினர் நலனுக்காக பாடுபட்டு வந்தவர் போதகர் ஜப்பார்பட்டி.

இவர் 2012 ஆம் ஆண்டு முஸ்களுக்கு எதிரான கருத்தை தொலைபேசியில் குறுந்தகவல் மூலம் அனுப்பியதாக குற்றச்சாட்டு எழுந்தது. அதன் பேரில் கைது செய்யப்பட்டு, ராவலபிண்டி சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெற்று வந்தது.

இங்கிலாந்து நாட்டை சேர்ந்த முகமது அஸ்கார் என்பவர் மீதும் இதேபோன்ற குற்றச்சாட்டு கூறப்பட்டு அது நிரூபிக்கப்பட்டதையடுத்து மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இவர்கள் இருவரையும் சிறையில் பொலிஸார் ஒருவர் நேற்று முன்தினம் சரமாரியாக துப்பாக்கியால் சுட்டார். இதில் ஜப்பார்பட்டி இரத்த வெள்ளத்தில் துடிதுடித்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். முகமது அஸ்கார் படுகாயம் அடைந்தார். (இ)

## 101 ஆண்டுகளுக்கு பின் முதல் பெண் குழந்தை

(லண்டன்)

பிரித்தானியாவில் வசிக்கும் குடும்பமொன்றில் 101 ஆண்டுகளுக்கு பின்னர் முதல் தடவையாக பெண் குழந்தை ஒன்று பிறந்துள்ளது.

பிரித்தானியாவின் டிவெர்டன் (Tiverton) மாகாணத்தை சேர்ந்த சில்வெர்டன் (Silverton) என்ற நபரின் குடும்பத்தில், கடந்த 1913 ஆம் ஆண்டிலிருந்து ஆண் குழந்தைகள் மட்டுமே பிறந்துள்ளனர்.

இவ்வாறு 4 தலைமுறைகளாக ஆண் வாரிசை மட்டுமே பார்த்த இந்த குடும்பத்திற்கு, தற்போது பெண் குழந்தை பிறந்துள்ளது, குடும்ப உறுப்பினர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

மேலும் ஆண் குழந்தையை மட்டுமே பெற்ற இந்த வம்சத்தில் பெண் குழந்தையொன்று முதல் தடவையாக பிறப்பது 10 ஆயிரம் பிறப்புகளுக்கு ஒரு பிறப்பு என்ற வீதத்தில் இடம் பெறும் அபூர்வ நிகழ்வு என கூறப்படுகிறது. (இ)

## மாணவன் படுகொலை

கனேடிய பாடசாலை ஒன்றில் கொல்லப்பட்ட மாணவனின் பெற்றோர் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர்.

கனடாவின் றொறன்ரோ (Toronto) மாகாணத்தில் உள்ள (North Albion Collegiate Institute) பாடசாலையில் பயின்ற மாணவன் ஒருவன் சகமாணவர்களின் மோதலைதடுக்கச் சென்ற போது கொல்லப்பட்டுள்ளான்.

தங்கள் கண்முன்னேயே மகன் இறந்த சம்பவம், மாணவனின் பெற்றோரை கண்ணீர் வெள்ளத்தில் நனைய வைத்துள்ளது.

இவர்களது குடும்பம் அண்மையில் ஆப்கானிஸ்தானில் இருந்து கனடாவிற்கு குடியேறியுள்ளது.

இதுகுறித்து மாணவனின் தந்தை கூறுகையில், பாதுகாப்பாக இருப்பான் என நினைத்துத் தான் அவனை பள்ளிக்கு அனுப்பினோம் என்றும் இவ்வாறு ஒரு அசம்பாவிதம் நிகழும் என்பதை சற்றும் எதிர்பார்க்கவில்லை எனவும் தளதளர்த்த குரலில் கூறியுள்ளார்.

மேலும் இச்சம்பவம் தொடர்பாக 17 வயது நிரம்பிய நபர் ஒருவர் பொலிஸில் சரணடைந்துள்ளதாக கூறப்படுகிறது.(இ)

## இஸ்ரேலின் அணுசக்தி ஆயுதங்கள் மீது ஐ.நாவில் கொண்டுவரப்பட்ட தீர்மானம்

# தோல்வி

அரபு நாடுகள் அனைத்தும் அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதன் மூலம மத்திய கிழக்குப் பகுதியில் அணு ஆயுதம் இல்லாத மண்டலம் உருவாக்கப்பட வேண்டும் என்று உலக நாடுகள் முயற்சித்து வருகின்றன.

இஸ்ரேலில் செயலற்பட்டு வரும் யூத அரசு பெருமளவில் அணுசக்தி ஆயுதங்களை வைத்திருப்பதாகக் கருதப்படும்போது இந்தத் தகவலை ஊர்ஜிதப்படுத்த அந்த நாடு மறுத்து வருகின்றது.

சென்ற ஆண்டு நடைபெற்ற ஐ.நா. அணுசக்தி வருடாந்திர மாநாட்டில் இஸ்ரேலின் அணு ஆயுதக் குவிப்பு பற்றிய ஒரு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டபோது அது தோல்வியில் முடிந்தது.

இதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு நேற்று முன்தின கூட்டததிலும் சிரியா உட்பட 18 நாடுகள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தன.

அணு ஆயுத பரவல் தடை சட்டத்தில் கையொப்பமிட இஸ்ரேலை வலியுறுத்தும் இந்தத் தீர்மானத்தினை முன்வைத்த குவைத் தூதுவர சாதிக் மராபி மத்திய கிழக்கு பகுதியில் அணு ஆயுதங்கள் இல்லா மண்டலத்தை உருவாக்க இஸ்ரேல் மட்டுமே தடையாக இருப்பதாகக் குறிப்பிட்டார்.

இந்தத் தீர்மானத்திற்கு முன்னோடியாக ஒரு ஆதரவுத் தீர்மானத்தை எகிப்து கொண்டுவந்தபோது 13 உறுப்பினர்கள் இல்லாத நிலையில் மீதி அனைவருமே இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

ஆனால், அதன்பின் நடந்த வாக்கெடுப்பில் 27 உறுப்பினர்கள் வராத நிலையில் 58- 45 என்ற வாக்கு எண்ணிக்கையில் இந்தத் தீர்மானம் தோல்வியைத்தழுவியது. இந்த முடிவினை வரவேற்ற இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு" அரபு நாடுகளால் கொண்டுவரப்பட்ட தீர்மானமானது இஸ்ரேலுக்குத் தீங்கை விளைவிப்பதாகும் என்று குறிப்பிட்டார்.

இஸ்ரேலுக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்காவும் ஏற்கவில்லை. பிராந்தியக் கட்சிகளிடத்தில் நம்பிக்கை குறையும்போது ஆக்கபூர்வமான உரையாடல்களுக்கான வாய்ப்புகளும் குறைந்துவிடும் என்று வாக்கெடுப்பின்போது அமெரிக்கத் தூதரானலாரா கென்னடி தெரிவித்தார். (இ)

# எபோலாவை எதிர்க்க உலக வங்கி நிதி உதவி

மேற்கு ஆபிரிக்க நாடான கினியாவில் கடந்த பெப்ரவரி மாதம் இனம் காணப்பட்ட எபோலா என்னும் விஷத் தொற்றுநோய் அண்டை நாடுகளான லைபீரியா, சியராலியோன், நைஜீரியா ஆகிய நாடுகளுக்கும் பரவியுள்ளதில் இதுவரை 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

தொடர்ந்து அதிகரித்து வரும் இந்த நோய்த்தாக்கத்தைக் கட்டுப்படுத்த அந்த நாடுகள் போராடி வருகின்றன.

பொருளாதார நிலையில் பின்தங்கியுள்ள இந்த நாடுகளுக்கு அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளின் அமைப்புகள் உதவி செய்து வருகின்றன.

இந்த வகையில் இன்னும் 170 மில்லியன் டொலர் அதிக நிதி உதவி அளிப்பதாக உலக வங்கி நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

இதன்மூலம் எபோலா நோய்க்கு எதிரான போராட்டத்தில் உலக வங்கியின் பங்களிப்பு இரட்டிப்பாகின்றது. உலக நாடுகளின் வறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையைப் போக்க உதவும் விதமாக கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு உலக வங்கி உருவாக்கப்பட்டது.

அமெரிக்காவின் வோஷிங்டனைத் தலைமையகமாகக்கொண்டு செயற்படும் இந்த வங்கி எபோலா நோயினால் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ள கினியா, லைபீரியா , சியராலியோன் ஆகிய மூன்று நாடுகளுக்கும் ஏற்கனவே 230 மில்லியன் டொலர் நிதி உதவி அளித்துள்ளது.

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள இந்த புதிய உதவித் தொகைக்கு வங்கியின் நிர்வாகக் குழு ஒப்புதல் அளிக்க வேண்டும்.

நோயினால் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ள இந்த மேற்கு ஆபிரிக்க நாடுகளில் சுகாதாரத் தொழிலாளர்களையும், தேவையான மருத்துவ வசதிகளையும் அதிகரித்துக் கொள்ளுவதன் மூலம் அங்குள்ள சுகாதார அமைப்புகளை வலுப்படுத்திக் கொள்ள இந்தநிதி உதவி பயன்படுத்தப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)

### இந்திய பெருங்கடல் பகுதியில் சீன போர்க்கப்பல்கள்

# குவிப்பு

## இந்திய கடற்படை தீவிர கண்காணிப்பு



காஷ்மீரின் லடாக் பகுதியில் இருந்து 300 கி.மீ.க்கு அப்பால், இமாச்சல பிரதேச எல்லையில் அமைந்துள்ள சுமர் பகுதியில், சீன இராணுவம் கடந்த 10ஆம் திகதி அத்துமீறி நுழைந்தது. அங்கு தொடர்ந்து குவிக்கப்பட்டு வரும் ஏராளமான வீரர்களுக்கு, சீன இராணுவ ஹெலிகொப்டர்கள் மூலம் தினமும் உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த பகுதியில் இருந்து வெளியேறுமாறு சீன வீரர்களுக்கு இந்திய அதிகாரிகள் எசசரிக்கை விடுத்ததை தொடர்ந்து, இரு நாட்டு இராணுவ அதிகாரிகளுக்கு இடையே 2 முறை கொடி கூட்டம் நடந்தது. ஆயினும் கடந்த 2 வாரங்களுக்கும் மேலாக சீன வீரர்கள் அங்கேயே தங்கியுள்ளனர்.

இந்தநிலையில் சீன இராணுவத்தின் வேண்டுகோளின் பேரில் நேற்றுமுன்தினம் மாலை மீண்டும் இரு நாட்டு அதிகாரிகளிடையே கொடி கூட்டம் நடத்தப்பட்டது. இந்திய எல்லைப் பகுதியான சுஷல் பகுதியில் இருந்து ஒரு கி.மீ.க்கு அப்பால் உள்ள சீன பகுதியான ஸ்பங்குர்கப் பகுதியில் இந்த கூட்டம் நடந்தது.

இவ்வாறு தரைவழி எல்லைப் பகுதியில் இராணுவதை குவித்து வரும் சீனா, சமீபகாலமாக கடல் பகுதியிலும் தனது படைகளை குவிக்க தொடங்கியுள்ளது. அதன்படி இந்திய பெருங்கடல் பகுதியில் ஏராளமான சீன போர்க்கப்பல்கள் நிறுத்தப்பட்டு உள்ளன.


இதை உறுதிப்படுத்தியுள்ள இந்திய இராணுவ் தளபதி ராபின் தோவன், சீனாவின் எவ்வித சவாலையும சமாளிக்க தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார். டில்லியில் நேற்றுமுன்தினம் நடந்த கடற்படை நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட அவர், பின்னர் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய பெருங்கடல் மண்டலம், நமது படைகளின் நடவடிக்கைக்கு உரிய பகுதியாகும். ஆனால் இந்த மண்டலத்தில் சீன போர்க்கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளன. அவற்றின் நடவடிக்கைகளை நாங்கள் தீவிரமாக கண்காணித்து வருகிறோம்.

அந்த கப்பல்களால் எவ்வாறு எங்களுக்கு சவால்களை அளிக்க முடியும்? அவற்றின் சவால்களை எவ்வாறு எதிர்கொள்ள முடியும்? என்பது குறித்து நாங்கள் தீவிரமாக ஆய்வு செய்து வருகிறோம்.

இருப்பினும் நம்முடைய விமானங்கள், நீர்மூழ்கி கப்பல்கள் மற்றும் போர்க் கப்பல்கள் எப்போதும் அப்பகுதியில் நிறுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் சீன கடற்படையின் எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ளவும் எப்போதும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

இவ்வாறு கடற்படை தளபதி ராபின் தோவன் மேலும் தெரிவித்தார். (இ)




## ஐ.எஸ்.ஐ.எஸ் உளவாளிகளுக்கு ஒக்டோபர் 9வரை விளக்கமறியல்

(சென்னை)

பாகிஸ்தான் ஐ.எஸ். ஐ.எஸ உளவாளியான ஜாகீர் உசேன் என்பவரை கடந்த வருடம் தேசிய புலனாய்வு பிரிவு பொலிஸார் கைது செய்தனர். அவர் மீது போலி நாணயத்தாள் வழக்கும் உள்ளது. மேலும் அவரது கூட்டாளிகளான சிவபாலன், முகமது சலீம், ரபீக் ஆகியோரையும் பொலிஸார் கைது செய்தனர.

விருகம்பாக்கத்தை அடுத்த சாலிகிராமத்தில் அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வந்த மற்றொரு பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ.எஸ் உளவாளியான அருண்செல்வராஜனையும் தேசிய புலனாய்வு பொலிஸார் கடந்த 10ஆம் திகதி கைது செய்து புழல் சிறையில் அடைத்தனர்.

இந்த நிலையில் ஜாகீர் உசேன், அருண்செல்வராஜன் உள்ளிட்ட 5 பேரின் நீதிமன்ற காவல் முடிவடைந்தது. இதையடுத்து 5 பேரையும நேற்றுமுன்தினம் தேசிய புலனாய்வு பொலிஸார் பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றத்தில் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் நீதிபதி மோனி முன்னிலையில் ஆஜர்படுத்தினார்கள்.

நீதிபதி மோனி, 5 பேருக்கும் அடுத்த மாதம் (ஒக்டோபர்) 9ஆம் திகதி வரை நீதிமன்ற காவலை நீட்டித்து உத்தரவிட்டார். இதையடுத்து 5 பேரையும் பொலிஸார் வாகனத்தில் ஏற்றி மீண்டும் புழல் சிறைக்கு கொண்டு சென்றனர். (இ)

## இந்தியாவில் தயாரிப்புத் துறையை ஊக்குவிக்க புதிய திட்டம் தொடக்கம்

### பிரதமர் மோடி ஆரம்பித்து வைத்தார்

இந்தியாவில் தயாரிப்புத் தொழில்துறையை ஊக்குவிக்க சர்வதேச நிறுவனங்களுக்கு அழைப்பு விடுவதை நோக்கமாகக் கொண்ட மேக் இன் இந்தியா திட்டத்தை இந்திய பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் வியாழக்கிழமை தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின் கீழ், கார் தயாரிப்பு, மருந்து தயாரிப்பு, மரபு சாரா எரிசக்தி, தகவல் தொழில்நுட்பம் போன்றவை உள்ளிட்ட 25 துறைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன, இத்துறைகளில் முதலீடுகளை ஊக்குவிக்க அதிகார வர்க்கத் தடைகளைக் குறைத்து, கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, சில தொழிலாளர் நலச் சட்டங்களை தளர்த்த, இத்திட்டம் உறுதி கூறுகிறது.

மேக் இன் இந்தியா தொடக்க விழாவில், வர்த்தக துணை அமைச்சர் நிர்மலா சீதாராமன், இந்திய தொழிலதிபர்கள் முகேஷ் அம்பானி, குமார் மங்கலம் பிர்லா, சிரஸ் மிஸ்ட்ரி, ஆசிம் பிரேம்ஜி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்தியாவில் தொழில் தொடங்குவதற்கான நடைமுறைகளை எளிதாக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்றும் இந்தியாவில் தொழில் தொடங்க உரிமங்கள் வழங்குவதை எளிதாக்குவதன் மூலம் இந்தியாவை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்ல அரசு திட்டமிட்டுள்ளது என்றும் வர்த்தகத் துறை துணை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். (இ)




### மஹாராஷ்டிரத் தேர்தல்

## இரு கூட்டணிகளும் முறிந்தன


(சென்னை)

இந்தியாவை ஆளும் பாரதீய ஜனதா கட்சி, சிவ சேனாவுடனான தனது நீண்ட கால அரசியல் உறவை முறித்துக் கொண்டுள்ளது.

மிகுந்த மன வருத்தத்துடன் இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று மராட்டிய மாநில, பாரதீய ஜனதா கட்சியின் தலைவரான ஏக்நாத் காட்சே அறிவித்தார்.

இந்த இரு கட்சிகளுக்கும் இடையே கடந்த 25 ஆண்டுகளாக அரசியல் கூட்டணி நிலவி வந்தது.

மராட்டிய மாநில சட்டமன்றத்துக்கு தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இரு கட்சிகளுக்கும் இடையே தொகுதிகளை பங்கிட்டுக் கொள்வதில் கடும் இழுபறி நிலவி வந்தது.



பல நாட்களாக தீவி ர மான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வந்தாலும், அதில் உடன்பாடு ஏற்படவில்லை.

இதையடுத்து சிவ சேனாவுடனான தமது அரசியல் உறவை முறித்துக் கொள்வதாக பாஜக நேற்று முன்தினம் அறிவித்தது.

காங்கிரஸ் -தேசியவாத காங்கிரஸ் உறவும் முறிந்தது

இதனிடையே மராட்டிய மாநிலத்தில் இப்போது ஆட்சியில் இருக்கும் காங்கிரஸ்-தேசியவாதக் காங்கிரஸ் கூட்டணியும் முறிந்து போயுள்ளது.

தொகுதிப் பங்கீட்டில் உடன்பாடு ஏற்படாத காரணத்தாலேயே இந்தக் கூட்டணியும் முறிந்துள்ளது.

அங்கு நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலில், தேசியவாதக் காங்கிரஸ் தனியாகப் போட்டியிடும் என்று அக்கட்சியின் தலைவர் பிரபுல் பட்டேல் மும்பையில் அறிவித்தார். (இ)

## படைகளினை விலகிக்கொள்ள இந்தியாவிடம் சீனா ஒப்புதல்



### சுஷ்மா தகவல்

(சென்னை)

ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூட்டத்தில் பங்கேற்பதற்காக அமெரிக்கா சென்றுள்ள மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவ ராஜ், நியூயோர்க் நகரில் இந்திய பத்திரிகையாளர்களுக்கு நேற்று முன்தினம் பேட்டியளித்தார்.

இந்தியா-சீனா எல்லையில் உள்ள லடாக்கின் சுமர் பகுதியில் நிலவி வரும் பதற்ற நிலை தொடர்பாக சீன வெளியுறவுத் துறை அமைச்சர் வாங்யி-யுடன் பேசியது என்ன? என்பது தொடர்பாக பத்திரிகையாளர்களிடம் விபரித்த சுஷ்மா சுவராஜ் கூறியதாவது,

சீன ஜனாதிபதியின் வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்திய வருகை, நல்ல பலனையளித்திருந்த நிலையில், அவரது பயணத்தின்போது எல்லையில் நிகழ்ந்த சம்பவமானது, அந்தப் பலனின் மீது ஒரு நிழலைப் படியச் செய்துவிட்டது.

இந்தியா-சீனா இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை மூலம் எல்லையில் நிலவி வந்த பதற்றநிலை தீர்க்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். எல்லைப்பகுதியில் இருந்து இரு நாடுகளும் படைகளை விலக்கிக் கொள்வதற்கான காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதிக்குள் எல்லையை கடந்து முன்னேற இருந்த இரு நாட்டுப் படைகளும் லடாக் பகுதியில் இருந்து திரும்பப் பெறப்படும். செப்டெம்பர் முதலாம் திகதிக்கு முன்னர் எந்த நிலையில் இருந்தனவோ.., அதே நிலையில் இரு நாட்டு படைகளும் நிலை நிறுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றத்தின் சாட்சி!




ஐக்கிய தேசியக் கட்சி நீண்ட காலத்துக்குப் பின் உண்மையான எதிர்க்கட்சியாக, தேர்தலொன்றை வெற்றிகரமாக எதிர்கொண்டிருக்கிறது.

தொடர்ச்சியாக வெற்றிகளைப் பெற்றுவந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தை ஊவா மாகாண சபைத் தேர்தலில் அதிகமாகவே பதற்றமடைய வைத்திருக்கிறது ஐக்கிய தேசியக் கட்சி. அதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

வடக்கு, கிழக்கு மாகாண சபைத தேர்தல்கள் தவிர்ந்து மற்றைய மாகாணங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இலகுவான வெற்றிகளையே பெற்று வந்திருக்கிறது.

வடக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் முற்றாக இழந்தாலும் கூட, கிழக்கில் முஸ்லிம் காங்கிரஸின் பங்களிப்போடு ஆட்சியமைத்திருக்கிறது. ஆனால், ஊவா மாகாண சபைத் தேர்தலில் கத்திமுனையின் மீது நடந்தே வெற்றியைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறது.

இது, அரசாங்கத்தின் மீதான மக்கள் எதிர்ப்பலையின் எழுச்சியாகவும் ஓரளவுக்குக் கொள்ள முடியும். அல்லது, அரசாங்கத்தின் வீழ்ச்சி ஆரம்பித்து விட்டதற்கான அறிகுறியாகக் கொள்ள முடியும்.

உள்ளூராட்சி மன்றங்கள், மாகாண சபைகள், நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் என்று தொடர்ச்சியாக தேர்தல்களினால் நிறைந்த இலங்கை போன்றதொரு நாட்டில் ஆளுங்கட்சிக்கு அழுத்தமான போட்டியை கொடுக்கக் கூடிய எதர்க்கட்சியொன்று மிகவும் அவசியமானது. அதுதான், அரசாங்கத்தை ஓரளவு மக்களோடு நெருங்கி உண்மையாக நடக்க வைக்கும். ஆனாலும், இலங்கையில் அது அவ்வளவு சாத்தியமாக இருக்கவில்லை.

குறிப்பாக, ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்ற காலம் முதல் சுமார் 9 ஆண்டுகள் ஐக்கிய தேசியக் கட்சியினால் எந்தப் பக்கத்திலும் தன்னைப் பலமான சக்தியாக முன்னிறுத்த முடியவில்லை.

மாறாக, பேச்சளவில் எதிர்க்கட்சியாக மட்டுமே செயற்பட முடிந்தது. இப்படியான நிலையில், தன்னை ஓரளவுக்கு ஒருங்கிணைத்துக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி, ஊவாவில் தேர்தலை எதிர்கொண்டு எதிர்பார்த்த வெற்றியை பெற முடியாவிட்டாலும், எதிர்கால வெற்றிக்கான அடித்தளத்தை பலமாகவே இட்டிருக்கிறது.

ஊவா மாகாண சபைத் தேர்தலை அடுத்த நாடாளுமன்றத் தேர்தலோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளலாம். (அடுத்த வருட ஆரம்பத்தில் நடைபெறவுள்ளதாக கூறப்படும் ஜனாதிபதித் தேர்தலோடு அல்ல) ஏனெனில், ஊவா மாகாண சபையின் ஆட்சி அதிகாரம் என்பது சிறுபான்மைச் சமூகங்களின் வாக்குகளினாலும் தீர்மானிக்கப்பட்டு வந்திருக்கிறது. குறிப்பாக, மலையகப் பெருந்தோட்ட தமிழ் மக்களின் வாக்குகளால்.

ஊவாவில் மலையகப் பெருந்தோட்ட மக்களின் வாக்குகளை நாடாளுமன்றத் தேர்தலோடு ஒப்பிடும்போது சிறுபான்மைச் சமூகங்களின் வாக்குகள் என்று கொள்ளலாம். போர் வெற்றியொன்றை முன்னிறுத்தி இனி மஹிந்த ராஜபக்ஷவால் தேர்தல்களை பெரிதாக எதிர்கொள்ள முடியாது.

அப்படியான நிலையில் சிங்கள பெரும்பான்மை மக்களின் வாக்குகளும் தமது கட்சி, அரசாங்கத்துக்கான ஆதரவு மற்றும் எதிரான நிலைப்பாடுகளைப் பொறுத்து பிரிந்து செல்லும். எனவே, அறுதிப் பெரும்பான்மை வெற்றியொன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் மீண்டும் பெற முடியாது. ஆக, சிறுபான்மை மக்களின் வாக்குகளும், அவர்கள் தெரிவுசெய்யும் உறுப்பினர்களும் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக மீண்டும் உருவெடுப்பார்கள்.

**கொஞ்சம் விரிவாகப் பார்க்கலாம்**, எதிர்வரும் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை வெற்றி கொள்வதற்கான வேட்பாளர் எதிர்த்தரப்பில் இப்போதைக்கு இல்லை. அதுபோக, ஜனாதிபதித் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அவ்வளவு ஆர்வமும் கொள்ளவில்லை. ஏனெனில், ஜனாதிபதித் தேர்தலை தம்மால் வெற்றி கொள்ள முடியாது என்ற நிலையிலேயே எதிர்க்கட்சிகள் இருக்கின்றன.

ஆனால், அதன்பின்னர் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை நோக்கி தமது அரசியல் பயணம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் சிந்திக்கலாம்.

தமது தோல்விகளுக்கு மருந்திட்டு வெற்றிகளை நோக்கி பயணிக்கலாம். இந்த இடத்தில் சரத் பொன்சேனாவின் ஜனநாயகக் கட்சி மக்களிடம் மதிப்பிழந்து காணாமல் போய்க் கொண்டிருக்கின்றது என்ற உண்மையையும் கண்டுகொள்ளலாம்.

ஊவா மாகாண சபைத் தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத் தேர்லொன்றை எதிர்கொள்வது மாதிரியான நிலையிலேயே இருந்தது. கட்சிக்குள்ளும், ஆதரவாளர்களுக்குள்ளும் குறிப்பிட்டளவு மதிப்புப்பெற்ற ஹரின் பெர்ணான்டோ தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துவிட்டு முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட்டது பெரும் நம்பிக்கையை அளித்தது.

அது, பிரிந்து நின்று சண்டையிட்டுக் கொண்டிருந்த கட்சியின் சிரேஷ்ட தலைவர்களை ஒன்றிணைய வைத்து மக்களையும் கட்சி ஆதரவாளர்களையும் நேரடியாகக் சந்திக்க வைத்தது.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் தயாசிறி ஜயசேகர, ஹரீன் பெர்ணான்டோ உள்ளிட்ட இளைய தலைவர்களுக்கு இளையோருக்கிடையில் பெரும் வரவேற்பு எப்போதுமே இருந்தது.

குறிப்பாக, சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி பயணிக்க வேண்டும் என்று விரும்பும் கட்சி ஆதரவாளர்களுக்கு இடையில். ஆனால், அது சாத்தியமாகாத நிலையில், அந்த ஆதரவாளர்கள் தேர்தல்களைப் புறக்கணிக்க தொடங்கிவிட்டனர்.

இப்படியான நிலையில்தான், தயாசிறி ஜயசேகர ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி வடமேல் மாகாண சபைத் தேர்தலில் அரசாங்கத்தோடு இணைந்து சுமார் மூன்று இலட்சம் வாக்குகளைப் பெற்று முதலமைச்சரானார். இது, இன்றளவும் சாதனையாக இருக்கின்றது. (வாக்குகளின் அடிப்படையில்) ஆனால சதவீதத்தின் அடிப்படையில் ஹரின் பெர்ணான்டோவே முன்னிலையில் இருக்கின்றார்.

ஆனால், தயாசிறி ஜயசேகர எடுத்த முடிவை ஹரின் பெர்ணான்டோ எடுக்கவில்லை. அவர், தன்னுடைய கட்சியின் வெற்றிக்காகவும், தன்னுடைய தனிப்பட்ட செல்வாக்கை உணர்த்துவதற்காகவும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்து ஊவா மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டார்.

அது, ஊவாவில் ஆட்சியமைக்கும் அளவு வெற்றியைக் கொடுக்கவில்லை என்றாலும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும், அவருக்கும் குறிப்பிட்டளவு வெற்றியைக் கொடுத்திருக்கிறது. அத்தோடு, அவரை கட்சியின் முக்கியஸ்தர்கள் வரிசையில் இடம் பிடிக்க வைத்திருக்கிறது. அதாவது, செயற்குழுவுக்குள் அவரும் உள்ளடக்கப்படவுள்ளார். அதுவும், சஜித் பிரேமதாஸ மீண்டும் கட்சியின் பிரதித் தலைவராக பதவியேற்றதனால் அது இன்னமும் முக்கியத்துவம் பெறுகின்றது.

2009ஆம் ஆண்டு இடம்பெற்ற ஊவா மாகாண சபைத் தேர்தலோடு ஒப்பிடும்போது அரசாங்கததுக்கு இம்முறை சுமார் 75,000 வாக்குகள் குறைந்திருக்கின்றன. ஆனால், மறுபுறத்தில் ஐக்கிய தேசியக் கட்சி 145,000 வாக்குகளை அதிகமாகப் பெற்றிருக்கிறது.

இது, பெரும் மாற்றமொன்றின் சாட்சி. இதில், குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில், ஊவாவில் அரசாங்கத்தைக் தக்கவைப்பதற்கு மலையகப் பெருந்தோட்ட மக்களின் சுமார் 60,000 வாக்குகள் உதவியிருக்கின்றன. ஒப்பீட்டளவில் இது, ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்த (சுமார் 40,000) மலையகப் பெருந்தோட்ட மக்களின் வாக்குகளைவிடவும் அதிகமென்று கொள்ள முடியும்.

இன்னொருபுறம் 35,000 அளவிலுள்ள முஸ்லிம் மக்களின் வாக்குகள் ஐக்கிய தேசியக் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ்- அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கூட்டணிக்குள் சிதறுண்டுவிட்டது. இதனால், அவர்களினால் ஒரு உறுப்பினரைக் கூட பெற்றுக்கொள்ள முடியவில்லை என்ற சோகமும் மேலெழுந்து நிற்கிறது. 2009 ஆம் ஆண்டுத் தேர்தலிலுமகூட முஸ்லிம் வேட்பாளர் ஒருவர் ஊவாவில் வெற்றி பெற்றிருக்கவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

பதுளை, மொனராகலை ஆகிய இரு மாவட்டங்களையும் உள்ளடக்கிய ஊவா மாகாண சபையில் சிங்கள மக்களின் வாக்களிப்பில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றத்தை அல்லது அண்மைக்கால தேர்தல்களில் வாக்களிக்காது இருந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் நம்பிக்கையாக தேர்தல்களை எதிர்கொள்ள தயாராகிவிட்டனர் என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

ஊவாவில் அதிகளவான தேர்தல் வன்முறைகளும், அத்துமீறல்களும் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

அதுவும், வரட்சி நிவாரணங்களை தேர்தல் காலத்தில் வழங்கக் கூடாது என்று நீதிமன்றம் உத்தர விட்டிருந்த நிலையில், ஊவாவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் வரட்சி நிவாரணங்கள் வழங்கப்பட்டன.

இப்படியான நிலைகளைத்தாண்டியும் சிங்கள மக்களின் வாக்களிப்பில் பெரும் மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது என்பதைக் கண்டுகொள்ள முடிகிறது.

அதுவும், ஜனாதிபதி தலைமையில் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் அனைவரும் நாடாளுமன்றத் தேர்தலொன்றை எதிர்கொள்வது மாதிரியே ஊவா தேர்தலை எதிர்கொண்டிருந்தனர். ஆனாலும், ஏற்பட்டிருக்கிற வீழ்ச்சியை யாராலும் நிராகரித்து விட முடியாத அளவுக்கு மாறிவிட்டிருக்கிறது.

இப்படியான நிலையில், அடுத்த பாராளுமன்றத் தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு அரசாங்கம் தயாராக இருக்காது. ஜனாதிபதித் தேர்தலையும்- நாடாளுமன்றத் தேர்தலையும் வேறுவேறாக அணுக வேண்டிய தேவையுள்ளது. எனவே, இப்போதுள்ள அறுதிப்பெரும்பான்மையுள்ள நாடாளுமன்றத்தை விரைவாக கலைத்து அரசாங்கம் சிக்கலை தேடிக்கொள்ளாது.

ஆக, தற்போதுள்ள நாடாளுமன்றத்தின் முழுமையான பதவிக்காலம் முடிந்த பின் 2016 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிலேயே நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. அப்படி நோக்கினால் அதற்கு இன்னமும் 19 மாதங்கள் இருக்கின்றது.

19 மாதங்கள் என்பது ஐக்கிய தேசியக் கட்சிகள் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுக்கு கிடைத்திருக்கின்ற பெரும் காலம். இதனை எவ்வாறு கையாண்டு இன்னமும் மக்களிடம் நெருங்கிச் செல்கின்றனவோ, அல்லது அரசாங்கத்தின் மீதான எதிர்ப்பு மனநிலையை தங்களுக்கு சாதக மாக மாற்றிக் கொண்டு வருகிறார்களோ, அது அடுத்த பாராளுமன்றத் தேர்தலை வெற்றி கொள்வதற்கான வாய்ப்புக்களை வழங்கும்.

அதற்குள், கட்சிகளை இன்னமும் பலப்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. உறங்கு நிலையில் இருக்கும் கட்சி ஆதரவாளர்களுக்கு ஊவா மாகாண சபைத் தேர்தலை உதாரணமாக காட்டி முன்னுக்கு கொண்டு வர வேண்டும். குறிப்பாக, அதை, ஐக்கிய தேசியக் கட்சியால் செய்ய முடிந்தால் வெற்றிக் கனவை நனவாக்குவது தொடர்பில் சிந்திக்க முடியும்.

மாறாக, மீண்டும் கட்சியின் சிரேஷ்ட தலைமைகள் தங்களுக்குள் அதிகார போட்டியை முன்னிறுத்தி சண்டையிட்டுக் கொண்டிருந்தால், இப்போது தோற்றம் பெற்றுள்ள ஆட்சிக்கான சந்தர்ப்பத்தை உருவாக்குவதற்கான களங்கள் இல்லாமற்போகலாம். அப்படிப்போனால், மீண்டும் 2022 வரை காத்திருக்க வேண்டியிருக்கும். அது, சிலவேளை ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளிருந்து இன்னும் அதிகமானவர்களை வெளியேற்றிவிடும்.

போர் வெற்றிகள் என்ற உணர்ச்சி வாக்குகள் இனி இல்லை. இனி, வாழ்க்கைச் செலவு, ஆட்சியின் மீதான ஆதரவும் அதிருப்தியும், சர்வதேசத்தின் இலங்கை மீதான அழுத்தங்களை முன்னிறுத்திய தேர்தல் உணர்ச்சியூட்டும் நடவடிக்கைகள் மற்றும் இனக்குரோத எண்ணங்களின் மீள் எழுச்சிக்கான செயற்பாடுகள் என்பனவே தேர்தலின் முடிவுகளைத் இலங்கையில் தீர்மானிக்கப் போகின்றன. இவற்றைக் கடந்து ஜனநாயகத்தை உண்மையாக நிலைநிறுத்தும் நீதியான தேர்தல் நடைபெறும் பட்சத்தில் அது இறுதி முடிவில் அதிகமாக தாக்கம் செலுத்தும்.

ஆக, இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி இனிவரும் 19 மாதங்களையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் பட்சத்தில் அறுதிப பெரும்பான்மையுள்ள அரசாங்கமொன்றை அமைக்க முடியாவிட்டாலும், கூட்டணிகளின் ஆதரவோடு ஆட்சியைக் கைப்பற்றும் சூழ்நிலைகள் இருக்கின்றது.

இங்கு இன்னொரு விடயம் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கின்றது. தெற்காசிய அரசியல் அதிகம் உணரச்சி யூட்டும் நடவடிக்கைகளினால் தீர்மானிக்கப்பட்டு வந்திருக்கிறது. அப்படியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு ஏதாவது நிழ்ந்தால் மாற்றங்கள் சாத்தியமில்லாமல் போகலாம்.

அதனை யாரும் மறுப்பதற்கில்லை. அதுவும், இலங்கை போன்றதொரு நாட்டில் அது இயல்பானது. ஆனாலும், ஊவா மாகாண சபைத தேர்தல் உணர்த்துவது என்னவோ ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிகள் நோக்கிய பயணத்தின் ஆரம்ப அறிகுறிகளையே....!

*-தமிழ்மிரர்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எல்லை மீறும் ஹெலஉறுமய

## பள்ளிவாசலில் படையினர் சோதனையிட வேண்டுமாம்

நாட்டின் பள்ளிவாசல்களில் புலனாய்வுப் பிரிவினரும், பொலிஸாரும், படையினரும் சோதனை நடத்த வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கடசியின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்துள்ளார். பள்ளிவாசலில் என்ன நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன, என்ன விடயங்கள் பேசப்படுகின்றன என்பது குறித்து கண்காணிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

பௌத்த விஹாரைகளில்சோதனை நடத்தப்படுகின்ற போது ஏன் பள்ளிவாசல்களில்சோதனை நடத்தப்பட முடியாது? என கேள்வி எழுப்பியுள் ளார். கடும்போக்குவாத மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளை தடுக்கும்வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும், மதரசாக்களில் வெளிநாட்டு மத போதகர்கள் எதனைச் சொல்கி ன்றார்கள் என்பதனை கண்கா ணிக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான், சவுதி அரேபியா போன்ற நாடுகளைச் சேர்ந்த மத போதகர்கள் கொழும்பு, புத்தளம், பேருவளை மற்றும் வடக்குப் பகுதி பளளிவாசல்களில் போதனை களை செய்து வருகின்றனர். இஸ்லாம் மற்றும் இஸ்லாமிய சட்டங்கள் தொடர்பில் விரிவுரைகள் நிகழ்த்தப்படுகின்றன. அரபு மொழி, வன்முறைகள் கூட போதிக்கப்படலாம் என அவர் தெரிவித்தார்.

இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் முஸ்லிம் சிறுவர்கள் அடிப்படைவாத முஸ்லிம் கொள்கைகளை பின்பற்றக்கூடிய அபாய நிலைமை காணப்படுகின்றது. எனவே இஸ்லாமிய பாடசாலைகளில் புகட்டப்பட்டு வரும் விடயங்கள் குறித்து கண்காணிப்பு செய்யப்பட வேண்டியது அவசியமாகின்றது. முஸ்லிம்கள் நாள் ஒன்றுக்கு ஐந்து தடவை பள்ளியில் கூடி தொழுகை செய்வதாகவும் என்ன விடயங்கள் பேசுகின்றார்கள் என்பது பற்றி கவனிக்கப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் முஸ்லிம் கடும்போக்குவாத நடவடிக்கைகள் கிடையாது எனவும் கண்காணிக்கப்பட வேண்டியதன் அவசியம் கிடையாது எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். இலங்கையில் அனைத்து இன மக்களும் சமாதானத்துடன் வாழ்ந்து வருகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)



கிழக்கு மாகாணத்தை அடிப்படையாகக் கொணடு கடந்த 3ஆம் திகதி ஆரம்பமான நீர்க்காகம் போர் பயிற்சிகளில் எதிரிகளின் இறுதி முகாம்களை அழிக்கும் பயிற்சிகள் நேற்று முன்தினம் நடைபெற்றன.

இராணுவத்தின் கொமாண்டோ மற்றும் விசேட அதிரடிப்படையில், மட்டக்களப்பு மற்றும் திருகோண மலையில் உள்ள எதிரிகளின் முகாம்களை அழிக்கும் இறுதித் தாக்குதல் பயிற்சியில் ஈடு பட்டனர்.

## மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதித்தேர்தலில் மகிந்த போட்டியிட்டால் பூரணமாக நிராகரிப்போம்

## ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதனை பூரணமாக நிராகரிப்பதாக ஜே.வி.பி கட்சியின் பிரசாரச் செயலாளர் விஜிதகேரத் தெரிவித்துள்ளார். 1978ஆம் ஆண்டு அரசியல் சாசனத்தின் அடிப்படையிலேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரண்டாவது முறையாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார் எனவும் இதனால் மூன்றாவது முறையாக போட்டியிடக் கூடிய சட்ட



ரீதியான தகுதி கிடையாது எனவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் குறித்து இன்னமும் எவ்வித தீர்மானமும் கட்சி எடுக்கவில்லை எனவும், தேர்தல் பற்றி அறிவிக்கப்படும் தீர்மானங்கள் எடுக்கப்படும் எனவும், தற்போதைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையாக போட்டியிடுவதனை தடுக்கும் வகையில் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரண்டாவது முறையாக ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதுடன் 2011ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 9ம் திகதியே 18ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

## இன்று ஒரு தகவல்

### யார் அந்த நாலு பேர்?

ஒரு மன்னரின் வருலகக்காக அவர்கள் காத்திருக்கிறார்கள். அரியணையும் காத்திருக்கிறது. சற்று நேரத்தில் மன்னர் வந்து அரியணையிலே அமரப் போகி றார். அரண்மனை புலவர்களும் பண்டிதர்களும் அங்கே காத்திருக்கின்றார்கள். அறிவாளிகளோடு விளையாடுவதில் அந்த மன்னருக்கு விருப்பம் அதிகம்.

அதோ ...மன்னர் வந்துவிட்டார்.

சிம்மாசனத்தில் வந்து அமர்கிறார்.

பண்டிதர்களும் மற்றவர்களும் வணங்குகிறார்கள்.

மன்னர் சற்று யோசிக்கிறார் அதன் பின்னர்அங்கே இரு ந்த தலைமை பண்டிதரை பார்த்து பேசுகிறார்.

“ஐயா... தலைமைப் பண்டிதரே... நான் இப்போது ஒரு நாலு பேரைப்பற்றி சொல்லுவேன். அந்த நாலு பேரையும் நான் பார்க்க வேண்டும் நாளை காலையில் இதே வேளையில் நீங்கள் அந்த நாலு பேரையும் என் முன்னால் கொண்டு வந்து நிறுத்த வேண்டும். முடியுமா உங்களால்?”

“சொல்லுங்கள் மன்னா... முயன்று பார்க்கின்றேன்”

மன்னர் அந்த நாலு பேரைப் பற்றிய விபரங்களை சொன்னார்.

“நான் சொல்ல போகிற முதல் ஆள் யார் தெரியுமா? அவன் இங்கேயும் ஆனந்தமாக இருப்பவன் அங்கேயும் ஆனந்தமாக இருப்பவன் இவன் முதல் ஆள்...”

இங்கே வருந்துபவன்... அங்கேயும் வருந்துபவன்... இவன் இரண்டாவது ஆள்.

மூன்றாவது ஆள் எப்படியென்றால் ...அவன் இங்கே மகிழ்ச்சியாக இருப்பவன் அங்கே வருந்துபவன்.

நான்காவது ஆள் இங்கே வருந்துபவன்... அங்கே மகிழ்ச்சியாக இருப்பவன்.

இந்த நாலு பேரையும் நான் பார்க்க வேண்டும்.

நாளைக்கு இவர்களை அழைத்து வந்து என் முன்னால் நிறுத்த வேண்டும்.

இதுதான் மன்னரின் வேண்டுகோள்.

பாவம்... பண்டிதர்!

“யார் அந்த நாலு பேர் ” என்று யோசித்து பார்த்தார் அவருக்கு ஒன்றும் புரியவில்லை குழப்பமாக வீட்டுக்கு வந்தார்.

அப்பாவின் முகத்தில் கவலையும் குழப்பமும் குடிகொண்டிருப்பதை மகள் புரிந்து கொண்டாள் அவள் கொஞ்சம் புத்திசாலி பெண். எப்போதும் நம்மைவிட நம் குழந்தைகள் புத்திசாலிகளாக இருப்பது இயல்பு தானே!

“என்னப்பா கவலை? ” என்றாள்.

இதுதான் கவலையென்று அந்த பண்டிதர் விபரத்தை சொன்னார். மகள் சிந்தித்தாள். அதன் பின்பு தெளிவோடு நிமிர்ந்தாள்.

“அப்பா கவலையை விடுங்க உங்க பிரச்சினையை நான் தீர்த்து வைக்கிறேன்”

“எப்படியம்மா உன்னாலே முடியும்?”

“எனக்கு தெரியும் அந்த நாலு பேர் யார் என்பது! அப்பா!. இங்கே பக்கத்திலே ஓர் ஆச்சிரமம் இருக்கு அங்கே ஒரு துறவி இருக்கிறார். அவர் தான் முதல் நபர். அவர் இங்கேயும் மகிழ்ச்சியாக இருப்பவர் அங்கேயும் மகிழ்ச்சியாக இருப்பவர்”

“சரி”

“அதோ” எதிரிலே ஒரு பிச்சைக்காரன் நின்று கொண்டிருக்கிறான் பாருங்க அவன் தான் இரண்டாவது நபர் அவன் இங்கேயும் வருந்துகிறான். அங்கேயும் வருந்துவான்”

“அதுவும் சரிதான்”

“நம்ம வீட்டிற்கு எதிரில் ஒரு பங்களா இருக்கு பாருங்க அங்கே ஒரு செல்வந்தன் இருக்கிறான். அவனுக்கு ரொம்ப மோசமான குணம் அவன் இங்கே மகிழ்ச்சியாய் இருப்பவன்... அங்கே வருத்தப்பட கூடியவன் இவன் தான் மூன்றாவது ஆள்”

“அப்புறம்”

“நாலாவது ஆள் அவர் யார் தெரியுமா? அவர் ஒரு முனிவர்! காட்டிலே கடும் தவம் பண்ணிக்கொண்டிருக்கிறார். கடுமையான தவம்... உடம்பெல்லாம் இளைச்சு போச்சு அவர் இங்கே வருந்துகிறார் அங்கே மகிழ்ச்சியாக இருப்பார்.”

மகளின் விளக்கம் தந்தையின் மனதுக்குள் வெளிச்சத்தை ஏற்படுத்தியது.

விரைந்து செயற்பட்டார் அந்த நாலு பேரைய்ம் கண்டு பிடித் தார்.

அழைத்துக் கொண்டு போய் அரசன் முன் நிறுத்தினார்.

மன்னருக்கு மிகுந்த மகிழ்ச்சி மன நிறைவு பண்டிதரை பாராட்டினார் .பரிசில்கள் வழங்கினார்.

இப்படி ஒரு கதையை நம் பெரியவர்கள் சொல்வதுண்டு.

இதிலிருந்து நாம் புரிந்து கொள்ளும் உண்மை என்னவென்றால் ...

இங்கே மகிழ்ச்சியாக இருக்க பொருள் வேண்டும்.

அங்கே மகிழ்ச்சியாக இருக்க அருள் வேண்டும்.

இருந்தாலும் பொருளை விட அருளே சிறந்தது என்பது பெரியவர்களுடைய கருத்து.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னாரில் மூன்று நாட்கள் நடைபெறும் கல்விக்கண்காட்சி

(மன்னார்)

மன்னார் அல் அஸ்ஹார் மகாவித்தியாலயத்தில் இன்று சனிக்கிழமையும்நாளை ஞாயிற்றுக்கிழமையும் மறுநாள் திங்கட்கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை கல்விக்கண்காட்சி நடைபெறவுள்ளது.


ஈ-ஸ்கோப்-14 எனும் தொனிப்பொருளில் நடைபெறும் இக் கண்காட்சியில் மன்னார் விவசாயத் திணைக்களத்தின் சார்பில் மண் மாதிரிகள், மண்ணற்ற விவசாயம், பொதிப்பயிர்ச்செய்கை, பயிர்களில் ஏற்படும் பீடைத்தாக்கங்களைக் கட்டுப்படுத்தல், கூட்டெரு தயாரிப்பு, இயற்கை பீடை நாசினிகள் தயாரித்தலும்பாவனையும், நீர்ப்பாசன முறைகள், விவசாயஉபகரணங்கள் போன்றவற்றின் காட்சிப்படுத்தலும் இடம்பெறும்.

அத்துடன் பழமரநாற்றுகள் மற்றும் ஏனைய பயிர்கள், விதைகள், பீடை நாசினிகள், பசளை வகைகள் போன்றவையும் விற்பனை செய்யப்படவுள்ளன. எனவே விவசாயிகள் மற்றும் வீட்டத்தோட்டத்தில் ஆர்வமுள்ளோர் இதனைப் பார்வையிட்டு பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இக்கண்காட்சியில் மாணவர்களின் ஆக்கங்கள், கல்வி சார்ந்த அறிவுரைகள் என்பன இடம்பெறும். (2)

# வவுனியாவில் மினிசூறாவளியினால் 201 குடும்பங்களின் வீடுகள் சேதம்

## வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவப்பிரிவு தெரிவிப்பு



(குருமன்காடு)

**வவுனியாவில் கடந்த23ஆம்திகதிமாலை பரவலாக வீசிய மினி சூறாவளியால் 201 குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளதாக வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தில் கடந்த 23 ஆம் திகதி வீசிய சூறாவளியினால் வீடுகள் பகுதியளவிலும் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன.

இச் சூறாவளியினால் மன்னகுளம், பம்பைமடு, சுமாங்குளம், மரக்காரம் பளை, நெளுக்குளம், இராசேந்திரங்குளம், உக்குளாங்குளம், கற்பகபுரம் உள்ளிட்ட பல கிராமங்கள் சேதமடைந்ததுடன்பயன்தரும் மரங்களும் முறிந்து விழுந்துள்ளன.

அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில்ஏற்பட்டமினி சூறாவளி காரணமாக 201 குடும்பங்களைச் சேர்ந்த 259 பேர் பாதிப்படைந்துள்ளனர். சிலருக்கு காயமும் ஏற்பட்டது.

இவர்களில் 7 குடும்பங்களின் வீடுகள் முழுமையாக பாதிப்படைந்துள்ளதுடன் 194 குடும்பங்களின் வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (2-250)

# ஹயஸ் வாகன விபத்தில் இரு எருமை மாடுகள் உயிரிழப்பு

## வாகனத்தின் முன்பகுதி பலத்த சேதம்

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பயணிகள் ஹயஸ் வாகனம் ஒன்று ஏ-9 வீதியிலுள்ள மாங்குளத்தில் எருமைமாடுகளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்துச்சம்பவத்தின் போது வாகனத்தின் முன்பகுதி பலத்த சேதமடைந்ததோடு இரு எருமைமாடுகள் உயிரிழந்தன. இச்சம்பவம் ஏ-9 வீதியிலுள்ள மாங்குளத்தில் 221 ஆவது கிலோமீற்றருக்கும் 222 ஆவது கிலோ மீற்றருக்கும் (மைல்கல்) இடைப்பட்ட பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணிகளை ஏற்றிக் கொண்டு பயணித்த ஹயஸ் வாகனம் மாங்குளத்தில் மேற்படி பகுதியை அண்மித்த வேளை எருமைமாடுகளுடன் மோதி விபத்திற்குள்ளானது. இதன்போது இரு எருமை மாடுகள் பலியாகின.

வாகனத்தில் பயணித்தவர்கள் அனைவரும் காயம் எதுவுமின்றி தெய்வாதீனமாக உயிர்தப்பினர். தகவல் அறிந்த மாங்குளம். பொலிஸார் அவ்விடத்திற்கு விரைந்ததோடு சம்பவம் தொடர்பில் விசாரணைகளையும் மேற்கொண்டனர். (2-15)




# பூநகரி ப.நோ.கூ. சங்கத்திற்கு பொதுமுகாமையாளர் நியமனம்

பூநகரி ப.நோ.கூ. சங்கத்துக்கு புதிய பொது முகாமையாளராக து.தவயோகநாதன் நியமிக்கப்பட்டு கடமைகளை பொறுப்பேற்றுள்ளார். கடந்த நான்கு வருட காலமாக பதில் பொது முகாமையாளர்களாக பலர் கடமையாற்றிய நிலையில் இச்சங்கத்தின் அபிவிருத்தியை கருத்திற்கொண்டு குறித்தவெற்றிடம் நிரப்பப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (2-84)







பொருளியல் பேராசான் அமரர் வரதராஜனின் 31 ஆவது நாள் நினைவை முன்னிட்டு யாழ்.எய்ட் நிறுவனத்தினால் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் மற்றும் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் மேம்பாட்டிற்கான பல்வேறு வகையான உதவிப் பொருட்களும் ஒரு தொகுதி ஆடைகளும் வழங்கப்பட்டன. இதில் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய மாணவர்களுக்கு உதவிப் பொருட்கள் வழங்கப்படுவதையும் அவற்றினைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் அமர்ந்திருப்பதை முதல் இரு படங்களிலும் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் உதவிப் பொருட்களை பெற்றுக் கொண்டதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

## கமக்கார அமைப்பின் புதிய நிர்வாகத்தெரிவு

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஒலுமடு கமநலசேவை நிலையத்தின் கீழுள்ள கமக்கார அமைப்பின் புதிய நிர்வாகத் தெரிவு நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மாங்குளம் கிராம சேவையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் கனகசபை சிவபிரகாசம் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக முல்லை. மாவட்ட கம நல அபிவிருத்தி உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

அத்துடன் கிராம சேவையாளர் உட்பட விவசாயத் திணைக்கள அதிகாரிகள், விவசாயிகள் எனப்பலரும் கலந்து கொள்ளவுள்ளார். (2-15)

# கழிவுப்பொருட்களை சேகரிப்பதற்கு மல்லாவி நகரப்பகுதியில் குப்பைத் தொட்டிகள் வழங்கல்

(மல்லாவி)

மல்லாவி நகரப் பகுதியில் கழிவுப் பொருட்களை சேகரிப்பதற்கென குப்பைத்தொட்டிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டு நகரப் பகுதியில் வைக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மல்லாவி நகர வர்த்தக சங்கத்தினரால் பொதுமக்களினதும் வர்த்தகர்களதும் நன்மை கருதி மல்லாவி நகரப் பகுதியில் கழிவுப் பொருட்களை சேகரிப்பதற்கென ஒவ்வொன்றும் ஆயிரத்து 500ரூபா பெறுமதிகொண்ட 30 குப்பைத் தொட்டிகள் அன்பளிப்பு செய்யப்பட்டு அவை நகரப்பகுதியின் பாவனைக்காக வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மல்லாவி நகரப்பகுதியில் குப்பைத் தொட்டிகள் இல்லாதிருந்த நிலையில் பொது இடங்களிலும் வீதிகளிலும் மக்கள் மற்றும் வர்த்தகர்களால் வீசப்படும் கழிவுப் பொருட்கள் மூலம், மழை காலத்தில் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும். இச்செயற்பாட்டை தடுக்கும் முகமாக குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

இவர்களது இச் செயற்பாட்டை பொதுமக்களும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் வரவேற்றுள்ளனர். (2-15)

# மத்தியஸ்தர் சபையினரின் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்காக நடைபெற்ற செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மத்தியஸ்தர் சபையினருக்கு "இலங்கையின் நீதிச் சட்டங்கள்" எனும் தலைப்பிலான இரு நாட்கள் கொண்ட செயலமர்வு இம் மாதம் 24, 25 ஆம் திகதிகளில் அரச சட்ட ஆணைக் குழுவினால் துணுக்காய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றுள்ளதாக துணுக்காய் பிரதேச செயலர் எஸ். குணபாலன்தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கடந்த 3 ஆம் திகதி துணுக்காய் பிரதேச மத்திய சபையானது இலங் கையின் 320 ஆவது இறுதி மத்தியஸ்தர் சபையாக முல்லை.மாவட்ட நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாவினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்நிலையிலேயே மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கு அவர்களின் எதிர்கால செயற்பாடுகளுக்கு உதவும் வகையில் இச்செயலமர்வு நடைபெற்றுள்ளது.

இதில் 20 இற்கும் மேற்பட்ட மத்தியஸ்தர்சபைஉறுப்பினர்கள் பங்குபற்றியதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# சாளம்பைக்குளம் மக்களுக்கு மின்சாரம்



சாளம்பைக்குளம் மீள்குடியேற்ற கிராமத்திற்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின் .விநியோக நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வன்னியில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து 23 வருடங்களுக்கு பின் மீள்குடியேற்றப்பட்ட சாளம்பைக்குளம் கிராமத்தில் 250 வரையிலான குடும்பங்கள் குடியேறியுள்ளன.


இவர்களுக்கான வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழான மின் விநியோகத்தினை வர்த்தக கைத்தொழில் அமைச்சரும் வன்னி அபிவிருத்திக் குழுவின் தலைவருமான றிசாத் பதியுதீன், சவுதி நாட்டு பிரதிநிதி ஆகியோர் இணைந்து அண்மையில் வழங்கி வைத்தனர்.

இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் இணைப்பாளர் ஐ.எஸ். எம்.முகைதீன், வடக்கின் வசந்தம் மின்விநியோக மாவட்ட பொறுப்பதிகாரி திருமதி மைதிலி தயாபரன், வர்த்தக கைத்தொழில் அமைச்சரின் வவுனியா இணைப்பாளர் அப்துல்பாரி, வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, கிராம அலுவலர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (2-250)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எளிமையின் சோபிதம்: கவிஞர் சோ.ப

இலக்கிய மேதமைகளோடு நிகழ்ந்த உறவினை எண்ணும் போதெல்லாம் இறும்பூது எய்து கிறேன். எளிமையின் சோபித மாகப் பழகத் தெரிந்த எனது ஆசான் கவிஞர் சோ.ப அவர்க ளின் உறவு நல்லை ஆதீனத்தில் பால பண்டித வகுப்பிற்கு சென்ற போது வாய்த்தது. மரபுக்கவிதை



யிலும் ஆங்கில மொழியிலும் நுண்புலமை கொண்ட எனது ஆசான் அற்புதமான முறையிலே யாப்பினைக் கற்பித்தார். விருத் தம், வெண்பா, கட்டளைக் கலித் துறை போன்ற வற்றினைக் கற்பி க்கும் பாங்கு தற்புதுமை யானது. காரை.எம்.பி அருளானந்தம், ச.முகுந்தன், தி.செல்வமனோ கரன், ஞானதே சிகன் உட்பட பலர் அவரிடம் பயின் றோம். நாங்கள் புனையும் செய் யுட்களில் யாப் பின் சீர்மையில் நெருடல் விழுகி ன்ற இடங்களை சுட்டிக்காட்டி திரு த்தம் செய்து, அடு த்த கட்டத் திற்கு அழைத்துச் செல்ல பகீரதப் பிரயத் தனம் செய்திரு க்கின்றார் நண் பன் ச.முகுந்தன். மர புக்கவிதை புனை வதில்விண் ணன. மரபின் நுட்பங்களை இல குவா கவே உள்வாங்கிக் கொண் டான் ஏனையோர் ஆசானைப் படாத பாடு படுத்தியிருக்கின்றோம். ஆனா லும அவர், முன்பள்ளி மாணவர் களுக்கு கற்பிக்கும் பக்குவத்தோடு செயற் பட்டார் என்பது விதந்துரை க்க வேண்டிய உண்மையாகும்.

கவிதை புனைவதில் ஈடுபாடு கொண்ட பலரை கவியரங்குக ளின் ஊடாக அறிமுகப்படுத்தினார். சோ.பவின் கவியரங்குகள் தகுந யம் மிகுந்தவை. மாணிக்கவா சகர், அருணகிரிநாதர் போன்றோர் போலச் சந்தங்களைக் கையாண்டு கவியரங்கினை மெருகூட்டுவார். குரல் ஏற்ற இறக்கங்களின் தனி த்துவத்தோடான வெளிப்பாட்டு முறையில் சபையினைத் தன்வசப் படுத்திவிடுவார்.

இளங்கவிஞர்கள் சிலர் வசீகர மான வசனங்களோடு கவியரங்கி ற்கு வருவதுண்டு. அவர்கள் வாசி த்த வசனங்களை கவியரங்கத் தலைவராக மீள எடுத்தாளும் தரு ணத்தில் கவிதை போன்ற மாயத் தோற்றத்தை கட்டமைக்கும் நுட் பத்தினை எண்ணி பல சந்தர்ப் பங்களில் வியந்திருக்கின்றேன். கவியரங்கு தொடங்குவதற்கு முன் னர் எனது பிரதியை வாங்கிப் பார் ப்பார்.

சில வரிகளின் கீழ் அடிக்கோடி ட்டு திருப்பித் தருவார். த.ஜெய சீலன், நாகசிவசிதம்பரம் மகாலி ங்கசிவம் போன்றோரின் பிரதிகளி லும் அற்புதமான சில வரிகளின் கீழ் அவ்வாறான அடிக்கோடுகள் போடப்பட்டிருப்பதனை பல தடவை பார்த்திருக்கின்றேன்.

வானொலிக் கவியரங்க ஒலிப் பதிவின் இடைவேளை ஒன்றில் என்னருகே அமர்ந்திருந்து கண்க ளில் அலாதிப்பரவசம் வெளிப்பட அன்ரன் செக்கோவைப் பற்றி சிலா கித்துப் பேசினார். புத்திர சோகம் என்ற சிறுகதையை சொல்லிய

**கவிஞர் சோ.பத்மநாதன் அவர்களின் 75 ஆவது அகவையை முன்னிட்டு இக் கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது**

தருணத்தில் என்மீதும் வெண் பனி தூவியது போல் பிரமை ஏற்பட்டது. அதன் பாதிப்பால் க.நா.சுவின் மொழிபெயர்ப்பினைத் தேடி எடுத்து வாசித்தேன். தற்போது அன்ரன் செக்கோவ் புனைந்த அதிக படைப் புக்களை வாசித்த அர்த்தம் செறிந்த ஆணவத்தோடு இருப்பதற்கு என் ஆசானே பிரதான பின்புலம்.

ஜெயமோகன் எழுதிய ஏழாம் உலகம் நாவலை வாசித்து விட்டு அன்றைய தினம் அநாம அவஸ் தையினை அனுபவித்தேன். என்னி டமிருந்த நாவலை தி. செல்வ மனோகரனின் ஊடாகப் பெற்று வாசித்த எனது ஆசான், தனக் கேற்பட்ட உணர்வினைப் பகிர்ந்து கொண்டபோது இருவரது அதிர்வு களின் அலைவரிசையும் ஒரே புள்ளியில் குவிந்தமையை எண்ணி ஆச்சரியப்பட்டேன்.

கவிஞர் சோ.பவின் இயல் பான பேச்சிலே நகைச்சுவை பூடக மாகப் பொதிந்திருக்கும்.

மூடுமர்மம் நிறைந்த அங்கத ங்களை உதிர்ப் பதில் வல்லவர். பண்பாட்டு நீட்சியில் விழுகின்ற விரிசல்கள் குறித்து அக்கறை யோடு கோபப்படுவார். வெளி நாட்டு மோகத்தினைக் கிண்ட லடிப்பார். தமது கருத்துக்களை மற்றவர் மீது திணிக்கின்ற இயல் பற்றவர். எளிமையின் சோபிதத் தோடு பழகும் பக்குவம் நிறைந்த எனது ஆசான் இன்னும் நீண்ட நெடுங்காலம் இலக்கிய உலகி ற்கு வலுவூட்ட வேண்டுமென விரும்புகின்றேன்.

**இ.சு.முரளிதரன்**

# அம்பாள்குள கூட்டுறவு சங்க திருட்டு முயற்சி கைகூடவில்லை

(கிளிநொச்சி)

கரைச்சி தெற்கு ப.நோ.கூட்டு றவு சங்கத்தின் அம்பாள் குளக் கிளை யில் பொருட்கள் எதுவும் களவாடப் படாத நிலையில் பின் கதவு திறக்கப் பட்டு விடப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு இடம் பெற் றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவ தாவது,

குறித்த சங்கக் கிளையின் முகா மையாளர் வேலைகள் முடிந்த நிலையில் கூட்டுறவு சங்கத்தின் கதவு களை பூட்டிவிட்டு வீடு சென்றுள் ளார்.

மறுநாள் காலை அவ்வழியாக சென்ற பொதுமக்கள் பின் கதவு திற க்கப்பட்டுள்ளதை அறிந்து காவலா ளிக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

இதன்போது கடமையில் ஈடுபட் டிருந்த காவலாளி காலை 7.30 மணியளவில் கரைச்சி பிரதேச சபை உறுப்பினருக்கு தகவல் கொடுத் துள்ளார். அதன்பின்னர் அவ்விடத் திற்கு கரைச்சி தெற்கு ப.நோ. கூட் டுறவு சங்க முகாமையாளர் உள்ளி ட்ட பலர் விரைந்து வந்து பார்வை யிட்டனர்.

அதனையடுத்து பொலிஸாரு க்கு தகவல் வழங்கப்பட்டது.

அவ்விடத்திற்கு வந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டனர்.

காவலாளி முன்னால் இருந்த நிலையில் கதவு திறக்கப்பட்டுள்ளது. இது ஒரு சதி முயற்சி என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கரைச்சி தெற்கு ப.நோ.கூட்டுறவு சங்க முகாமையா ளர் எஸ்.பாலேந்திரன் கூறுகை யில்,


இது திட்டமிடப்பட்ட சதி எனவும் களவு அல்ல என்றும் கூறினார்.

அத்துடன் பொருட்களின் குறை வுத் தன்மையை நிவர்த்தி செய்ய



திசை திருப்புவதற்காகவே இந்நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சந்தேகம் கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

இருப்பினும் சங்கத்திலுள்ள பொருட்களின் இருப்பை கணக் கெடுப்பதன் மூலமே விபரங் களைப் பெற முடியும் என அவர் மேலும் கூறியுள்ளார். (2-27)



வடக்கு கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பான உலக வங்கி மற்றும் அவுஸ்திரேலிய உதவி நிறுவனங்களின் பிரதிநிதிகள் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர். இதன்போது வடக்கின் பிரதம செயலாளர் திருமதி விஜயலக்சுமி ரமேசை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடிய அதேவேளை வடக்கு கல்வியமைச்சுக்கு விஜயம் செய்த கல்வியமைச்சர் த.குருகுலராஜாவுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர். இக் கலந்துரையாடலின் போது உலக வங்கியினால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி தொடர்பாக தனித்தனியாக ஆராய் ந்தனர். அதேவேளை வடமாகாண பாடசாலைகளின் தேவைகளையும் கேட் டறிந்துகொண்டனர். இக்கலந்துரையாடலில் மாகாண கல்வி ப்பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் கல்வி அலுவலர்கள் கலந்து கொண்டனர். (படங்கள்:-என்.குமார்)-

# பிரிவுத்துயர் பகிர்வு



**இராசையா மகேஸ்வரன்**

யாழ். 3 ஆம் குறுக்குத்தெருவைப் பிறப்பிடமாக வும் பிரான்ஸ் Pontoise ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா மகேஸ்வரன் கடந்த 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமா னார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய் க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு 01 Place Du Parc Aux Charrettes, 95300 Pontoise, France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

**குருஸ் விசுவாசம்**



நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Rodez ஐ வசிப்பிடமாகவும் கொண்ட குருஸ் விசுவாசம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி நாளை மறுதினம் திங்கட் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 14 Avenue des Lilas, 12850 Onet-le-Chateau, France என்னும் முகவரியில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



**திருமதி சங்கரப்பிள்ளை மனோன்மணி**

மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடா Vancouver ஐ தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப் பிள்ளை மனோன்மணி கடந்த 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு Hamilton Harron Funeral Home, 5390 Fraser Street, Vancouver, BC V5W 2Z1, Canada என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

**றீட்டா பிறேட்றிக்**



இல,24, அச்சுக்கூட வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த றீட்டா பிறேட்றிக் (ஆசிரியை) நேற்று முன்தினம் வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி இன்று புனித மரிய ன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் னர் பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்தியாகத்திற்கு பெறுமதியான தீர்வு!

தொகுப்பு: உ.சாளின்

வடக்கின் வசந்தம் திட்டத்தினை தேர்தல் காலத்தில் வடக்கு மாகாண சபையிடம் கையளிப்பதாக கூறி வந்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தற்போது அதனை வடமாகாண சபையிடம் கையளிக்கவேண்டுமென மாகாண சபை உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

எனினும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் வடமாகாண சபைக்கு தெரியாமலேயே வடமாகாணம் சார்ந்த வெளிநாட்டு கொள்கைகளில் முறையற்ற விதத்தில் மூக்கை நுழைப்பதாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 17 ஆவது கூட்டத் தொடர் கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவ ஞானம் தலைமையில் நேற்று முந்தினம் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

**நியதிச் சட்டங்களுக்கு அங்கீகாரம்**

வடமாகாண சபையின் முதலாவது நியதிச் சட்டங்களான நிதி நியதிச் சட்டங்களுக்கு வடக்கு மாகாண ஆளுநர் அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

அரசியலமைப்புச் சட்டம் உறுப்புரை 154 எச் பிரிவின்படி நிதி நியதிச் சட்டத்திற்கும் அரசியல் அமைப்புச் சட்டம் உறுப்புரை 154 எச் பிரிவின் கீழ் முத்திரை கைமாற்றல் நியதிச் சட்டத்திற்கும் ஆளுநரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியால் வடமாகாண சபையின் நிதி நியதிச் சட்டம், முத்திரை கைமாற்றல் நியதிச் சட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட தனை சபையில் கூறினார் அவைத்தலைவர் சிவஞானம்.

**வெளிநாடு செல்வதற்கும் அனுமதி தேவை**

வடக்கு மாகாண முதலமைச்சர், மாகாண சபை அவைத்தலைவர், அமைச்சர்கள், உறுப்பினர்கள் வெளிநாடு செல்லவேண்டுமாயின் மத்திய அரசிடம் அனுமதி பெறவேண்டும். அனுமதி பெறாமல் வெளிநாடு செல்ல முடியாது என வடமாகாண ஆளுநர் சந்திரசிறி வடமாகாண சபைக்கு கடிதம் மூலம் அறிவித்திருப்பதனை சபையில் தெரியப்படுத்தினார் அவைத்தலைவர்.

முதலமைச்சர் ஜனாதிபதியிடமும் ஏனையவர்கள் வடமாகாண ஆளுநரிடமும் அனுமதி பெற்றுத்தான் செல்லவேண்டுமெனவும் இந்நடைமுறை எதிர்வரும் ஒக்டோபர் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வருமெனவும் ஆளுநர் அனுப்பி வைத்துள்ள அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

**முதலமைச்சர் நிதியம் அரசியலமைப்புக்கு முரண்**

வடக்கு மாகாண சபையினால் உருவாக்கப்பட்டுள்ள முதலமைச்சர் நிதி நியதிச்சட்டம் இலங்கை அரசியலமைப்பிற்கு முரணானது. எனவே சபை அதனை வைத்திருக்கமுடியாது.

ஆகையால் முதலமைச்சர் நிதி நியதிச் சட்டத்திற்கு தன்னால் அங்கீகாரம் வழங்கமுடியாது என்பதனையும் கடிதம் மூலம் ஆளுநர் அறிவித்திருந்ததனையும் சபையில் தெரியப்படுத்தப்பட்டது.

**ஆலோசனைக் கூட்டங்கள் நடத்துக!**

வடக்குமாகாணசபையின் அமைச்சரவை ஆலோசனைக் கூட்டங்களை நடத்துமாறு அமைச்சர்களிடம் கோரியிருந்தோம். அதன்படி கல்வியமைச்சர் 3 ஆலோசனைக் கூட்டங்களையும் சுகாதார அமைச்சர் 3 ஆலோசனைக் கூட்டங்களையும் நடத்தியிருப்பதாக சபைக்கு தெரியப்படுத்தி யுள்ளனர். அதேபோல் ஏனைய அமைச்சர்கள் நடத்தியதனையும் தெரியப்படுத்த வேண்டுமென தெரிவித்தார் சீ.வீ.கே.

**கலகம் பிறந்தால்தான் ஞானம் பிறக்கும்**



இதனையடுத்து எழுந்த உறுப்பினர் லிங்கநாதன் சபையின் நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மை இல்லை எனவும் அமைச்சரவை கூட்டத்தின் முடிபுகள் வெளியிடப்படாமல் இரகசியமாய் பேணப்பட்டு வருவதாகவும் குற்றஞ் சாட்டிய தோடு கலகம் பிறந்தால்தான் ஞானம் பிறக்கும் போல் உள்ளது எனவும் புட்டு வைத்தார்.

நாம் ஒற்றுமையாக தொடர்ந்தும் இருக்க வேண்டுமாயின் அமைச்சரவை வாரியத்தின் முடிவுகள் வெளிப்படுத்த வேண்டும். தென்னிலங்கை மாகாண சபைகளின் முடிவுகள் கூட ஊடகங்கள் வாயிலாக மக்களுக்கு தெரியப்படுத்தப்படுகின்றது.

ஆனால் எமது மாகாண சபையின் அமைச்சரவை வாரியம் எப்போது கூட்டப்படுகின்றது. அதில் என்னென்ன முடிவுகள் எடுக்கப்படுகின்றன என்று சபை உறுப்பினர்களான எமக்கே தெரிவதில்லை என ஆதங்கப்பட்டார்.

**வடக்கின் வசந்தம்**

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தேர்தல் காலங்களில் வடமாகாண சபையொன்று உருவாக்கப்படுமானால் வடக்கின் வசந்தம் திட்டத்தினை வடமாகாண சபையிடம் கையளிக்கப்போவதாக கூறிவந்துள்ளார்.

இந்நிலையில் தற்போது வடக்கின் வசந்தத்தினை மாகாண சபை அரசிடமிருந்து பெற்றுக் கொள்வதன்மூலம் வடக்கில் பல்வேறு அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியும்.

இதனை வடமாகாண சபை மத்திய அரசுடன் பேசி வடக்கின் வசந்தத்தினை பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் லிங்கநாதன் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட மீன்பிடி அமைச்சர் டெனீஸ்வரன் மகிந்த சிந்தனையில் குறிப்பிட்டுள்ள அனைத்தையும் வடமாகாண சபை ஏற்றுக்கொள்ளப் போகின்றதா என ஒரு போடு போட்டார்.

மகிந்த சிந்தனை வேறு, வடக்கின் வசந்தம் வேறு. மகிந்த சிந்தனையில் ஒரு திட்டம்தான் வடக்கின் வசந்தம் என டெனீஸ்வரனுக்கு வகுப்பெடுத்தார் லிங்கநாதன்.

வவுனியா நகரசபை நூலகம், மாகாண சபையின் சின்னம், மாகாண சபையின் தலைமைத்துவ காரியாலயத்தை மாங்குளத்தில் மாற்றுதல், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவி போன்ற கேள்விக்கணைகளையும் முதலமைச்சரிடம் அவர் தொடுத்தார்.

**பசில் மூக்கு நுழைப்பு**

இதற்கு பதிலளித்த முதலமைச்சர் மாகாண திட்டமிடல் என்பது பிரதம செயலரின் கட்டுப்பாட்டிலுள்ளது. ஆகையால் இது தொடர்பில் அவரிடம் கலந்துரையாடிய பின்னரே பதிலளிக்க முடியும்.

மாகாண சபையின் தேவைகள் தொடர்பில் ஆய்வுகள் செய்ய வேண்டிய தேவை காணப்படுகின்றது. ஐ.நா.வதிவிடப்பிரதிநிதியிடம் வடக்கு மாகாணத்தின் தேவைப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளோம்.

குறிப்பாக போர் பாதிப்பு , விதவைப் பெண்கள், அங்கவீனர்கள், ஏதிலிகள் போன்றவர்கள் தொடர்பில் பேசியிருந்தோம்.

எனினும் நாம் பேசிய பின்னர் ஐ.நா. வதிவிடப்பிரதிநிதியைத் தொடர்புகொண்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ எமக்குத் தெரியாமலேயே உடன்பாடொன்றைச் செய்துள்ளார்.

இவ் உடன்படிக்கையின் பின்னர் மத்தியுடன் தான் இதுபற்றி பேசி செய்யமுடியுமென ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி எம்மிடம் தெரிவித்துள்ளார்.

ஜப்பான், நோர்வே, தென்கொரியா போன்ற நாடுகள் தான் இதற்கு பணம் கொடுக்கின்றன.

வடமாகாணத்தின் தற்போதைய நிலைபற்றி 5 ஆயிரம் கேள்விகொத்துக்களை தயாரித்து புள்ளி விபரமும் பெறப்படுகின்றது. இது தற்போது முடிவுறும் நிலையிலும் உள்ளது. வடமாகாண அரசு என்ன தான் செய்தாலும் மத்திய அரசிடமிருந்து குறுக்கீடு வந்து கொண்டு தான் இருக்கிறது.

நிதி கிடைக்கும் அளவுக்குத்தான் திருத்த வேலைகள் மேற்கொள்ள முடியும். வடக்கின் வசந்தம் குறித்து பிரதம செயலரிடம் பேசித் தீர்க்கப் போகின்றோம்.

அனர்த்த நிதியம் (Emergency Fund) என்பது மாகாண சபையில் காணப்படுகின்ற போதிலும் அது பிரதமசெயலரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது என்றார் விக்கி.

**தென்கொரியாவிடம் திட்ட வரைபு**

வடக்கு மாகாண சபையின் தலைமையகத்தை மாங்குளத்தில் அமைப்பது தொடர்பில் பதிலளித்த முதலமைச்சர் தலைமையகத்தினை மாங்குளத்தில் அமைப்பது தொடர்பில் தென்கொரியாவிடம் திட்ட வரைபொன்றினை கோரியுள்ளோம்.

அத்திட்ட வரைபு கிடைத்த பின்னரே மாங்குளத்தில் தலைமைப் பீடம் அமைப்பதனால் ஏற்படும் நன்மை, தீமை கள் தொடர்பில் ஆராயப்படும் என்றார்.

**வடக்கில் எபோலா**

எமக்கு இப்போது அபிவிருத்தி என்பது தேவையில்லை. எமது மக்களை அழிவிலிருந்து பாதுகாப்பதே நாம் முதலில் செய்யவேண்டியதாகும்.

எமது நிலங்கள் தொடர்ந்தும் பறிபோய்க்கொண்டிருக்கின்றது. இப்பிரச்சினையை எம் தேசியப் பிரச்சினையாகக் கொள்ள வேண்டும்.

நாம் இங்கு கதைத்துக் கொண்டிருக்கும் போதே இராணுவம் எமது காணிகளை அபகரித்துக் கொண்டுள்ளது . இது வடக்கில் எபோலா வைரஸ் போன்று பரவிச்செல்கின்றது.

இக் காணி அபகரிப்பை கட்டுப்படுத்துவதற்கு வடக்குமாகாண சபை விசேட அமர்வொன்றை கூட்டவேண்டு மென சிவாஜிலிங்கம் கோரியதையடுத்து அது சபையில் ஏகமனதாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**வடக்கு மாகாணநிர்வாகம் ஆளுநரின் அளுங்குப் பிடியில்!**

மாகாண பாடசாலை விடயங்களில் ஆளுநர் தேவையற்ற விதத்தில் தலையீடு செய்வதோடு பாடசாலை அதிபர்களையும் தனது சொந்த விருப்பு வெறுப்புக்களுக்கேற்றவாறு இடமாற்றம் செய்து வருகின்றார். இவ் அதிகாரம் ஆளுநருக்கு உண்டா என கல்வியமைச்சரிடம் கேள்வியெழுப்பினார் உறுப்பினர் அஸ்மின்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் குருகுலராஜா, 1987 ஆம் ஆண்டு 42 ஆம் இலக்க 32 ஆம் பிரிவின் கீழ் ஆளுநருக்கு அதிகாரமுண்டு. பாடசாலை அதிபரை ஒரு மாகாணத்திலிருந்து வேறு மாகாணத்திற்கு இடமாற்றம் செய்ய வேண்டுமாயின் 16 படிநிலைகள் உண்டு.

ஆனால் ஆளுநர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒஸ்மானியா கல்லூரி அதிபரை மாற்றி யுள்ளார் எனத் தெரிவித்த அமை ச்சர் வடக்கு நிர்வாகம் ஆளுநரின் அளுங்குப்பிடியில் இருப்பதாகவும் கூறினார்.

**இந்திய வீட்டுத்திட்ட தெரிவில் முறைகேடு**

வசதியானவர்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி குடும்பத்திலுள்ள அனைவருக்கும் வீடு கட்டுகின்றனர். மன்னாரிலுள்ள அமைச்சரின் செல்வாக்கில்தான் வீடுகள் வழங்கப்படுகின்றன.

மன்னாரில் உள்ள ஒருவருக்கு புத்தளத்திலும் கற்பிட்டியிலும் மன்னாரிலும் என 3 இந்திய வீட்டுத்திட்ட வீடுகள் உள்ளன. இதுதொட ர்பில் இந்திய துணைத்தூதரகத்திற்கு தெரிவித்தும் பதில் தரப்படவில்லை என உறுப்பினர் சிராய்பா தெரிவித்தார்.

இதனையடுத்து யாழ்.மாவ ட்டத்திலுள்ள முஸ்லிம்களுக்கும் இந்திய வீட்டுத்திட்டம் வேண்டும் என அஸ்மின் தெரிவித்ததனையடுத்து முஸ்லிம்களுக்காக நாம் குரல் கொடுத்தோம். எமக்காக முஸ்லிம்கள் குரல் கொடுக்கவேண்டுமென திடீரென சுகிர்தன் கூறினார்.

**வெலிஓயா மறைக்கப்பட்ட உண்மை**

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளான கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு என ஐந்துடன் மேலதிகமாக வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவு ஒன்று முல்லைத்தீவு மாவட்டத்துடன்சட்டரீதியற்றமுறையில் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த இணைப்பு பகிரங்கமாக ஸ்லை நிர்ணயம் செய்யப்பட்டோ வர்த்தமானி அறிவித்தல் மூலமோ அல்லாமல் பொதுநிர்வாக உள் நாட் டலுவல்கள் அமைச்சின் ஒரு கடிதம் மூலமே இணைக்கப்பட்டுள்ளது.

இது விடயமாக 03.09.2014 இல் நடைபெற்ற முல்லை. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இது பற்றி நான் கேட்ட கேள்விக்கு முல்லை.மாவட்ட அரசாங்க அதிபர், இணைத்தலைவர்களான அமைச்சர் றிசாத் பதியுதீன், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறு ப்பினர்கள், உயர் அரச அதிகாரிகள் பொது மக்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் பொதுநிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சில் இரு ந்து வந்த ஒரு கடிதமூலமே இணைக்கப்பட்டதாகத் தெரிவித்தார். இந்தச் செய்தியினால் பலரும் ஆச்சரியமடைந்தனர்.

ஆகையால் சட்டபூர்வமற்ற ஒரு இடத்திற்கு வடமாகாண சபை நிதி வழங்கக்கூடாது என பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதனால் கொண்டுவரப்பட்ட பிரேரணை கார்த்திகை மாதத்தில் மரம் நடுகை உட்பட 7 பிரேரணைகள் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**மாவீரர்களுக்கு ஈடான தீர்வு வேண்டும்**

வடமாகாண சபை அபிவிருத்தி என்ற எலும்புத்துண்டுக்காக சண்டை போட்டுக்கொண்டிராமல் எமது மக்களை முதலில் பாதுகாக்கக்கூடிய நடவடிக்கையெடுக்கவேண்டும்.

எமது மாவீரர்களின் உயிர்த்தியாகங்களுக்கு ஈடான தீர்வினை வடமாகாண சபை தமிழ் மக்களுக்கு பெற்றுக்கொடுக்கவேண்டும் என சிவாஜிலிங்கம் கூறினார்.

**புலி பதுங்கியுள்ளது எப்போது பாயும்?**

இறுதியாக முதலமைச்சர் நிதியம் சம்பந்தமான விவாதம் எடுத்துக்கொள்ளப்பட்டபோது புலி தற்போது பதுங்கியுள்ளது எனவும் இதற்கு நிறையக் காரணம் உண்டு எனவும் முதலமைச்சர் கூறினார்.

இதனையடுத்து சீறிய சிவாஜி புலி நெடுக பதுங்கியிருக்க முடியாதென்றும் எப்போதுதான் பாயப் போகின்றதென்றும் கூறியதோடு ஆளுநர் அளவுக்கு மீறி செயற்பட்டால் அரசியல் அமைப்பின்படி ஆளுநருக்கு எதிராக பெரும்பான்மையுடன் அவநம்பிக்கை பிரேரணை நிறைவேற்றப்பட்டு ஜனாதிபதிக்கு அனுப்பப்படும். அதன் பின்னர் ஜனாதிபதி ஆளுநரின் சீட்டைகிழிக்காவிட்டால் சர்வதேசத்தின் உதவியுடன் நாம் சீட்டை கிழிப்போம் என உறுமினார்.

இறுதியாக சர்வதேச விசாரணையில் சாட்சியளிப்பது குறித்தும் 1958 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டுவரை நடைபெற்ற படுகொலைகளில் 165 படுகொலைகள் தொடர்பில் 415 பக்க அறிக்கை சமர்ப்பிக்கப்போவதாகக்கூறி அதனை சபை செயலரிடம் கையளித்த தனை தொடர்ந்து சபை அமர்வு முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

**அடுத்த அமர்வு**

சபையின் அடுத்த அமர்வு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி இடம்பெறும் என அவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டது.

இவ் அமர்வில் வடக்கில் இடம் பெறுகின்ற காணி அபகரிப்புக்கள் தொடர்பிலான முழுநாள் விவாதம் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளை ஒப்புக்கொள்ளும் துணிவும் திருத்திக்கொள்ள விரும்பும் விருப்பமும் தான் வெற்றி பெறுவதற்கான இரு வழிகள்.

–லெனின்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மயானம் - மனிதப்புதைகுழி தேவலோகத்தில் விசாரணை - 3

வேலணையில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப் பட்ட சம்பவம் தொடர்பில் தேவலோகத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது.

மனித எச்சங்கள் காணப்படும் வேலணைப் பிரதேச சபை அமைந்துள்ள காணி முன்னர் மயானமாக இருந்ததா? என்பதை நிரூபித்தாக வேண்டும்.

குறித்த காணி மயானமாக இருந்தது எனில் அது தொடர்பான ஆதாரங்களை வேலணை பிரதேசசபை முன் வைக்க முடியும். அவ்வாறான ஆதாரங்கள் இல்லை எனில், அது குறித்த அறிக்கையை அந்தச் சபை வெளிப்படுத்துவது கட்டாயமானதாகும்.

அதே நேரம் வேலணைப் பிரதேச சபைக்கான கட்டடங்கள் அமைக்கப்பட்ட போது இப்படியான மனித எச்சங்கள் தென்பட்டனவா என்பது குறித்த தகவல்களை அந்தக் கட்டடங்களை அமைத்த ஒப்பந்தகாரர்களிடம் கோரிப் பெறுவதும் அவசியமானதாகும் என சித்திர குப்தனார் கூற, அதனை விசாரணைக்குழு ஏற்றுக் கொண்டது.

தொடர்ந்து சித்திரகுப்தனார் தனது பிரம்மசூடிப் புத்தகத்தை எடுத்து வாசிக்கலாயினார்.

மனித எச்சங்கள் வேலணைப் பிரதேசசபைக் காணியில் மட்டும் தான் உள்ளது என் கூறமுடியாது. 1990 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கோட்டையில் இருந்த இராணுவத்தை மீட்பதற்காக ஊர்காவற்றுறை ஊடாக தாக்குதல் நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப் பட்டது. இதன்போது பலர் காணாமற் போயினர்.

1990 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் தாக்குதலை நடத்திய இராணுவத்தினர் தீவுப்பகுதியில் சுமார் ஒரு மாதம் தங்கியிருந்தனர்.

1990 செப்ரெம்பர் கடைசிப் பகுதியில் கோட்டையில் இருந்த இராணுவத்தை மீட்டுக் கொண்டு அவர்கள் ஊர்காவற்றுறைக்கு மீளத்திரும்பிய போது மண்டைதீவிலுள்ள தோட்டக் கிணறுகளில் இருந்து மனித சடலங்கள் மீட்கப்பட்டன.

இந்த மீட்புப்பணியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடமும் முழுமையாக ஈடுபட்டிருந்தது.

எனவே, பூலோகத்தில் நடைபெறும் அத்தனை சம்பவங்களையும் பதிவு செய்யும் பணியை தேவலோகத்திலிருந்து மேற்கொள்ளும் சித்திரகுப்தனாகிய நான், எனது பதிவுப் புத்தகமாகிய பிரம்மசூடியில் பதிவு செய்ததன் பிரகாரம் மேற்படி தகவல்களை இந்த மன்றுக்கு மரியாதையோடு சமர்ப்பிக்கின்றேன் எனக் கூறி அமர்ந்தார்.

இதன்போது எழுந்த தெய்வேந்திரன், சித்திரகுப்தனின் பிரம்மசூடிப் புத்தகத்தில் கூறப்பட்ட தகவல்களின் பிரகாரம் வேலணையில் கண்டறியப்பட்ட மனித எச்சங்கள் 1990களில் காணாமற் போனவர்களுடையதாக இருக்குமா? என்ற கோணத்தில் பார்க்கவேண்டியுள்ளது என்று கூற, அதனை விசாரணைக்குழு ஏற்றுக் கொண்டது.

தெய்வேந்திரனின் கருத்தைத் தொடர்ந்து விசாரணைக் குழுவின் தலைவர் யமதர்மராஜன் தனது தொகுப்பு அறிக்கையை வாசித்தார்.

இலங்கையின் வடமாகாணத்தில் கண்டறியப்படும் மனித எச்சங்கள் தொடர்பில் தேவலோகம் மிகுந்த கரிசனை செலுத்துகிறது. எனினும் இது குறித்த உண்மைத் தகவல்களை அறிவதற்கு இந்த விசாரணைக் குழுவிற்கு கால அவகாசம் தேவைப்படுகிறது.

மனிதப்புதைகுழியோடு சம்பந்தப்பட்ட பலர் இன்னமும் பூலோகத்தில் உள்ளனர். அவர்கள் அனைவரும் நமது லோகத்திற்கு வருவதற்கு வெவ்வேறு கால அவகாசங்கள் எடுக்கும். எனினும் விசாரணைகள் மிகவும் நேர்த்தியாக நடக்கும்.

பூலோகத்தில் உரிய விசாரணை நடைபெறாவிட்டாலும் தேவலோகம் இதுதொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்கும். அதுவரை இந்த விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது எனக்கூறியதுடன் எனது தலைமையிலான குழு ஒன்று விரைவில் வேலணைக்குச் செல்லவும் உள்ளது என்றும் கூறினார்.

# மத்திய கல்லூரி வரலாற்றில் நாத்திறம்



"நல்லைநகர் நாவலர் பிறந்திரலேல் சொல்லு தமிழெங்கே.." என்ற பாடல் சைவத்தையும், தமிழையும் வளர்த்த நாவலரின் நாத்திறத்தை உணர்த்துகின்றது. அவர் கற்ற பாடசாலை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியாகும். அக் காலம் முதல் இற்றை வரை நாவன்மையாளர் பட்டியல் நீண்டே செல்கிறது. அமரர் க.இராசதுரை அதிபர் காலத்திலே பட்டிமன்றம் பலரறியப்படும் நிகழ்வாக இருந்தது. அவ்வழியில் மீண்டும் எழுச்சியை உண்டாக்குவதற்கே இப் "பட்டிமன்றச்சமர் - 2014" எனும் நிகழ்வு முன்னெடுக்கப்படுகின்றது.

யாழ் மத்திய கல்லூரியில் நாவன்மை மிக்கோரின் நாயகமாகத் திகழ்ந்தவர். சொற்பொழிவு என்ற துறையைப் பிரசங்க மரபாக ஈழத்திற் தொடங்கி வைத்தவரும் அவரே. வண்ணை வைத்தீஸ்வரன் சந்நிதியையே இதற்குக் களமாகக் கொண்டார். அவருக்கு துனவனம் துரை எனும் வெள்ளைக்காரப்பிரபு பரிச்சயமாகவிருந்தார். நாவலர் சிவலிங்கத்தை வணங்கும்போது, "என்னப்பா கல்லை வணங்குகிறாய்?" என்று கேட்டாராம். அதற்கு நாவலர் "அது கல்லில்லைக் கடவுள்" என்று கூறி விட்டார். பின்னொரு நாள் நாவலர் வெளியே கிடந்த க்ல்லில் இருந்த போது, துனவனம் துரை அவரைப் பார்த்து "என்னப்பா கடவுளுக்கு மேலே இருக்கிறாய்?" என்று கேட்டார். நாவலருக்கு என்னவோ மாரிப் போய்விட்டது. "இது கடவுள் இல்லைக் கல்" என்று கூறிவிட்டார். துரையோ "எனக்கெப்படித் தெரியும் இரண்டும் கல் தானே" என்று முணுமுணுத்துக் கொண்டு போய் விட்டாராம். நாவலர் உறு மீனுக்கு காத்திருந்தார். சரியான தருணம் வந்தது. துனவனம் துரை வில் வண்டியில் தனது மனைவியுடனும், மகளுடனும் வந்து இறங்குகிறார். உடனே நாவலர் அவரைப் பார்த்து "என்னப்பா உனக்கு இரண்டு பொண்டாட்டியா? எனக்குச் சொல்லவேயில்லை" என்று எகத்தாளமாகக் கேட்டு விட்டாராம். அதற்குத் துரை "இல்லை ஒன்று மனைவி மற்றது மகள்" என்று தலையைக் குனிந்தபடி பதிலளித்தாராம். அதற்கு நாவலர் "எனக்கு எப்படித் தெரியும் இரண்டும் பெண் தானே?" என்று கூறினாராம். அப்போது தான் துரைக்குப் புரிந்தது. கல்லுக்கும், கடவுளுக்கும் உள்ள வித்தியாசம். தனது நாட் குறிப்பிலே எழுதினாராம் " நான் முதன் முதலாக ஒரு அறிவாளனைச் சந்தித்தேன். அவர் தான் நல்லை நகர் ஆறுமுக நாவலர்" என்று இப்படி ஏராளம் எடுத்துக் காட்டுக்கள் உள்ளன.

நாவலரின் வழித்தோன்றல்கள் மத்திய கல்லூரியில் உலகறிந்த வழக் கறிஞர்களாக உள்ளனர். வலம்புரி ந. விஜயசுந்தரம், பிரதேச செயலர் திரு. முகுந்தன் எனப் பட்டிமன்ற உலகைக் கலக்குவோர் நிறையப் பேர் உள்ளனர். சொல்லருவி T. கருணாகரன், அவரது சகோதரர் T. தயாபரன் என்போர் மேடைகளில் சொல்மாரி பொழிகின்றனர். தேசிய மட்டவிவாதப் போட்டிகளிலும், பேச்சுப் போட்டிகளிலும் தொடர் வெற்றிகளைக் குவித்துள்ளனர். இவ் வெற்றிக்குக் களங் கொடுத்தவர் அப்போது அதிபராகவிருந்த அமரர் கணபதி இராசதுரையாவார்.

பல தமிழ்மொழித்தினப் போட்டிகளை, மாகாணப் போட்டிகளைத் தலைமை தாங்கி நடத்திக் காட்டியவர். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வவுனியாவில் மாகாணநிலைப் போட்டியில் பங்கேற்ற போது ஆர்வத்தினாலும், அக்கறையினாலும் கொழும்பிலிருந்து நேரடியாக அங்கு வந்து போட்டி நான்கு மணியளவில் நிறைவடையும் வரை மண்டபத்தைச் சுற்றிச் சுற்றித் திரிந்து வெற்றியைக் கொண்டாடியவர். மாணவர்களை உற்சாகமூட்டியவர். ஆனால் அம் மாணவர்கள் கொழும்பிலே தேசிய மட்டப் போட்டியில் வெற்றி பெற்ற போது அவர் உயிருடன் இல்லை.

எது எப்படியோ சரிந்த பாடசாலையை நிமிர்த்தியவர், க்ல்விப்பெறுபேற்றை உயர்த்தியவர், தமிழுக்காகப் பாடுபட்டவர் கடமையின் போது உயிர் நீத்தவர் அவரது நினைவாக தமிழ் மாணவர்களுக்கு நாம் செய்யும் தொண்டு இத்தகு பட்டிமன்றப் போட்டிகளை நடத்துவதாகும்.

நாக.தமிழிந்திரன்
ஆசிரியர்
யாழ்.மத்திய கல்லூரி தமிழ்ச் சங்க பெருந்தலைவர்

## மாணவர்களை இணைக்க இலஞ்சம் கோரினால் முறையீடு

மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் முதலாம் தரத் துக்கு மாணவர்களை இணைக்கும் போது, பாடசாலை நிர்வாகத்தினால் இலஞ்சம் கோரப்படுமாயின் அது தொடர்பில் முறையிடுவதற்காக மேல் மாகாண கல்வி அமைச்சினால் அவசர அழைப்பு தொலைபேசி இலக்கமொன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பணமாகவோ அல்லது பொருளாகவோ பாடசாலை நிர்வாகத் தினால இலஞ்சம் அல்லது உத விகள் கோரப் படுமாயின், அது தொடர்பில் மாகாண கல்வி அமைச்சுக்கு முறையிடுமாறு மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பான முறைப்பாடுகளை வார நாட்களில், காலை 9 மணிமுதல்மாலை4மணிவரை தொலைபேசி இலக்கத்துடன தொடர்புகொண்டு முறையிடலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## சிரமதானப் பணியில் கலந்து கொள்ளவும்

ஆவரங்கால் சர்வோதய சனசமூக நிலையமும் ஆவரங்கால் ஞான வைரவர் கோவில் நிர்வாகமும் இணைந்து சிரமதானப் பணி ஒன்றை நாளை ஞாயிற்றுக்கிழமை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளன. இதற்கமைய காலை 8 மணிக்கு சர்வோதய சனசமூக நிலையத் தலைவர் கே.செல்வராஜன் தலைமையில் இச்சிரமதானப் பணி நடைபெறவுள்ளது.

இச் சிரமதானத்தில் சர்வோதய சனசமூக நிலையம், மற்றும் ஞான வைரவர் சனசமூக நிலையம் போன்றவற்றின் வளாகங்கள் சிரமதானம் செய்யப்படவுள்ளன. இச் சிரமதானப் பணியில் அனைத்து பொது மக்களையும் கலந்து கொள்ளும்படி ஆவரங்கால் சர்வோதய சனசமூக நிலையமும் ஆவரங்கால் ஞான வைரவர் கோவில் நிர்வாகமும் இணைந்து அறிவித்துள்ளன. (இ-134)

## மாணவர்களுக்கு மதுபானம் மதுபானசாலைக்கு சீல்

(கொழும்பு)

நீர்கொழும்பு பிரதேசத்தில் பாடசாலை மாணவர்களுக்கு மது பானம விற்பனை செய்த மதுபான சாலைக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த விசேட முறைப்பாட்டையடுத்தே பொலிஸார் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



இதற்காக முக்கியமான 3 சாதனைகள் நீங்கள் செய்ய வேண்டும். தன்னைத் தானே நேசிப்பது, உறவு முறைகளை சீர் செய்வது, இருதயத்திலிருந்து வரும் விருப்பங்களைக் கண்டுபிடிப்பது.

நீங்கள் யக்ஞையில் கற்றுக்கொண்ட அடிப்படை விடயம் நீங்கள் உங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும், உங்களை நேசிக்கவேண்டும். இதுவே முதல் அடிக்கல்.

இரண்டாவதாக உங்கள் பெற்றோரிடம், உங்கள் உறவு முறைகளைச் சீர்படுத்திக்கொள்ளவேண்டும். அதாவது பெற்றோரை நேசிப்பது அவர்களுக்கு சேவை செய்வது மற்றும் மதித்து நடப்பது. நீங்கள் உங்கள் வாழ்க்கையை முழுவதுமாகப் பார்த்தீர்கள் என்றால் அதில் பிரபஞ்சமே சம்பந்தப்பட்டிருப்பது புரியும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### தைரியசாலியாய் இரு



- உலக இயந்திரத்தின் சக்கரங்களில் இருந்து தப்பி ஓட நினைக்காதே. வாழ்வின் சூட்சுமம் அறிந்து கொள்ள முயற்சி செய்.
- சண்டையிடுவதாலும், பிறரைக் குறை சொல்வதாலும் உலகில் ஒரு நன்மையும் உண்டாகப் போவதில்லை.
- சுயநலமின்மையே நல்லொழுக்கம். இது தான் ஒழுக்கத்திற்குரிய ஒரே இலக்கணம்.
- கோழை தான் பாவம் செய்கிறான். தைரியசாலியோ ஒருபோதும் பாவம் செய்வதில்லை.
- உலகைப் பற்றிய கவலை வேண்டாம். முதலில் உன் வாழ்வை நெறிப்படுத்தி மனத்தூய்மையுடன் இரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித்தெரிவு-2014

## ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக்கிண்ணம் ;கே.சீ.சீ.சீ அணி முன்னிலையில்



யாழ். சென்றல் அணி



யாழ் .பல்கலைக்கழக அணி



யாழ்.ஜொனியன்ஸ்

ஜோர்ஜ் வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 2010 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து 5 வருடகாலமாக நடத்தி வரும் இப்போட்டியில் மீண்டும் கே.சீ.சீ.சீ அணி 16 போட்டிகளில் பங்குபற்றி 15 போட்டிகளில் வெற்றி பெற்று 84.31 புள்ளிகளைப் பெற்று மீண்டும் முன்னிலையில் உள்ளது.

01.01.2014 இல் இருந்து 30. 06. 2014 வரை நடைபெற்று முடிந்த 85 போட்டிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் கழகங்களின் நிலை பின்வருமாறு,

யாழ் .பல்கலைக்கழக அணி 11 போட்டிகளில் பங்குபற்றி 7 போட்டிகளில்வெற்றி பெற்று 69.39 புள்ளிகளைப்பெற்று 2ஆம் இடத்திலும் யாழ். சென்றல் அணி 10 போட்டி களில் பங்குபற்றி 8 போட்டிகளில் வெற்றிபெற்று 58.4 புள்ளிகளைப் பெற்று 3ஆம் இடத்திலும் சென்றலைட்ஸ் அணி 10 போட்டிகளில் பங்கு பற்றி 9 போட்டிகளில் வெற்றி பெற்று 54.60 புள்ளிகளைப் பெற்று 4ஆம் இடத்திலும் கிறாஸ் கொப்பர்ஸ் அணி 13 போட்டிகளில் பீங்குபற்றி 7 போட்டிகளில் வெற்றி பெற்று 52.68 புள்ளிகளைப்பெற்று 5ஆம் இடத்திலும் சிறி காமாட்சி அணி 11 போட்டிகளில் பங்குபற்றி 6 போட்டிகளில் வெற்றி பெற்று 48.25புள்ளிகளைப் பெற்று 6 ஆம் இடத்திலும் யூனியன்ஸ்அணி 11 போட்டிகளில் பங்கு பற்றி6போட்டிகளில் வெற்றிபெற்று 45.02 புள்ளிகளைப்பெற்று 7ஆம் இடத்திலும் மானிப்பாய் பரீஸ் அணி 9 போட்டிகளில் பங்குபற்றி 4 போட்டிகளில் வெற்றி பெற்று 43.82 புள்ளிகளைப்பெற்று 8 ஆம் இடத்திலும் பற்றீசியன்ஸ் அணி 11 போட்டிகளில் பங்குபற்றி 5 போட்டிகளில் வெற்றி பெற்று 41.86 புள்ளிகளைப்பெற்று 9 ஆம் இடத்திலும் யாழ்.ஜொனியன்ஸ் அணி 10 போட்டிகளில் பங்குபற்றி4 போட்டிகளில் வெற்றி பெற்று 39.46 புள்ளிகளைப்பெற்று 10ஆவது இடத் திலும் ஜொலிஸ்ரார்அணி 10 போட்டிகளில் பங்குபற்றி 3 போட்டிகளில் வெற்றி பெற்று28.49 புள்ளிகளைப்பெற்று 11 ஆவது இடத்திலும் விக்டோறி அணி 6 போட்டிகளில் பங்கு பற்றி 2 போட்டிகளில் வெற்றி பெற்று 21.07 புள்ளிகளைப்பெற்று 12 ஆவது இடத்திலும் அரியாலை சென்றல் அணி 6 போட்டிகளில் பங்கு பற்றி 1 போட்டியில் வெற்றி பெற்று 20.43 புள்ளிகளைப் பெற்று 13 ஆவது இடத்திலும் ஸ்ரான்லி அணி 7போட்டிகளில் பங்குபற்றி 1 போட்டியில் வெற்றி பெற்று 14.67 புள்ளிகளைப்பெற்று 14ஆவது இடத்திலும் நியூஸ்ரார் அணி 6 போட்டிகளில் பங்குபற்றி 1போட்டியில்வெற்றி பெற்று 14.35 புள்ளி களைப்பெற்று 15 ஆவது இடத்திலும் சென்றலைட்ஸ் புளுஸ்அணி 2 போட்டிகளில் பங்குபற்றி 1போட்டியில் வெற்றி பெற்று 11.42புள்ளிகளைப் பெற்று 16 ஆவது இடத்திலும் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ அணி 6 போட்டிகளில் பங்குபற்றி வெற்றி எதுவும் பெறாத நிலையில் 11.27 புள்ளிகளை பெற்று 17 ஆவது இடத்திலும் யங்ஸ்ரார் அணி 3 போட்டிகளில் பங்குபற்றி 1போட்டியில் பெற்று 7.86 புள்ளிகளை பெற்று 18 ஆவது இடத்திலும் ஒல்ட்கோல்ஸ் அணி ஒரு போட்டியில் பங்குபற்றி 1 போட்டியில் வெற்றி பெற்று 4.27 புள்ளிகளைப்பெற்று 19 ஆவது இடத்திலும் உள்ளனர்.

நியூஸ்ரார் பிறீமியர் லீக் வெற்றிக் கிண்ணத்திற்கான சுற்றுப் போட்டியில் 7 போட்டிகளும் விக்ரம், ராஜன், கங்கு வெற்றிக்கிண்ணத்திற்கான சுற்றுப்போட்டியில் 7 போட்டிகளும் வீ.டி. ஜெயரட்ண சிங்க வெற்றிக் கிண்ணத்திற்கான சுற்றுப் போட்டியில் 4 போட்டிகளும் முக்கோண வெற்றிக்கிண்ண சுற்றுப் போட்டியின் 1 போட்டியும் அழைக்கப்பட்ட கழக அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியில் 5 போட்டியும் டொனால்ட் கணேசகுமார் வெற்றிக் கிண்ணத்திற்கான சுற்றுப்போட்டியின் 13 போட்டிகளும் யாழ். பிறீமியர் லீக் வெற்றிக்கிண்ணத்திற்கான சுற்றுப் போட்டியில் 41 போட்டிகளும் மொத்தமாக 85 போட்டிகள் நடைபெற்றன.

2010,2011 ஆம் ஆண்டுக் கான அணித்தெரிவில் யாழ்ப் பாண பல்கலைக்கழகமும் 2012 ஆம் ஆண்டுக்கான அணித்தெரிவில் கே.சீ.சீ.சீ விளையாட்டுக்கழகமும் 2013 ஆம் ஆண்டுக்கான அணித் தெரிவில் ஜொனியன்ஸ் விளை யாட்டுக் கழகமும் முன்னிலை பெற்றது குறிப்பிடத்தக்கது. -- (க)


# இன்றைய போட்டி

முள்ளியவளை விநாயகர் விளையாட்டுக்கழகம் நடத்தும் பத்துப் பந்து பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியானது இன்று சனிக்கிழமை விநாயகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் முல்லைத்தீவில் பதிவு செய்யப்பட்ட பதினெட்டு அணிகள் பங்குபற்றுகின்றன. இப்போட்டியின் கால், அரை இறுதியாட்டங்கள் 28 ,29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. போட்டியானது விலகல் முறையில் நடை பெறவுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# ஆண்களுக்கான கரம் சுற்றுப்போட்டி-2014



யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையும் கரம் ஆண்கள் அணியும் இணைந்து நடத்தும் யாழ்.மாவட்ட அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான கரம் சுற்றுப்போட்டி இன்றும் நாளையும் (சனி, ஞாயிறு) யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் நடைபெறவுள்ளது.

இறுதிப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது. இச்சுற்றுப்போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணனி விஞ்ஞானத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரும் முன்னாள் யாழ். பல்கலைக்கழக கரம் அணியின் தலைவருமாகிய சோமாஸ்கந்தன் சுதாகர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

போட்டி அட்டவணை வருமாறு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியை எதிர்த்து கொக்குவில் கே.சீ.சீ.சீ விளையாட்டுக்கழக அணியும் ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மணி விளையாட்டுக்கழகமும் உடுவில் மான்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கே.சீ.சீ.சீ விளையாட்டுக்கழக அணியும் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மணி விளையாட்டுக்கழகமும் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து உடுவில் மான்ஸ் விளையாட்டுக்கழக அணியும் ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணியும் மோதவுள்ளது.

தொடர்ந்து அரையிறுதிப்போட்டி, இறுதிப்போட்டி, 3ஆம் இடம் ஆகிய போட்டிகளும் பரிசளிப்பும் இடம்பெறவுள்ளது. (க)

# டோனியை ஓரங்கட்டிய கம்பீர்



கொல்கத்தா அணித்தலைவராக இருக்கும் கம்பீர் தொடர்ச்சியாக இருபது-20 போட்டிகளில் அதிக முறை அணித்தலைவராக இருந்தவர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

சம்பியன்ஸ் லீக் போட்டிகளில் விளையாடி வரும் கொல்கத்தா அணியின் அணித்தலைவராக கம்பீர் இருக்கிறார். இவரது தலைமையில் கொல்கத்தா அணி தொடர்ந்து வெற்றி பெற்று வருகின்றது.

ஐ.பி.எல் தொடரில் 2 முறை கிண்ணம் வென்ற கொல்கத்தா அணி 12 முறை தொடர்ச்சியாக வெற்றி பெற்று அசத்தியுள்ளது.

இந்நிலையில் கடைசி போட்டியில் பெர்த் அணியை வீழ்த்தியதில், கம்பீர் தொடர்ச்சியாக 60 போட்டிகளில் அணித்தலைவராக அணியை வழிநடத்தியவர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

இதன் மூலம் சென்னை அணியின் அணித்தலைவராக உள்ள டோனியை (59) இவர் முந்தியுள்ளார். வில்லியம் போரட்டர்பீல்டு (அயர்லாந்து), டேரில் மிட்செல் (இங்கிலாந்து), ஷேன் வோர்ன் (அவுஸ்திரேலியா) ஆகியோர் அடுத்தடுத்த இடங்களில் உள்ளனர்.

மேலும் அதிகமுறை இருபது 20 போட்டிகளில் அணித்தலைவராக உள்ளவர்களில் டோனி முதலிடத்தில் இருக்கிறார். இவர் 182 போட்டிகளில் சென்னை மற்றும் இந்திய அணிக்காக அணித்தலைவராக இருந்துள்ளார். அடுத்த இடத்தில் கம்பீர (99 போட்டிகள்) இருக்கிறார். (க)

# காலிறுதியில் சாய்னா



ஆசிய விளையாட்டில் பட்மின்டன் போட்டியில் பெண்கள் ஒற்றையர் 2ஆவது சுற்றில் இந்தியாவின் சாய்னா நேவால் 21:7, 21:6 என்ற நேர் செட்டில் ஈரானின் சோரயாவை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.22 நிமிடங்களில் எதிராளியின் சவாலை முடிவுக்கு கொண்டு வந்த சாய்னா அடுத்து 2ஆம் நிலை வீராங்கனை சீனாவின் வாங் யுஹானை எதிர்கொள்கிறார்.

அதேசமயம் இந்தியாவின் பிவி சிந்து 22:20, 16:21, 20: 22 என்ற செட் கணக்கில் இந்தோனேசியாவின்பெலட்ரிச்சிடம் போராடி வீழ்ந்தார். இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் கொமன்வெல்த் சம்பியன் இந்தியாவின் காஷ்யப் 21:6, 21:6 என்ற செட் கணக்கில் ஆப்கானிஸ்தானில் இக்பால் அகமதுவை சுலபமாக வென்று காலிறுதிக்குதகுதி பெற்றார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பர் ஓவர்

# கேப் கோப்ராஸ் திரில் வெற்றி



பார்படோஸ் - கேப் கோப்ராஸ் அணிகளுக்கு இடையிலான பரபரப்பான போட்டியில் தென்னாபிரிக்காவின் கேப் கோப்ராஸ் அணி சுப்பர் ஓவரில் வெற்றி பெற்றது.

6-வது சம்பியன்ஸ் லீக் இருபது -20 தொடரின் 12 போட்டி மேற்கிந்தியத் தீவுகளின் பார்படோஸ் ரிரினெட்ஸ் - தென்னாபிரிக்காவின் கேப் கோப்ராஸ் அணிகளுக்கு இடையில் நேற்று மொஹாலியில் நடைபெற்றது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கோப்ராஸ் அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பார்படோஸ் அணி தனது ஆரம்ப விக்கெட்டுக்களை வெகு சீக்கிரமாக இழந்து (2.2 ஓவ. 2/7) தடுமாறிய போதிலும் அதன்பின் 3-வது விக்கெட்டுக்காக இணைந்த டில்சான் முனவீர - ஜொனதன் கார்டர் இணை அதிரடியாக ஆடி தமக்கிடையில் 75 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்து அணியின் சரிவை தடுத்து நிறுத்தியது.

இதில் முனவீர 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறிய போதிலும் ஜொனதன் கார்டர் தனியொரு வீரராக நின்று அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார்.

இறுதியில் பார்படோஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களின் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 174 ஓட்டங்களை குவித்தது.

பார்படோஸ் அணியின் துடுப்பாட்டத்தில் அதிரடியாக ஆடிய ஜொனதன் கார்டர் ஆட்டமிழக்காமல் 68 பந்துகளில் 10 பவுண்டரிகள், 5 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காமல் 111 ஓட்டங்களை எடுத்தார்.

கோப்ராஸ் அணியின் பந்துவீச்சில் லாங்வெல்ட், சைபிரண்ட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

175 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த கோப்ராஸ் அணிக்கு தொடக்க வீரர்கள் சிறந்த அடித்தளத்தை (59) அமைத்துக் கொடுத்தனர்.

எனினும் தொடர்ந்து வந்த வீரர்கள் அவர்கள் அமைத்துக் கொடுத்த அடித்தளத்தை சிறந்த முறையில் பயன்படுத்தாத போதிலும் தம் பங்குக்கு ஓட்டங்களை எடுத்தனர்.



இதனால் கோப்ராஸ் அணி தனது வெற்றியிலக்கை நெருங்கிக் கொண்டிருந்தது.

இறுதி ஓவரில் அந்த அணிக்கு 13 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

இறுதி ஓவரை எம்ரிட் வீச, அதனை எதிர் கொண்ட ஏஞ்சல்பிரேச் ஒரு ஓட்டம் எடுத்தார். 2-வது பந்தில் கெம்ப் ஒரு ஓட்டம் எடுக்க, 3-வது பந்தைச் சந்தித்த ஏஞ்சல்பிரேச் அதை அருமையாக பவுண்டரிக்கு விரட்டினார். கடைசி கடைசி 3 பந்துகளில் 7 ஓட்டங்கள் தேவைப்பட்டன. 4வது, 5வது பந்துகளில் ஏஞ்சல் பிரேச் தலா இரண்டு ஓட்டங்கள் எடுத்தார். இதனால் கடைசி பந்தில் 3 ஓட்டங்கள் தேவைப்பட்டன. அந்த பந்தை எதிர்கொண்ட ஏஞ்சல் பிரேச் அதனை லெக்திசையில் அடிக்க அந்த பந்து நேராக களத்தடுப்பாளர் கைக்குச் சென்றது. அதற்குள் இருவரும் ஒரு ஓட்டம் எடுத்து 2-வது ஓட்டத்துக்கு ஓடினர். இதன் போது பந்து விக்கெட் காப்பாளரை நோக்கி வந்தது. விக்கெட் காப்பாளர் பந்தை பிடிக்க தவறவே 2-வது ஓட்டம் முழுமையாக ஆட்டம் சமனிலையானது.

இதன்காரணமாக வெற்றியாளரை தீர்மானிக்க சுப்பர் ஓவர் கடைப்பிடிக்கப்பட்டது.

இதில் முதலில் ஆடிய கோப்ராஸ் அணி 11 ஓட்டங்களை எடுக்க, தொடர்ந்து ஆடிய பார்படோஸ் அணி 10 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது.

போட்டியின் ஆட்ட நாயகனாக சைபிரண்ட் தெரிவானார். (க)







## ரஹானேக்கு டும் டும் டும்

இந்திய கிரிக்கெட் அணியின் நடுவரிசை வீரராக உள்ள ரஹானே தனது நீண்டநாள் தோழியான ராதிகாவை மணந்தார்.

சமீபத்தில் இங்கிலாந்து தொடரில் அசத் திய ரஹானே சிறப்பான இன்னிங்ஸை விளையாடினார். இதைத் தொடர்ந்து அவரது தோழி ராதிகாவுடன், ரஹானேவுக்கு பெற்றோர்களால் நிச்சயம் செய்யப்பட்டது.

இந்நிலையில் நேற்று தனது தோழியான ராதிகாவை மணந்தார். இவரது திருமணம் வெகுவிமர்சையாக இடம்பெற்றது.

கிரிக்கெட் வீரராக இருக்கும் ரஹானே ஒரு கராத்தே வீரராக பிளாக் பெல்ட் வாங்கியவராம்.

அதாவது அவருடைய கூச்ச உணர்வை போக்க அவரது அப்பா கராத்தே வகுப்புகளுக்கு அவரை அனுப்புவாராம். (க)

## பாதுகாப்பு...

இதன்படி 2015ஆம் ஆண்டு பாதுகாப்பு செலவினங்களுக்காக 28 ஆயிரத்து502 கோடி ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனினும் கல்விக்காக 4 ஆயிரத்து 760 கோடி ரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை வரவு செலவுத்திட்டத்தின்படி செலவினங்களை ஈடுசெய்வதற்காக 181 ஆயிரத்து 200 கோடி ரூபாய்கள் கடன்களாக பெறப்படவுள்ளன.

இந்தநிலையில் 2015ஆம் ஆண்டுக்கான அரச செலவினம் ஆயிரத்து 812 கோடி ரூபாய்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் பிரதமர் டி.எம்.ஜயரத்னவினால் நேற்று இந்த முன்கூட்டிய ஒதுக்கீட்டு சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டது. (எ-11)

## வாய்மொழி...

மூட்டக்கூடிய சூழல் இலங்கையில் உருவாக்கப்படுவதாகவும் இளவரசர் சயிட் அல் ஹுசைனால் அளிக்கப்பட்ட அறிக்கை தெரிவித்துள்ளது.

அதேவேளை, ஐ.நா விசாரணையை தாம முழுமையாக நிராகரிப்பதாக ஏற்கெனவே தெரிவித்துள்ள அரசாங்கம், இந்த விசாரணைகளுக்கு தாம் எவ்வித ஒத்துழைப்பும் வழங்கமாட்டோம் எனவும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இந்த வாய்மொழி அறிக்கை தொடர்பில் உரையாற்றிய ஜெனிவாவுக்கான இலங்கையின் வதிவிட பிரதிநிதி ரவிநாத் ஆர்யசிங்க, ஐ.நா தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் முழுமையாக நிராகரிக்கிறது.

அத்துடன், இலங்கை மீதான ஐ.நாவின் விசாரணைக்கு ஒத்துழைக்கப் போவதில்லை என்பதையும் அரசாங்கம் தெளிவுபடுத்தி விட்டது.

அரசாங்கத்தின் இந்த நிலைப்பாட்டை மீளாய்வு செய்ய வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர். அவர்களுக்கு நான் மரியாதையுடன் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவெனில் குறையுள்ள அணுகுமுறையை சரி என்று காட்டவும், ஒரு தவறான முன் உதாரணத்தை உருவாக்கவும் அரசாங்கம் விரும்பவில்லை.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை அரசியல் ரீதியானது. இந்த நடவடிக்கை ஒரு நாட்டின் இறைமையையும, சுதந்திரத்தையும் பாதிக்கிறது. இது ஒரு நாட்டின் பிரச்சினைகளுக்கு உள் நாட்டின் சட்டங்கள் மற்றும் வாய்ப்புக்கள் மூலமாகவே முதலில் தீர்வு காணப்பட வேண்டும் என்ற சர்வதேச சட்டத்தின் விதி முறைகளையும் மீறுகின்றது.

அரசாங்கத்துக்கு உதவுவது போல ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழு காட்டிக் கொண்டாலும், அதனுடைய நடவடிக்கைகள் இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படுவதை தடுக்கும் ஒரு சக்தியாக இருக்கிறது என மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## எதிர்க்கட்சி...

கட்சிகள் மத்தியில் ஐக்கியத்தை ஏற்படுத்துவது குறித்து ஆராய்ந்துள்ளார். மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை எப்பாடுபட்டாவது தோற்கடிப்பதே இதன் முக்கிய நோக்கம்.

ஐக்கியதேசிய கட்சியின் யாப்பின்படி எதிர்கட்சிகளுடன் பேச்சுக்களை மேற்கொள்ளும் அதிகாரம் அதன் தலைவருக்கேயுள்ளது.

இதனடிப்படையில் ரணில் எதிர்கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்காக தனக்கு நெருக்கமான குழுவொன்றை தெரிவுசெய்துள்ளார்.

குறிப்பிட்ட குழுவினர் முதற்கட்டமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் மீது அதிருப்தியடைந்துள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக கட்சியின் முக்கிய பிரமுகர்களுடன் பேச்சுக்களை மேற்கொண்டுள்ளதாக தெரியவருகின்றது.

இந்தபேச்சுக்களின் போது எதிர்கட்சிக் கூட்டணியொன்றை உருவாக்குவது உட்பட முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

மிக முக்கியமாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறையை ஒழிப்பது, புதிய அரசியல அமைப்பை உருவாக்குவது குறித்து பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன. இது தொடர்பாக பொது வேலை திட்டமொன்றை ஆரம்பிப்பது குறித்தும் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. சோபித தேரரின் நீதியான சமூகத்திற்கான அமைப்பினால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் தொடர்பாகவும் இணக்கம் ஏற்பட்டுள்ளது.

ராஜபக்ஷ அரசாங்கத்தின் மீது அதிருப்தியடைந்துள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் முக்கிய பிரமுகர்கள் ரணிலை பொதுவேட்பாளராக ஏற்றுக்கொள்ள இணங்கியுள்ளனர்.

இதேவேளை எதிர்க்கட்சிகள் இணைவதற்கு இலகுவாக யானைக்கு பதிலாக வேறு ஒரு சின்னத்தில் போட்டியிடுவதற்கான யோசனையையும் ரணிலின் பிரதிநிதிகள் முன வைத்துள்ளனர். ஜே.வி.பி மற்றும் ஜனநாயக கட்சியுடனும் இது குறித்த பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிந்த...

அரசு தெரிவித்துள்ளது.

இதன் மூலம் உலகத் தலைவர்கள் பலரும் நமது பிரதமரை தேடி வந்து சந்திக்கும் அளவுக்கு இந்தியாவின் செல்வாக்கு அதிகரித்திருப்பது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது என்று ராமதாஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேநேரத்தில் உலகின் மிகக் கொடிய இனப்படுகொலையை நிகழ்த்திய இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்திக்க பிரதமர் நரேந்திர மோடி நேரம் ஒதுக்கியிருப்பதுதான் உலகம் முழுவதும் உள்ள தமிழர்களுக்கு அதிர்ச்சி கலந்த வருத்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இலங்கையில் கடந்த 2009-ம் ஆண்டு நடைபெற்ற போரின்போது ஒன்றரை லட்சம் அப்பாவித் தமிழர்கள் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டனர்.

இதை நிரூபிப்பதற்கான பல்வேறு ஆதாரங்கள் வெளியாகியுள்ளன.

இவற்றின் அடிப்படையிலும், உலகம் முழுவதுமுள்ள தமிழர்களின் கோரிக்கையை ஏற்றும் இலங்கை மீதான போர்க்குற்றங்கள் குறித்து ஐ.நா. மனித உரிமை ஆணையர் விசாரணைக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

ஆனால், இந்த விசாரணைக்கு ஒத்துழைப்பு அளிக்க இலங்கை ஜனாதிபதி மறுத்துவிட்டார்.

இதுகுறித்தும், இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறை அதிகரித்து வருவது குறித்தும் ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 27-வது கூட்டத்தில் புதிய ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் கவலையும், வேதனையும் தெரிவித்துள்ளார்.

இன்னொருபுறம், இலங்கைப் போரில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மறுவாழ்வும், அதிகாரமும் அளிக்க ராஜபக்ஷ மறுத்து வருகிறார்.

இந்தநிலையில் நிபந்தனையுமில்லாமல் 13-வது அரசியல் சட்டத் திருத்தத்தை முழுமையாக செயல்படுத்தவும் ஒப்புக்கொள்ளும் வரை ராஜபக்ஷவை சந்தித்துப் பேசும் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி கைவிட வேண்டும் என்று ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார். (எ-11)

## வலுக்கும்...

நிர்மாணிக்கப்பட்ட கொழும்பு துறைமுகத்திற்கு தெற்கு முனையத்திற்கு வருகை தந்தது.

இந்த நடவடிக்கையானது இந்திய பெருங்கடலில் சீனா தனது பலத்தை மேற்கொள்ள எடுத்த முதல் படியான செயற்பாடு என கருதப்படுகிறது.

இந்த கப்பல் சீனாவில் வடிவமைக்கப்பட்ட இரண்டாம் தலைமுறை நீர் மூழ்கி கப்பல் என கூறப்படுகிறது.

திசை அறியும் கருவி, வானொலி, ரேடார் எச்சரிக்கை பெறும் கட்டமைப்பு என்பன பொருத்தப்பட்ட முதல் சீன நீர்மூழ்கி கப்பல் இது என தெரியவருகிறது. அத்துடன் இதில் கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகள் உள்ளிட்ட ஆயுதங்களும் உள்ளன.

இந்த நீர்மூழ்கிக் கப்பல்கள் எதிர்வரும் ஒக்டோபர் அல்லது நவம்பர் மாதம் வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

## பர்மாவின்...

யாகவே இனங்கண்டுள்ளன.

பொது பல சேனாவின் ஞானசார தேரர் கடந்த ஜூன் மாதம் நிகழ்த்திய ஆவேசமான உரையே அளுத்கம வன்முறையை தோற்றுவித்தது போன்று, பௌத்த அடிப்படைவாதிகளுக்கு ஆதரவளிக்கும் இவர், இலங்கை மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினால் அதன் மூலம் இங்கும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் வெடிக்கலாம் என்ற அச்சம் நிலவுகின்றது.

சில மாதங்களுக்கு முன்பு மியன்மாரில் இவரைச் சந்தித்த ஞானசார தேரர் இவருடன் முஸ்லிம் எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

ஆகவே வன்முறைகளை தவிர்க்கும் பொருட்டு இவரை நாட்டிற்குள் அனுமதிக்க கூடாது என முஸ் லிம் சமூகம் சார் பாக தாம் ஜனாதிபதியை கேட்டுக் கொள்வதாக முஸ்லி கவுன்சில் எழுதிய அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)

## கிளியில்...

எனினும் வவுனியா மாவட்டத்தில் மட்டும் இந்த ஆணைக்குழுவின் விசாரணைகள் இடம்பெறவில்லை.

இந்நிலையில் இன்று தொடக்கம் 30-ம் திகதி இந்த ஆணைக்குழுவினர் தங்களது விசாரணைகளை கிளிநொச்சி மற்றும் பூநகரியில் மேற்கொள்ளவுள்ளனர்.

27, 28-ம் திகதிகளில் கிளிநொச்சியலும், 29,30 திகதிகளில் பூநகரியிலும் ஆணைக்குழுவின் விசாரணை இடம்பெறும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (எ-11)


## LATVIA நாட்டிற்கான வீசா சட்ட ஆலோசனையில் 100% வீசா வெற்றி

அண்மையில் எமது மாணவர்கள் LATVIA நாட்டிற்கான STUDENT VISA இனை பெற்று LATVIA நாட்டிற்கு சென்று கல்லூரிக்கும் எமது நிறுவனத்துக்கும் பெருமை சேர்த்து தந்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

குறிப்பு: மேற்படி LATVIA நாடானது செங்கன் நாடுகளில் ஒன்றாகும் என்பதுடன் கல்லூரி விடுமுறைக்காலங்களில் GERMAN,SWISS, FRANCE,ITALY, HOLAND, SPAIN, NORWAY ....etc ஆகியநாடுகளிற்கு சென்றுவரமுடியும்.

* UK நாட்டிற்கான VISA reject ஆன மாணவர்களும் LATVIA நாட்டிற்கு விண்ணப்பிக்க முடியும்

FEB INTAKE ற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மாணவர்களே!!! பெற்றோர்களே!!! மேற்படி வீசா தொடர்பான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள இன்றே எம்மை நாடுங்கள்

WORLD EDUCATION CONSULTANCY (WEC)
வீசா ஆலோசனை மையம் City&Guilds approved centre-UK
0779265447,0217200989 web : www.wecgroups.com
please call 9am to 5pm Gov.reg.no: TN/DS/UC/0324
No - 377, sangathanai. (சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அருகே)
(சி-8594)

## பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டத்தினருக்கு பல்வேறுபட்ட 08 பதவி வெற்றிடங்கள் உள்ளன.

- Team supervisor
- Administration
- warehouse & distribution
- பயிற்சி அளிக்கப்பட்டு நிரந்தர தொழில் வாய்ப்புண்டு.
- வயதெல்லை 18-35
- 20 பேர் மட்டும்

O/L தகைமை உள்ளதாயின் இன்றே.

தொடர்பு கொள்க:-0777981471, 0773550933, 0213203687
(சி-8605)

இது வெறும் வாய்ச் சவடால் அல்ல.
வென்று வந்த விசாக்களை
நேரில் எவரும் வந்து
ஆய்வு செய்யலாம்.

செங்கன் விசா சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, இத்தாலி, ஜேர்மனி... உட்பட 26 நாடுகள் 2 வருட விசா

படிக்கவும் உழைக்கவும் அரியவாய்ப்பு
சில நிபந்தனைகளுக்கமைவாக 100% விசா உறுதிப்பாடும்
சனி, ஞாயிறு உட்பட 7 நாள்களும் திறந்திருப்போம்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
அரசாங்க பதிவு-PV82703
முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
(சி-8604)




## துபாயில் தொழில்
### 400 டக்ஸி ஓட்டுனர் வெற்றிடங்கள்

ஐக்கிய அரபு இராச்சியத்தில் (அபுதாபியில்) இயங்கி வரும் பிரபல்யமான முன்னணி கார் டாக்சி கம்பனியில் கார் டாக்சி ஓட்டுனர்களுக்கான வேலைவாய்ப்புகள். இலங்கை அரசாங்க வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு அரியதொரு நல்ல சந்தர்ப்பம்.

தகைமைகள்

- இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்- குறைந்தது 2 வருடங்கள். (மூன்று வருடங்கள் விரும்பத்தக்கது)
- வயதெல்லை 23-47
- GCC அல்லது UAE வாகன சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருப்பவர்களுக்கு விஷேடசலுகை

அடிப்படைச்சம்பளம்
ஒருமாதம் 30,000 /= + கொமிஷன்
(130000-170000)
மாதம் ஒன்றிற்கு 200,000 /= பெற முடியும்




தேவைப்படும் ஆவணப் பத்திரங்கள்

- கடவுச்சீட்டு பிரதி (பிரதி உட்பட)
- வாகன சாரதி அனுமதி பத்திரம் (பிரதி உட்பட)
- சுயவிபரக் கோவை
- 10 Passport Size Color Photos

(சி-8595)

இடம்:-துரையப்பா விளையாட்டரங்கின் முன்பாகவுள்ள பழைய யாழ். நகர சபை வளாகம்.
காலம்:-28.09.2014 (நாளை ஞாயிற்றுக்கிழமை)
நேரம்:- காலை 8.30 மணி

உள்நாட்டு அனுமதிப்பத்திரத்தை ஐக்கிய அரபு இராச்சிய வாகனசாரதி அனுமதிப்பத்திரமாக துபாயை சென்றடைந்த பின்னர் மாற்றிக் கொள்ளலாம்.

மேலதிக சலுகைகள்

- தங்குமிடம் மற்றும் போக்குவரத்து வழங்கப்படும்
- அடிப்படை சம்பளம் 800 DHMS + கொமிஷன் (Commissions)
- இரண்டுவருட உடன்படிக்கை உத்தரவாதம்
- தொழிலாளர் சட்டதிட்டங்களுக்கு அமைவாக மருத்துவ செலவுகள் வழங்கப்படும்

வங்கிக் கடன் வசதி 118000 வரை பெற்றுத் தரப்படும்.

உடன் தொடர்புகளுக்கு
Lanka Voice (Jaffna) 077 952 7575
Lanka Voice (Mannar, Vavuniya) 076 669 7789

Secure Manpower Recruitment I.A.L 2813
No. 8 B, Vajira Road, Bambalapitiya, Colombo 04, Sri Lanka.

## தவறிவிட்டது

பருத்தித்துறை கொடிகாம வீதியில் ஸ்ரீகாந் NIC:-740923587V ஜெயதரணி NIC:-776010812V மற்றும் முக்கிய ஆவணங்கள் தவறவிடப் பட்டுவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.


தொடர்புகளுக்கு:-0779698927
(சி-8602)

## BARBEQUE (BBQ)

- Soops
- Tasty Bites every day from 4.00 Pm bring your bottle bar
- Traditional Kool (கூழ்)

Saturday, Sunday
10.00am-1.00pm
மாவடிவம்பு@YARLPARDY
இல.49,51, அம்மன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
T:P:-0777360353, 0774219247
tysunda@gmail.com
(7686)


## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் குணசேகரம் (அப்பன்)

வளலாய் மேற்கை பிறப்பிடமாகவும் இடைக்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் குணசேகரம் 2014.09.24 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் சரஸ்வதியின் மூத்தமகனும், சிவேஸ்வரியின் அன்புக் கணவனும் புவனேந்திரம், இராசசேகரம், குலசேகரம், சந்திரகாந்தம், சந்திரவதனா, சந்திரகலா, சந்திரகுமாரி (அமரர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கஜிதா, தூயவன், விதுஷன், பிரணவன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (28.09.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வளலாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

திரு.க.நந்தகுமார்
புதிய பூமி இடைக்காடு, அச்சுவேலி.
0770874074, 0770155347

தகவல்:-குடும்பத்தினர்.

(7682)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org